பாலபாரதி

VII 1925 No. 5

பால பாரதி

1925 5

N25.2.5
160207

1434

தபால் எண்—ம. ௧௬௮

Vol 4 No 5

ஓம்

# பாலபாரதி


| புத்தகம் ௨. | ஆவணி, கலியப்தம் ௫௦௨௭. | பகுதி ௫. |
|---|---|---|


ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

ஆசிரியர்:

சுத்தானந்த பாரதியார்

தமிழ்க் குருகுலம், சேரமாதேவி.

REGISTRAR 18 SEP 1925 MADRAS

"பாலபாரதி" சந்தாவிகிதம்

வருஷச் சந்தா: { உள் நாடு ரூ ௫—௦—௦.
வெளி நாடு ரூ ௬—௮—௦. }

தனிப்பிரதி வேண்டுவோர் ௧௦ அணா தபால்தலை அனுப்பவும்

"BALA BHARATI," SHERAMADEVI, S. I. R.

Vol. II. August 1925 No. 5.

# "பால பாரதி"—அட்டவணை

ஆவணி—௧௯௨௭.

—(○)—


முகப்புப் படம்—— ஜார்ஜ்ஹான்

திருக்கோரானின் தேன்மொழிகள் (ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்) ... ௨௫௭

கிதை காட்டும் பாதை* ... ... ௨௫௯

அருட்சுடரே வழிகாட்டுதி! (நியூமன்) ... ௨௬௩

யோக சாதனம் (திரு. அரவிந்தர் எழுதியதை
க. அமுதன் மொழிபெயர்த்தது) ... ௨௬௫

தேசியப்பாடசாலையின் கல்வி முறை (திரு. வ. வெ. ஸு. ஐயர்)... ௨௬௮

பெஸ்தலொஜி (திரு. வ. நடராஜன் பி. ஏ. எல் டி.) ... ௨௭௦

நீண்டாயுள் (திரு. பா. ஆதிமூர்த்தி) ... ௨௭௪

மஹரிஷி வ.வெ.ஸுப்பிரமணியம். (திரு. பா. ஆதிமூர்த்தி) ... ௨௮௨

பைந்தமிழ்ச் சோலை (ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்) ... ௨௯௦

ஸம்ராட் அசோகன் (ஸ்ரீ மஹேசகுமார சர்மா) ... ௨௯௯

எதிர்காலக் கண்ணாடி ("எதிர் நோக்கி")*

சாந்தப் பிரியன் — பலமதத்திற்கும் ஒரு கடவுள் ... ௩௦௪

நமது சிற்பச் செல்வம் ... ௩௦௫

வாஸ்து சாஸ்திரம் திரு. (பி. வி. ஜகதீசய்யர்) ... ... ௩௦௭

பாரிவள்ளல் (திரு. ச. செல்லம்) ... ௩௧௩

பத்திராபர் குறிப்புகள்* ... ...

கவியரசர் ரவீந்திர தாகூரின் போல்பூர் ஆசிரமம்— தேர்தல் திருக்கூத்து— யார் உரியவர்?— இது தான் முன்னேற்றத்திற்கு வழி—சீனக் கிளர்ச்சி— சிவத்தின் ஆவி— அமெரிக்காவின் வியாபார முதன்மை ௩௧௮

மதிப்புரைகள் ௩௨௦.


## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கம் ... | ரூ. | ௧௨—௦—௦. | |
| ½ „ ... | ரூ. | ௭—௮—௦. | |
| ¼ „ ... | ரூ. | ௪—௦—௦. | |

நீண்டகால விளம்பரத்திற்கு:-

| | | |
|---|---|---|
| ஒரு பக்கம் ... | ரூ. | ௧௦—௦—௦. |
| ½ „ ... | ரூ. | ௫—௮—௦ |
| ¼ „ ... | ரூ. | ௩—௧௨—௦ |


# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.


நாகரீகமான, ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன மிகச் சரசமாகக் கிடைக்கும்.

காசுமீரச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி, கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

**SILK PITAMBAR Co.**
**BENARES CITY**

ரோல் கோல்டு பாகெட் வாச்
அண்டு ரிஸ்டு வாச்சுகள்



இக்கெடியாரங்கள் சரியான காலத்தைக் காட்டக்கூடியதும் உயர்தசாமான்களாலும் டயல்பொன்யல்களினாலும் பார்ப்பவர்கள் ரூ. 50 மதிப்பிடக்கூடியதும். உத்திரவாதம் 4 வருஷமும் கொடுக்கப்படும்.

No. 25. பாக்கெட்வாச் பாரல்ஷேப் பொன்டயல். விலை ரூ. 5—14—0

No. 26. ஷை இனமல் டயல், ரவுண்டுஷேப். விலை ரூ. 5—0—0

No. 50. ரோல் கோல்டு ரிஸ்டு பொன், டயல் விலை ரூ. 7—0—0

No. 51. ஷை ரவுண்டு ஷேப் விலை ரூ. 6—8—0

V.P. சார்ஜ் வேறு கேட்பாரக் இனும்!


NOBLE WATCH COMPANY, P.B. 335
Mount Road MADRAS.

இனும்! இனும்!! முந்துங்கள்!!

5ரூ. மதிப்பிடக்கூடிய 220 சாமான்கள் இனும் கோல்டு பிளேட்நிப் பவுண்டன் பேனா

இந்தப் பேனாவுக்கு நம்முடைய ராஜாவாகிய ஜார்ஜ் V H. M. கிங் சக்கரவர்த்தி அவர்கள் சர்டிபிகேட்டு கொடுத்திருக்கிறார். இம்மாதம் வரையில்தான் அடியில்கண்ட விலைக்கு விற்கப்படும். இனும் சாமான்களுடன் விலை ரூ. 3—0—0. V.P. சார்ஜ் தனி அணா 0—8—0.

இனும் விபரம்:— 7கல் இமிடேஷன் மோதிரம் 1. முகம்பார்க்கும் கண்ணாடி 1. தந்தச் சீப்பு 1. ஜர்மன் மில்லர்லாக் 1. R. G. ஸேப்டிபின் 2. ஷை ரோல்டுகோல்டு கப்பட்டன் 4. கல்வைத்த இமிடேஷன் பித்தான் 4. கிளிப் 1. செண்டு புட்டி 1. வெத்திலைபாக்கு தட்டு 1. பென்ஸல் 6. பென் ஹோல்டர் 6. நிக்கல் சேப்டிப்பின் 6. பேனாக் கத்தி 1. ஜர்மன் மைமாத்திரை 144. பயாஸ் கோப் பீலிம் 40 அடங்கிய பாக்ஸ் 1. ஆக 220 சாமான்கள். F. M. S. சிலோன் சிங்கப்பூர் பினங்கு ஆர்டர்கள் முன் பணத்துடன் அனுப்பினால் தான் ஆர்டர் கவனிக்கப்படும். உடனே முந்துங்கள்! சோல் ஏஜண்டு: மிட்வெஸ்ட் ஏஜென்ஸி சவுக்கார்பேட்டை, மதராஸ்.



5

## "பாலபாரதி" புஸ்தகசாலை சேரமாதேவி.

—[*]—

| | நூல் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| க. | மகாத்மா காந்தி ... | க | 0 | 0 |
| உ. | ஆரோக்கிய வழி ... | 0 | கஉ | 0 |
| ௩. | நீதி தர்மம் ... | 0 | ௬ | 0 |
| ௪. | இந்தியாவைப் பற்றிய உண்மை ... | 0 | ௬ | 0 |
| ௫. | கிரிபாலா நாடகம் ... | 0 | ௪ | 0 |
| ௬. | அர்ச்சுன சந்நியாசி ... | 0 | கஉ | 0 |
| ௭. | வால்மீகி விஜயம் ... | க | 0 | 0 |
| ௮. | விவேகாநந்தரின் வர்த்தமான பாரதம் ... | 0 | க0 | 0 |
| ௯. | தன்னம்பிக்கை ... | 0 | ௮ | 0 |
| க0. | ரவீந்திர டாகூரின் கதைகள் ௩-ம் தொகுதி | 0 | கஉ | 0 |
| கக. | ஷை ௪-ம் தொகுதி ... | 0 | கஉ | 0 |
| கஉ. | அறநூல் * ... | 0 | ௪ | 0 |
| க௩. | ஜாரதுஷ்டிரன் ... | 0 | க | ௬ |
| க௪. | குரு கோவிந்த சிங்கன் ... | 0 | ௪ | 0 |
| க௫. | V.V.S. Aiyar's English Translation of the *Kural* 2nd Edition ... | 5 | 0 | 0 |

SOUTH INDIAN SHRINES —

Describes the chief temples in all aspects. Double Crown Quarter 638 Pages: 251 Illustrations. Rs. 6/

VAIDYANATHAN BROS.,
TRIPLICANE, MADRAS, S. E.

## "சிந்தாமணி,"

ஒரு உயர்தர செந்தமிழ் மாதப் பத்திரிகை. பல அறிஞரின் அரிய வியாசங்களுடன் கிரௌன் 1/4ல் எஉ—பக்கங்கள் கொண்டது.

பத்திராதிபர்:— சகோதரி பாலாம்பாள்

வருட சந்தா:-உள் நாடு ௩-௫. வெளி நாடு ௩-௬ மாதிரி பிரதி அணா க0(தபால் முத்திரையாக அனுப்பவும்)கிடைக்குமிடம். காரியஸ்தன், சிந்தாமணி, விவேகாச்ரமம், மைலாப்பூர், சென்னை.

## வெளி வந்துவிட்டது!

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் திரு வரலாறும், உபதேச ரத்தினமும் அடங்கிய இனிய செய்யுள் நூலான

### ☞ இராமகிருஷ்ணாமிருதம்

(ஆசிரியர்ஸ்ரீ—சுத்தானந்த பாரதியார்.)

சுவை சொட்டும் சீரிய விருத்தங்களில் பரம ஹம்ஸரின் சரித்திரமும் திட்பநுட்பம் செறிந்த அகவற்பாக்களில் பரமஹம் ஸோபதேசமும் இதில் அடங்கியுள்ளன. பரம ஹம்ஸர் விவேகானந்தர் இவ்விருவரின் படங்களும் இதில் உள்ளன. பக்தியும், பேரின்பமும் ஊட்டி வாழ்வை உயர்த்துவதற்கு இந் நூல் பெரிய சாதனமாகும்.

இதன் விலை அணா ௬.

வேண்டுவோர் ௭-அணா தபால்தலை அனுப்புவது நலம்.

## "சுதேசோதயம்"

குறைந்த சந்தா உடைய வாரப் பத்திரிகை இஃதொன்றே.


ஆரணியினின்று பிரதி வியாழன் தோறும் வெளிவருவது. உண்மைக் கருத்துகள் கொண்டது. தேசச்செய்திகள் யாவும் நிறைந்தது. யவர் கையிலும் இதைக்காணலாம். எங்கணும் பரவிப் புகழ் வாய்ந்தது. புதுவுணர்ச்சி தருவது.

வருஷச் சந்தா

உள்நாடுகளுக்கு ரூபா உ—8—0
அன்னிய நாடுகளுக்கு 4—0—0

'நிஷ்டாகாலத்தில் கண்ட அற்புதக்காட்சிகள்' என்னும் ஞான நூலை வாசிக்க வேண்டும். ஆசிரியர் இலக்கிய இலக்கணங்களில் தேர்ந்த வித்துவான். இகபரசுகத்திற்கும் ஆப்த நண்பன். ஆத்மத்யானம் அடைய இப்புத்தகமே சிறந்த மார்க்கம். வெகு சுத்தமாய் அச்சிடப்பட்டது. விலை ரூ. க. வி. பி. செலவுடன் ரூ. க-௬-0. கிடைக்குமிடம் 'சுதேசோதயம்,' ஆரணி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 19..
MADRAS



ஓம்

# பாலபாரதி

புத்தகம் உ. | ஆவணி, கலியப்தம் ௫0உஎ. | பகுதி ரு.

## திருக் கொரானின் தேன் மொழிகள்.

எல்லாம் வல்ல இறைவன் ஒருவன்
தொல்லோன், தூயன், துணைவன், பெரியோன்.
அருளொளி யானதோர் ஆண்டவன் அவனே
பொருளெலாம் படைத்த புலவனும் அவனே.

காற்றும், கனலும், கதிரும், கடலும்
போற்றுந் திறலோன், புவிக்கொரு தந்தை
முத்தொழிற் கெல்லாம் முதல்வன் அவனே
எத்தொழிற் பலனையும் ஈபவன் அவனே.

எண்ணம் அவனைப் இலகிடு நெஞ்சிற்
கண்ணுறுந் தூயர் களிப்பே பெறுவர்
தூய கடவுள் துலங்கிடும் அறிவில்
தீய தன்மைகள் தீண்டவும் படுமோ.

அவனொடும் ஒன்றல் அகத்திற் கின்பம்
அவனைப் பிரிதல் அனைத்தினுந் துன்பம்.
மாமுதல் மக்கள் வரைக்குந் தேவாரம்
உரிமை ஈந்த உயர்பொருள் நபிமுன்.

பிறர்க்கினி தாற்றல் தனக்கினி தாகும்
பிறக்குந் தூய்வினைப் பேற்றால் இன்பம்.
அத்தன் அளித்தனன் ஆவி; அதனைச்
சுத்தஞ் செய்தவன் சூழ்தனி சேர்மின்!

160704
2112-5

## பாலபாரதி

பொறுமையும் எளிமையும் பொய்யறு மறிவின்
நிறைவே தருமே நெடும்புகழ் இன்பம்.
இடம்பமுஞ் சிறுமை, இகலும் அகந்தையும்
இடும்பையும் உன்னை இருள்நர குய்க்கும்.
பெண்பொருள் விழைவுன் பெருமையைப் போக்கும்
மண்தரு மயக்கில் மையல்கொண் டலையேல்.
எவரையும் அடிமையென் றெண்ணலும் ஆக்கலும்
இவலையுந் தீவினை செய்தலுந் தவிர்க!
கொலையுங் களவுங் குடியும் பொய்யும்
விலைச்சியர் முயக்கமும் வெந்நர குய்க்கும்.
பசிக்கொரு நற்றொழில் பண்புடன் செய்தே
நசைக்கிடம் ஈயா நலவாழ் வெய்துமின்!
மெய்யாற் பொய்யினை வெல்லுமின்; நலத்தால்
வெய்ய தீமையை வீரமாய்ப் போக்குமின்!
ஆண்பெண் ணுரிமை அனைத்துஞ் சமமே
மாண்பெறு கல்வியே மாந்தர் விளக்கு.
ஒருமனை யுடனே திருவொரு வாழ்க
பிறர்மனை விழித்தல் பெரும்பிழை யாகும்.
பாட்டொடு மாதரும் ஆட்டமும் ஆண்டவன்
கோட்டத் திற்குளே கோதுறும் புகுதல்.
கல்லும் மரமும் கடவுளோ டொப்போ?
எல்லையில் ஈசனை எண்ணுக நெஞ்சில்.
தூய மனத்தால் தொழுதைம் பொழுதும்
நாயகன் றன்னையே நாளெலாம் எண்ணுக!
பிறமதத் தோர்க்குப் பிழைசெய வுன்னேல்
அறத்தை மதியினே ஆவியின் மேலாய்!
அடக்கப் புலன்களை அத்தனை எண்ணி
அடிக்கடி விரதம் அடுத்திடல் நலமே.
ஆண்டவன் மைந்தர் அனைவரு மென்றே
மாண்புள அன்புடன் மன்னுயிர் மதிமின்.
நாடும் மதமொடு வீடும் அருளே
கூடும் போற்றிடக் கோதற் றெழுமின்!
ஆண்டவன் பெரியோன்! அவனருள் பெரிதே!
வேண்டுக அமைதியே! மேவுக நலனே! (பாரதசக்தி)

சுத்தானந்த பாரதியார்.



# கீதை காட்டும் பாதை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1925
MADRAS

[o]

## எல்லாம் நீயே இறைவ!

இரண்டாவது சொல்லடுக்கில் ஒருமனப்படுத்தி, எண்ணுதல் மனிதனுக்கு எளிதில் கடவுளைக் காட்டுமென்று உரைத்தோம். எண்ண எண்ண எண்ணத் தொலையாத இறைவனின் பெருமையை உணர உணர மனம் அவனுள் ஈடுபட்டு அவன் அன்பில் கரையும் என்ற உணர்ச்சியை இனி வரும் ஐந்து அத்தியாயங்கள் தருகின்றன. "எல்லாம் வல்லவன், எண்ணில்லாத ஆவிக்கு இறைவன், எல்லாவற்றையும் படைத்தவன், உயிர்க்குயிராயிருப்பவன், அவனை என்னுள் கொண்டுள்ளேன். அவன் துணை எனக்குண்டு," என்று நெஞ்சு எண்ணி உறுதிபட்டால் நமது வாழ்வின் வாய்க்காலில் களிப்பென்னும் தேனருவி என்றும் வற்றாது ஓடும். அவனை அடைந்தவர் அனைத்தும் அடைந்தார் என்ற நம்புதல் ஏற்படுவதற்குக் கடவுளின் வல்லமையில் கருத்தைச் செலுத்தல் கட்டாயமானது. எதை யறிந்தால் அறிய வேண்டுவது வேறு இல்லையோ, பொன்றொளியாக எவன் எங்கும் நிறைந்துள்ளானோ எந்த சுதந்திர சுத்த வடிவை அறிந்தால் மனிதன் சுதந்திரமும் சுத்தமு முறுவானோ எவனுடைய ராஜ வைபவத்தில் உலகம் உயிர்த்திருக்கிறதோ, எவனுள் அனைத்தும் அடங்கியவோ, அவனை அன்பால் அடையும் வழியை இக் கட்டுரையில் விளக்குவாம். அவ் வாய்மனங்கடந்த மாசிலாப் பொருளை ஆயிரம் அன்பரில் ஒருவனே அறிவான்.

முதலில் பரம்பொருள் உலகைப் படைத்த வகையும், அதில் அவன் எவ்வாறு உள்ளான் என்பதையும் இயம்புவாம். இந்த உலக வீட்டைக் கட்டியும், கலைத்தும், இலதும், எல்லாம் வல்ல சிற்பியானவன் தனது பிரகிருதியால் அனைத்தையும் செய்கிறான். அதுவே அவன் எவிய சக்தி. அதுவே அனைத்தையும் அவன் ஆணையால் தோற்றியடக்குவது. பிரகிருதி, உயர்வு, தாழ்வென்று இருபாலாகி இறைவனுள் உள்ளது.

"பூதமைந்து, அகம்,மனம், புத்தி எட்டுங்கீழ்; தன்னறிவே என், சக்தியினுயர்வு. அனைத்தும் என்னிரு சக்தியால் ஆகும். படைத்தும், கலைத்தும், பகுத்தும், கொடுத்தும், பன்மணிக் கயிற்றைப் பார்களுக்கெல்லாம், ஆதாரமாக அமருவல் யானே. ரவியின் ஒளியும், மதியின் குளிரும், நீரின் ரசமும், நிலத்தின் மணமும், மறையின் ஓமும், மதியின் அறிவும், அனைத்தின் உயிரும், அறிவறு வித்தும், வீரர்வீரமும், விறலோர் திறனும், முக்குணஆற்றும் முதல்வனும் யானே. தாயும், தந்தையும், தாதையும், சுற்றமும், நேயனும், சாட்சியும், நித்தியன் யானே. மழையும், சூடும், மருளும், ஒளியும், குணமும், குறியும், கோதும், நலனும், புல னடக்கமும், புத்தியிற் களிப்பும், அறிவும், புகழும், ஆவனும் என்னால். சோதி புலகில் தோன்றும் உயிர்க்கெலாம், முதலும் நடுவும் முடிவும் யானே. கதிர்களில்விண்டுவும், காற்றில் மரீசியும், மீன்களுள் மதியும், விண்ணவர்க்கிறையும், மறையுட் சாமமும், மனத்திற் களிப்பும், பொறிகளுள் மனமும், பொருப்புளே மேருவும், குருக்களுள் வியாழனும், பொருணரிற் குர்னும், நீருள் கடலும் ஆறுட்

கங்கையும், ஆவுட் தேனுவும், மரத்துள் அரசும், மாக்களுள் அரியும், எழுத்துள் அகரமும், இசையுள் ஓமும், வெற்றியின் தோற்றியும் வீரமும் திருவும், காலமும், கோலமும், ஞாலமும் எல்லாம், யானே யானே அனைத்தும் யானே." என்று தன்மயமாக அனைத்திலுமுள்ளதைக் கடவுள் உரைக்கிறார். இவ் வுரைகளை உணர்ந்த நெஞ்சு விண்ணோக்கி உயருகிறது. அத்துணை பெரிய ஆண்டவனை, அறிவிலும், உயிரிலும் பெற்று விளங்கும் கோயிலன்றோ இந்த யாக்கை. அவனைப் பெற்ற மனம் என்ன அற்புதத்தைத்தான் செய்ய முடியாது. அம் மனத்துள் அவனொளி யிருக்கும்போது அதற்கு இன்னலும், தளர்வும், மாயையும் உளதோ? உயிரையே மேனியாகக் கொண்டவன் நம்முள் இருக்கையில், பன்மணிக்கயிறு போன்று அனைத்தையும் ஒன்று சேர்க்கும் ஆண்டவனிருக்கையில் மக்களுள் வேற்றுமையும் ஜாதிச் சண்டையும், மதச்சண்டையும், நிறச் சண்டையும், பொருட் சண்டையும், பூமிச்சண்டையும் ஏது! எல்லாவற்றிற்கும் படைப்புத் தந்தையான கடவுளின் சந்நிதியாகிய உலகில், இது எனது, இதற்கு அரசன் யான், இவர்கள் என் அடிமைகள், இந்தப் பூமி என்னது, அவன் மெலியவன், நான் படை யூற்ற முள்ளவன். ஆதலின் வலியவனுக்கே மண்ணுலகெல்லாம் என்று சொல்லி, ஆசையும், பொறாமையும், மமதையும் கொண்டு, பார் பறிப்பதும், படுகொலையான போர் புரிவதும், மற்றொரு நாட்டை அடிமைப் படுத்துவதும், தன்மயம் பாராட்டுவதும் பெரும் பாவமன்றோ! அவன் உரிமையான உலகையும், பொருளையும், அவன் அருளால் உதித்த மக்களனைவரும் சமமாகத் துய்த்தலே அறம். அவன் இலகும் ஆருயிர்களை வழிபட்டு வணங்கலே அவனை வணங்கல். உயிர்களிடமெல்லாம் அன்புடனும் சம நோக்குடனும் நடத்தலே அவன் அருளை அடையும் வழி. பெருமை வாய்ந்த கடவுளை நமதுள் உணர்வதே உலகிலுள்ள வேதங்களின் நோக்கம். அப்படிக் கடவுளைத் தம்முள் உணர்ந்தவரின் திருவாக்குகளே, வேதமும், புத்த தர்மமும், பைபிளும், கொரானும், அவஸ்த ஜெந்தாவும், இன்னுமுள்ள எல்லாப் புனித நூல்களும் அவையே பெரியோர் வாக்கினின்று போந்த ஈசன் திருமொழி. அதை எவ்வினத்தார் சொல்லினும் ஆசையுடன் அறிதல் அறம். இப்படியாக சமரசத்தின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து அதற்கப்பாலும் சென்று "தத்வ மஸி நீயே அது" என்று காட்டி நம்மைக் கடவுளெனும் கங்கையில் மூகந்த செம்பு நீர், நமக்கும் கங்கையின் புனிதம் உண்டு என்று உணரச் செய்து கீதை எம் மதத்திற்கும் சம்மதமான அறத்தின் மாளிகையிலகும், சமரச வெளியைக் காட்டுகிறது. பாரதரின் விரிந்த மதக் கொள்கையும், ஆருயிர் வழிபாடும், சமரச உணர்ச்சியும் இதனால் தெரிகிறது.

இப்படிப்பட்ட ஈசனை ஏன் மக்கள் தம்முள் உணரா துழலுகின்றனர்? எல்லாம் அவர்களுடைய நினைப்பின் மாயையால்தான். "குணத்துதி மாயை குவலயத்தோரை மறைப்பதாலென்றன் மாண்மை யறியார். முக்காலத்தையும் முன்னறி என்னை மக்கள் அறியார் மாயையினாலே. விருப்பு வெறுப்பாம் இருகரைக் கிடையே இருக்கும் மனது என்றனை மறக்கும். பணிநலம் பேணிப் பாபமுதறி, என்னையே எண்ணுவோர்க் கின்பம் யானே" என்று கண்ணன் ஞானவிக்ஞான யோகத்திற் கூறித் தன்னை யடையும் வழியை அக்ஷரப்பிரம யோகத்தில் காட்டுகிறார்,

"ஒல்கா துயர்ந்த ஒளியாம் பிரமம், ஒவ்வொன்றுள்ளும் அத்யாத்மாய் ஒளிரும். உயிர்களின் மூலமும் உதவியும் வினையே. அழியும் தோற்றமே ஆதிபூதம், அழியாச் சோதி ஆதிதெய்வதம். யாகத் தேவனே ஆதியங்கியம். எக்காலத்தும் என்றனை மறவாது எவ்வினைக்காக இவ்வுடலுற்றதோ அவ்வினையாற்றின் அமர வாழ்வெய்தும். அலையா மனதின், அடங்கிய நினைவு, ஆண்டவனிடமே அமர்ந்தால் அயனும். துணைவன், அறிவோன், தொல்லோன், வல்லோன், மாயை கடந்த மங்களச் சோதியன், வேதமும், தவமும் விளக்க முயலும், ஆதி நாயகன் ஆனவன்றன்னை, ஒரு மனத்தோடே உன்னுவோருக்குப் பிறப்பும் இறப்பும் பிணியும் இலதே. புலன்களடக்கி, புந்தியும் மனமுங் குவிய வழிநிலை கொண்டொருப்பட்டு, உறுதியாய் முயல்வோர் உயர்நிலை யடைவர். எங்கும் நிறைந்தே இலகுபர் பொருளுடன். ஒன்றுபட் டெண்ணலே யோக நிலையாம். யோகிக் கரிய உயர்நிலை யில்லை" என்று, ஒன்றுபட் டெண்ணும் யோகமே நம்முள்ளிருக்கும் பொன்று வொளியை 'அறியும் வழி எனக் கீதை காட்டுகிறது. நாம் விடும் மூச்சும் அவனுடையதே. மூச்சில் உயிராயிருப்பவனும் அவனே. நமது அறிவில் உள்ளவனும் அவனே. ஆதலின் நமது மூச்சை, அறிவின் இடமான கபாலத்திலும், அவன் ஒளி விளங்கும் புருவ மத்தியிலும் வைத்தலே பிராணயாமம். நமது மூச்சு அவனைச் சரணமடைந்து, எண்ணி ஒருமனப்பட்டு அவனுள் லயித்திருப்பதே யோகம். ஈசன் கொடுத்த வினையில் ஈடுபட் டுழைப்பதும் சிறந்த யோகம். இந்த யோக நிலையால்தான் அளவற்ற மகிழ்வு பிறக்கிறது. நமது ஜீவன் ஈசனையடையாது தடுக்கும் பந்தங்களை யெல்லாம் இந்த யோகத்தாலேயே வெல்லலாம். இதனாலேயே பதிக்கும் பசுவுக்கும் இடையிலுள்ள பாசம் விலகும்.



வாழ்வாகிய சலனப் படக் காட்சியில் மற்ற எல்லாப் பொருள்கள் மீதும் புலன்கள் செல்லாது இருட்டாயிருந்து நாம் காணவேண்டிய பொருளில் மட்டும் ஒளி பட்டால்தான், காட்சி நன்கு விளங்கும். அது போல மற்றெல்லாவற்றையும் மறந்து நம் வினையைச் செய்யும்போதும், நமது மனத்துள் இலகும் ஒளியிலேயே கருத்து நாடினால்தான் அவ் வொளியை நாம் அறியலாம். சலனப்படக்காட்சிக்கு வந்தவன் அதிலேயே தன் புலனைச் செலுத்தாது, சுற்றியிருக்கும் சம்பந்தமில்லாத பொருள்களில் மனதைச் செலுத்தினால் அவன் நேரங்கள் தான் நினைத்ததை முடிக்காமல் வீணாகின்றன. ஆதலின் கடவுளுடன் ஒன்றுபடவேண்டிய மனதைப் புலன் போனவிடங்களெல்லாம் செலுத்தின்வாழ்வு வீணாகிப் பிறவிக்கு வித்தாகிறது. தேகத்தைக் கடந்த ஆத்மா இருக்கிறது, அது கடவுள் மயம் என்று அறிவோன் போகத்தைக் கடந்த ஆத்மானந்தம் ஒன்று இருப்பதை உணர்வான். "புலன்களைக் கடந்த பொன்று வொளியாய் இலகுவன் எல்லா உயிர்களிடத்தும், எல்லா உலகும் என்னுள் அடக்கம். யானோ ஒன்றிலும் அடங்கா இறைவன். ஆகாயத்துள் அடங்கும் காற்று போல், அனைத்தும் என்னுள் அடங்கியே வாழ்வன. கற்பம் ஊழியில் காட்டியும் மறைத்தும்என் அற்புத சக்தி ஆளும் அனைத்தையும்" என்னும் கடவுளின் உயர் சிறப்பை ராஜ யோகமும், விபூதி யோகமும் கூறுகின்றன. கூறி அறிய ஒண்ணாதோ கடவுளின் தன்மை! அவனுள் எல்லாம் அடங்கிய தன்மையை யாவரே விண்டுரைத்தலாகும்? அருச்சுனன் கடவுளின் உரைகளால் மனவுறுதி பூண்டான்; ஆயினும், எல்லாம் அடங்க உளானை ஞானக்கண்ணால் கண்டாலன்றோ உறுதி திண்மைபெறும். ஆதலின் "உன்றன் பெருமையை உரைகளால் உணர்ந்தேன். உயர் பொருளே யிவ்வுலகெலாந் தங்குமுன் ஓங்கிய வடிவை, உள்ளுறக் காணத் தக்கவன் யானெனில் தன்னருள் புரிந்துன் அற்புத வடிவை யான் அறிந்திடக் காட்டாய்" என்றான். இசைந்தான் இறைவன்.

உடனே விண்ணில் ஆயிரம் சூரியர்கள் உதித்தது போல், அண்டங்கள் அனைத்தையும் அடக்கி

இன்னும் அகன்று உயர்ந்த அற்புத விஸ்வரூபத்தைப் பார்த்தன் காணும்படி செய்தான். மனம் பேரின்பக் கடலாட, வாய் அவ் வின்பத்திற்கு உரை காணாது தழுதழுக்க, அருச்சுனன் கண்ணனின் கடவுட் பெரும் வடிவைக் கண்டு சரணடைந்து; துதிப்பதை விஸ்வரூபதரிசன அத்தியாயம் விரிக்கிறது.

கடவுளின் பேருருவுள் விஜயன் எத்தனை உலகங்களையும் பொருள்களையும்; உயிர்களையும் கண்டான்! "தேவரும் மக்களும் செப்பொணா உயிர்களும், மூவரும் முனிவரும்; முத்தரும் சித்தரும், ஆயிரஞ் சுடர்கள், ஆயிரம் விழிகளை,ஆயிரமவயவம், ஆயுதச்சாலம், கோடி வீரர் குவலயமனைத்தும், உன்னுள்ளடக்கிய உயர் பெரும் பொருளே! அடி இடை முடிவறும் அகண்ட வெளியே! அண்ட மடங்கும் அழிவறுஞ்சோதியே! ஆன்ற முதலே அறத்தின் காவல, மண்ணும் விண்ணும் உன்னுரு வளர்ந்தே அப்பாலோங்கி அகலம் பெருகி உன்னுள் எல்லாம் உறைவதைக் காண்குனன்! ஆறெலாம்மூரியுள்பாய் வதே யனைய, விட்டிற் பூச்சி போல்வீரர் உன்னுள், பொருவதும் வீழ்வதும் புதுமையே கண்டேன்! பாரத வீரரும் பாரதப் போரும், பாண்டவர் கௌரவர் படைக்கலமனைத்தும், பார்த்தனன் உன்னுள் பயத்தொடு தொழுதேன். எங்கும் பரவி எல்லா வுலகையும் விழுங்கி விளங்கும் வெருவரி யுருவே! அளப்பருவிரிவும் துளக்கருந் தோற்றமாம். ஊழிக்கனல் போல்,ஒளிவிடுவாயுள் எல்லை காணா இரும்பெருங் காட்சிகள் கண்டு நடுங்கிக் கைதொழுதுன்னைச் சரணடைந்தனன் தாரணித் தந்தையே! அரக்கர் அழியுனர்! அமரர் வணங்குனர்! ஆதி தேவனே! அனைத்தும் அறியும், எல்லாம் வல்லோய்! எங்கணும் நிறைவே! பெரிதினும் பெரியோய்! அரிதினும் அரியோய்! இணையறும் ஈச எல்லாம் நீயே! அறிந்தேன் இனியான் அகலேன் உன்னை. கண்ணனாகக் களிப்புறு தோழனாய், என்றேற்றவு செய்த என்னிறைவ! உரையில் ஊணில் உறக்கந் தன்னிலும், உன்றன் பெருமை யுணரா தெளியேன் புரிந்த பிழையெலாம் பொறுத்தருள் அச்சுத! கண்டனன் உன்னைக் களிப்பின் எல்லையை! விண்டனன் செய்வன் நீ ஏவிய வினையை. அகண்டமாய் விரிந்தாய் அச்ச மெய்தினன்! கண்கள் கூசிடக் கதிர் விடுஞ் சோதி, ஊழியும் கற்பமும் உரைந்திடும் ஒன்றே, உன்னுரு சுருக்கிமுன்போல் கண்ணனாய் இன்னிய நேசனாய் இருந்திடவருளாய்! உன்னுருக்கண்டேன், உன்னையும் மனநகையும் கண்டிடக் கெஞ்சிக் கழல் பணிந்தேனே" என்று விஜயன் வியந்து, வியர்த்து, அஞ்சிப் புகழ்ந்து, கண்கள் களிப்பால் நீருகுக்க விம்மித் தொழுதான்.

விசுவரூபன் எப்போதும்போன்ற கண்ணனானான். தனது உண்மையைக் கண்ணனுக்குத் தவிர்க்கிறான்:-காசினி பொறுக்கும் காலம்போனே, மாசினைப் போக்க மனிதவுருவொடு இவ்வுலகெய்தினன். இகலவர் பொனறிய, வெவ்விய காட்சி விளங்கிய தென்னில். முன்னே என்னுள் முடிந்த பகைவரை தோற்றக் கருவியாய்ழித்திடத் துணிவாய்! அஞ்சா மமர்புரி. அருஞ்வாய் வெற்றி! வேதமும், பூசையும், வேள்வியும், கேள்வியும, தானமும், தவமும் சற்றுமே காணா என்பெரும் வடிவனைச் சிச்சையாற் காட்டினன்! தேவரும் காணாத் திவ்விய வடிவிது! ஒருமன அன்பால், உன்னித் தொழுது, ஏவியவினையை என்னை நினைந்தியற்றி, என்னை அடைவதே இதயம்கருத, பற்றினை முற்றும் பற்றறத் தொழித்து, ஒன்றையும் பகைக்காதொழுகும் உத்தமன், என்னுட் கலந்தே இன்புறுவானே." கண்ணன் இவை சொல்லலும் அருச்சுனன் ஒருமன அன்புடன் ஈசனை வழிபடும் வகையை வினவுகிறான். "அன்பும் உறுதியும் அமையப்பெற்று உன்னைத் தொழுவோன், உருவறும் நித்திய உயர்பொருள் தன்னை வழிபடுவோருள் யாவரே நல்ல யோகி ஆவர்" என்பதே அர்ச்சுனன் கேள்வி. அதற்குக் கண்ணபிரான் பக்தியோகத்தையே விடையாக அளிக்கிறார்.

"எந்த வுருவில் வழிபட்டாலும் அந்த வழிபாடேற்பவன் யானே! செயலும் உணவும்,செய்தவம்ஈகையும், எனக்கே அர்ப்பணித் தின்புடன் செய்வாய். தேவனை நம்பித் தியாகம் புரிவாய்! ஒருவனாய் அனைத்துளும் ஒளிருவன் யானே. தீயரும் வழிபடின் செய்யவராவர். இழிகுல மக்களும் என்னையடைந்தால் விழுமிய நிலையை மேன்மையாய் அடைவர். என்னால் நிரப்பிடு இதய முழுதும்; என்னை வழிபட்டிடு அனைத்தும், என்னை வணங்கி என்னையே அடைவாய்' என்று முன்னாலேயே கண்ணன் விரித்துக்கூறியதை பக்தி யோகத்தில் சிறப்பாகக் கூறுகிறார். "உருவாய்த் தொழினும் அருவாய்த்தொழினும் வருவது என்னிடம் வழி பாடுள்ளோர். அருவப்த் தொழுதல் அரிதினும் அரிது. என்னையே உயர்வாம், இலக்காய் எண்ணுவோர் இறப்பும் பிறப்பும் இலராவரே. என்னிலே உன்றன் எண்ணம் செலுத்தாய். ஒருமனப்படுவது,ஒல்லுவதிலையேல், மெல்லவே பயிற்சியால் வெல்லுவாய் மனத்தை. அதுவும் முடிந்திலேல் அருட்பணியாற்றுவாய். பலத்தினையெனக்கே பண்புடன் ஈவாய். அறிவே உயர்வு; அதனினும் உயர்வே அறிவுடன் எண்ணல்; அதனினும் ஆற்றும் கரும பலத்தைக் கருத்துடன் ஈதல். தன்னயப் பலனைத் தவிர்த்திடுந் துறவால் உன்னியசாந்தம் துன்னிடுந் தன்னால்" என்றதனால் கண்ணன் தன்னயங் கருதாத அருட்பணியையே ஈடிலாத் தவமென்றும் அன்பிற் சிறந்ததென்றும் சொல்லுகிறார். கானே எவற்றுளும் தங்கி இருப்பதால் மக்களாகிய நடமாடுங்கோயில்களுக்கு ஆருயிர்ப் பணி செய்வதை ஆண்டவன் பணியேயென்று பின்னால் கூறுகின்றார். தன்னை வழிபடும் அன்பர் இகலற்று உயிர்க்கெலாம் இன்புறு நேயராய், அருளே பூண்டு அகந்தை விலக்கி, நலமும் தீதும் சமமாய்ப் பொறுத்து, என்றும் களிப்பும் உறுதியும் எய்தி, தன்னை யடக்கி என்னுள் அறிவை நிலைப்பித் தன்புசெய் நின்மலர் என்னவர். உலகம் அஞ்சாதும்,உலகையஞ்சாதும் போகமும் பயமும் பொறாமை பதற்றமும், அடிமைத் தனமும் அற்றே பற்றிலா, துறவும், ஊக்கமும் துன்னிய தூயன், அடியேனுக்கே அருமையாம் அன்பன். நேசமும் பகையும் நிந்தையும் புகழும், சூடும் குளிரும், துன்பமும் இன்பமும், ஒன்றெனப்பற்றை உதறியே மோனியாய், எதிலும் களித்தே, இல்லுந் துறந்தே, உறுதியா மன்பன் உத்தமன் எனக்கே.சிரத்தையோடென்னைச் சிந்தையிற் கொண்டே அழிவறும்அறத்தை யாற்றிடு மன்பன் எனக்கே யரிய இன்பனோ யாவன்" என்று தன் அன்பரின் இலக்கணங்களை நன்கு விளக்குகிறான் கண்ணன். எல்லாரையும் சகோதரரென்றெண்ணி அன்பு செலுத்துவோர், அவனுக்கு அரிய பக்தர். பலனைக் கருதாது தொண்டுசெய்வோர் அவனைப்பெரிதும் பூசை செய்வோர். மமதையின்றி, நான் உயர்வு, அவன் தாழ்வென்றெண்ணாது அனைவரிடத்தும் பணிவுடன் எளிமை பூண்டு வாழ்பவர் அவன் அன்பர். தூயவாழ்வும், செயலும் நினைவும் உள்ளவர் அவன்விருப்பிற்குரியவர்! கோயிலில்மட்டும் அவனில்லை. உலகம் முழுவதையும் அவன் கோயிலாகவும், அனைத்தையும் அவன் மயமாகவும், நற்பணியையே யோகமாகவும் செய்பவர் அவனை அடையும் அன்பர்! எத்தனை விதத்தில் அவன் அன்பை ஏற்றுக் கொள்ளுகிறான். அனைத்திலும் பலன் கருதாத அருட்பணியையே சிறப்பென ஏற்றுக்கொள்ளுகிறான். அந்த அருட்பணியை ஆருயிர்கள் உய்யும் பொருட்டு ஆற்றவே பிறந்தோம். நம் வினையையே யோகமெனச்செய்து அவனிடம் மனத்தை ஊன்றி

அவனே எல்லாம்வல்லவ னென்றறிந்து, நம்முள் அவனிருப்பதை யுணர்ந்து, அன்பும் அறமும் தூய்மையுமேய்தி மனித வாழ்வைத் தேவவாழ் வாகச் செய்வோமாக!

> சுடர், கால் கடல் புவியைத் தோற்றி நமையாளும்
> கடவுட் கீந் தன்னைக் கனி.
> உள்ளே இலகும் உயர்ந்தோர் சோதியினை
> உள்ள உற வீந்தே யுணர்.

> வைப்பணைரும் போன்ற பரும உடலுயிரை
> மெய்க் கடவுள் மெய்த் தொண்டிற் பெய்.
> தேவென் றுலகினையே தேர்ந்து தனைமறந்த
> தூய் வினை யாற்றல் அறவு.

என்பதே இக் கட்டுரையின் சாரம்.

இத்துடன் கீதை எழுமுதல் பன்னிரண்டாம் அத்தியாயம் முடிய உள்ள உண்மைகளின் சாரம் முடிகிறது. மற்ற அத்தியாயங்களை அடுத்த முறை ஆராய்வோம். (சு. பா.)

## அருட்சுடரே வழி காட்டுதி!

—[o]—

அருட்சுடரே வழிகாட்டுதி! சூழ்ந்து நிற்குமிப் பேரிருளில் எனைக் கைபிடித்து நடத்துவாய்! இவ் விரவிலும் இருட்டிலும் வீட்டை விட்டு வழிதப்பி தொலைதூரம் வந்தெய்திய வெனக்கு உனையன்றித் துணைகாணேன்! எனை நடத்துவ துன்பாங்கான்! நீ எனையெங்கழைத்துச் செல்வாயென நான் முன் னறிய விரும்புகிலேன்; அவ்வப்பொழுது எடுத்தடி வைக்க இடங்காட்டிற் போதும்.

என்றும் நான் இவ்வாறு பணிந்து நின்னுத வியை நாடினேனில்லை. இதுகாறும் ஸ்வயமாசார்ய புருஷனாய், நானாகவே பின்பற்றி, என் கண்க ளுக்கு முற்றிலும் தெள்ளிதென விளங்கியுள்ள மார்க்கத்தில் மட்டுமே நடப்பேனெனப் பெருமை கொண்டிடேன்; இப்பொழுதோ நீ கைகொடுத்தா லன்றி யடியெடுக்கமுடியாது. நான் பல்லோருக் கும் பகட்டான வழியில் நிற்கவும் நடக்கவு மாசை கொண்டதுண்டு. எங்கு சேர்ப்பிக்குமோவெனும் பயமொருபுற மிருப்பினும், என் புத்திக்கெட்டிய வழியே மேலெனச் செருக்குற்றிருந்தேன். சென்ற அக்காலங்களை நீ யுள்ளத்திலுன்னாதே! அக்காலத்தே யெனை யருட் கொண்டாண்ட நீ இன்றெனைக் கைவிடாயெனு முறுதி யெனக் குண்டு. ஆறு மலை காடு மேடெலாந் தாண்டி இருள் நீங்கி விடிந்ததும், நான் குழவிப்பருவ முதற் கண்டுகளித்து நடுவிற்சின்னாள் மறந்திட்ட நின் அன்பர் திருக்கூட்டச் சேவையை யெனக்கருள் வாய்! (நியூமன் குருபீடம்)

*

15

## யோக சாதனம்

(உத்தரயோகி அரவிந்தகோஷ் எழுதியதை ஸ்ரீ க. அமுதன் மொழிபெயர்த்தது.)

அடுத்தது பிராணன்; மனதிற்கும் சித்தத்திற்கும் அடியில் சூட்சும தேகத்தில் பிராணன் தன் முக்கிய இருப்பிடத்தைக் கொண்டுள்ளது. ஸ்தூல தேகத்தி லுள்ள உந்திக்கும், மேற் சொல்லிய சூட்சும தேகத்தி லுள்ள பிராணனின் மூல இருப்பிடத்திற்கும் இணைப்பு உண்டு. ஸூக்ஷ்ம பிராணனுக்கும் ஸ்தூல பிராண னுக்கும் உள்ள வேற்றுமையை நான் இங்கு விவரித்து விளக்கிக் காட்டுவதாக இருக்கிறேன். யோகநூல்களில் சொல்லியுள்ளபடி, சூட்சும பிராணனானது சூட்சும தேகத்தின் நரம்புக் கட்டுகளில் இயங்குகிறது. ஸ்தூல பிராணனானது ஸ்தூல சரீரத்தின் நரம்புக்கட்டுகளினி டையும் உள்ளுமாக இயங்குகிறது. இரண்டும் மிகவும் நெருங்கி இணைக்கப் பட்டவை; ஒன்றன் இயக்கம் மற் றொன்றைத் தாக்கியே இயங்கும். மானவிக மனிதனை யும் ஜடமனிதனையும் இணைத்துப் பிடிப்பது பிராணனே. யோக சாஸ்திரத்தையும் ஐரோப்பிய பௌதிக சாஸ்திரத்தையும் ஒக்க இசையச் செய்ய முயலுபவர்கள் ஸ்தூலதேகத்தில் யோகநாடிகளையும் சக்ரங்களையும் தேடிப் பார்க்க முயல்கிறார்கள். இவ் வகைப் பிழைபினின்றும் உங்களைத் தப்புவிப்பதற்காக நான் இப்பொழுதே எச்சரிக்கையிடுகிறேன். யோக நாடிகளையும் சக்ரங்களையும் ஸ்தூலதேகத்தில் கண்டு பிடிக்க முயலுவதானது முடியாத விஷயம். ஸ்தூல நரம்புக்கட்டமைப்பில் காணப்படும் சில கேந்திரங் களும், சூட்சும சக்கரங்களும் ஒன்றை ஒன்று ஒற்று நிற்பதினாலேயே தான் ஹடயோகம் செய்ய சாத்திய மாகிறது. ஆனால் சூட்சும சக்ரங்கள் மேற்சொல்லிய ஸ்தூலகேந்திரங்கள் ஆகமாட்டா. ஐரோப்பியர் களுக்கு அவர்களுடைய சொந்த இலாக்காவில் நல்ல ஞானமும சக்தியும் ஏற்பட்டுள்ளன; அதைப்பெற நாம் தயங்க வேண்டுவதில்லை. ஆனால் நம்முடைய உயர்தர ஞானத்தை அவர்களுடைய சக்திக்கு உட்படும்படி செய்வது நன்றன்று—செய்யவுங் கூடாது; அவ்வண் ணம் செய்வதினால் பெருங் குழப்பம் உண்டாகும். நம் பேரறிவை நாம் வளரச் செய்தபிறகு அவர்களு டைய சாஸ்திரங்களைக் கற்பதினால், அவர்களுடைய அவைகளுக்கேற்ற இடத்தையும் மதிப்பையும் உடனே பெறும்.

நான் இங்கு முக்கியமாக சூட்சும பிராணனைப் பற் றியே சொல்லப் போகிறேன், ஸ்தூல பிராணன் அன் னமய கோசத்தைச் சேர்ந்தது — அந்தக்கரணத்தைச் சேர்ந்த தென்று முற்றிலும் சொல்வதற்கில்லை. அன்ன மயகோசத்தைப் பற்றி விவரிக்கும்பொழுது ஸ்தூல பிராணனைப் பற்றி விவரிப்பதாக இருக்கிறேன். இச்சை களுக்கிருப்பிடம் ஸூக்ஷ்மபிராணன்; இதை சுத்தஞ் செய்வதே யோகியினுடைய வெகு முக்கிய காரியம். இச்சைகள் நீங்காதவரை எதையும் நீடிக்குமாறு செய் ததாகச் சொல்லமுடியாது. இச்சைகள் நீங்கிவிட்டால் வித்தி நிச்சயம். ஆனது பற்றியே கீதையில் "இச் சையை நீக்கு" என்று சொல்லியிருக்கிறது. ஞானம் உண்டான பிறகும், மனதையும் ஆவேசங்களையும் உறு தியினால் அமைதியாக்கக் கற்ற பிறகுமே தான், இச்சை கள் தொலையும்—இல்லாவிடில் இச்சைகள் நம்மைவிட்டு முற்றிலும் அகலாது. அவைகளை நீ ஸம்யமத்தினால் தூரத்தலாம்; அல்லது நிக்ரஹத்தி னால் அடக்கி வைக்கலாம்; ஆனால் அவைகள் கடைசி யில் திரும்பி வந்தே தீரும். "ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ கிம் கரிஷ்யதி" பிராணிகள் தங்கள் இயற்கை யைப் பின்பற்றுகின்றன; அடக்கிவைப்பதினால் பய னென்ன? பலாத்காரம் தற்சமய சாந்தியையும் பயனை யுமே தரும்; பலாத்காரமாய் அடக்கி அமுக்கி வைக்கப் பட்ட இச்சைகள் (சமயம் வாய்த்த காலத்து) முன்னை விட உக்கிரமாயும் இரைந்து கொண்டும் பிரஸன்னமா கும். மனிதனிடத்திருந்து துரத்தப்படும் பேயானது தன்னைவிட கெட்டபின்னும் ஏழு பேய்களுடன் அவனி டமே திரும்புகிறது என்று கிறிஸ்து நாதர் சொல்லிய உவமைக்கதையின் தாத்பரியம் இதுவேயாகும். பரிசுத் தமாக்கப் படாத ஆவேசம் கதறிக் கதறி இச்சைப்படு

மென்பதும் அமைதியைப் பெறாத மனது திரும்பி வரும் இச்சைக்கு இருப்பிடமென்பதும், ஒளியுறு அறிவில் சந்தர்ப்பம் நேர்ந்த காலத்து முளைத் தெழ இச்சையின் வித்து உளதென்பதும் இயற்கையின்தன்மை அந்தக்கரணம் முற்றிலும் சுத்தியாலல்லது, உனக்கு ஒரு புதிய இதயமும் புதிய மனதும் உண்டானாலல்லது இச்சைகளின் கட்டினின்று விடுபடல் இயலாத செயல்; அதுவரை அவைகள் திரும்பத்திரும்ப வரும் அல்லதுபோகாது தங்கி வாழும்.

தெள்ளிய அறிவு தூய இதயத்துடன் துணைப்பட்டு வன்மையுற்ற உறுதியின் இயக்கத்தை ஒளியுறச் செய்யும் பொழுது இச்சைகள் அவைகளின் பிறப்பிடமாகிய சூட்சுமப் பிராணஸ்தலத்தில் வீழ்த்தப்பட்டு தாக்கப்பட்டால் அவைகள் அடியோடு அழிந்து விடும். உனக்கு விசுத்த புத்தி இருந்தால் தான் உன்னால் மேற்சொல்லிய பலகரணங்களின் ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் உள்ள வேற்றுமை வேறுபாடுகளை அறியவும் மனதின் ஒவ்வொரு இயக்கத்திற்கும் உற்பத்தி ஸ்தானம் எது என்பதைக் கண்டு பிடிக்கவும் கூடுமாயிருக்கும்; அப்பொழுது இச்சைகளை பிராணனில் உதிப்பவை எனக்கண்டு அவைகளை அவ்விடத்தொதுக்கி, மனதையும் இதயத்தையும் அவைகளின் தாக்குதல்களினின்று காக்கவும் கூடுமாயிருக்கும். இச்சைகள் சித்தத்தையும் புத்தியையும் ஆட்கொள்ளும்பொழுது ஆவேகங்கள் விகாரத்தையும் ஞானம் விபரீதமான மாறுபாடுகளையும் அடைந்து, அதனால் வன்மையுற்ற உறுதியை தங்கள் கைவசமாக்கிக்கொண்டு விடுகின்றன; அக இயக்கமும் புறச் செயல்களும் மேற் சொல்லிய மாற்றங்களை யொப்ப மாறுபாடுகளை அடைகின்றன—அதாவது இச்சைகள் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ளுகின்றன. மனித வர்க்கத்தில் காணப்படும் உயர்ந்தோரிடத்து அவைகள் தர்மங்களெனவும், ஆதர்சங்களெனவும் அல்லது நியாயமான ஆவேகங்களெனவும் கோலங்கொள்ளும் பொழுது ஏராளமான வன்மைப் பெருக்கத்தை அடைகின்றன.

மேலும் இச்சைகளனைத்தும் — நல்லவைகளெனப் படுகிற இச்சைகள், கெட்டவைகளெனப் படுகிற இச்சைகள் முதலியவைகளனைத்தும் —விலக்கப்படவேண்டியவைகளேயாகும். "நல்ல இச்சைகளை மட்டிலும் வைத்துக்கொண்டு, கெட்ட இச்சைகளை துறந்திவிடு" என்று சிலர் சொல்லுவார்கள். இம் மாதிரியான வெளிப் பகட்டாகக் காணப்படும் புத்தி மதிக்கு செவி கொடாதே. கெட்ட இச்சைகளை நல்ல இச்சைகளால் துறந்திவிடு; உடனே இந்த நல்ல இச்சைகளையும் முமுக்ஷுத்வ மெனப்படுகிற விடுதலையினாலுண்டாகும் ஈஸ்வரப்ராப்தியிலுள்ள ஒரே இச்சையினால் துறந்திவிடவேண்டும். கடைசியாக இந்த ஒரு இச்சையையும் துறந்துவிட்டு ஈஸ்வரனிடத்து ஒரே வழியாக, நிஷ்காம நிஷ்ப்ருகனாகி, அடைக்கலம் புகுந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் வெளியேக வழியற்ற துர்மார்க்கச் சுழலில் சிக்கிக் கொள்ளுவாய். உன்னிடம் ஒரு சிறிதளவேனும் இச்சை யிருக்குமாகில்—இச்சை என்பது அவ்வளவு பொல்லாத துரோகி—அது உன்னைக் கடைசியாக எதிரிகளிடம் காட்டிக் கொடுத்து விடும். "அசுத்த ஆத்மா தான் குடியிருந்தவனிடம் திரும்பி வந்த பொழுது, அவனுடைய அகத்தை பளபள வென்று அலங்கரிக்கப் பட்டிருக்கக் கண்டது; அதாவது கெட்ட எண்ணங்களால் சிங்காரிக்கப் பட்டிருந்தது; அசுத்த ஆத்மா வந்து புகுந்த உடனே அம் மனிதனுடைய நிலையை முன்னிருந்ததைவிட கெட்டதாக ஆக்கிவிட்டது". என்பது உண்மையை நன்கு விளக்கும் ஒரு உவமைக் கதை. ஆகவே, நல்லது, கெட்டது, நடுத்தரமானது எனப்படுகிற சகல இச்சைகளையும் போக்கிவிடு. புண்யம் பாபம் என்கிற இரண்டிற்கும் அப்பால் சென்று அதீதனாய் விடு. எவ்வகைக் கட்டிற்கும்—கட்டு பொன்கட்டா யிருந்த போதிலுஞ் சரியே—இணங்காதே. பரமேஸ்வரனைத் தவிர மற்றவனையும்—உன் கப்பத்திற்குரிய தேவர்களாயினுஞ் சரியே—உனக்கு வழி காட்டி அல்லது தலைவனாக ஏற்காதே.

இச்சையில் மூன்று அம்சங்கள் உள; பற்று அல்லது ஆஸக்தி, ஆசை அல்லது காமனம், விருப்ப வெறுப்பு அல்லது இராகத்வேஷம். முதலாவது பற்றை அகற்ற வேண்டும். "எனக்கு இது வேண்டும்; அது இல்லாது எனக்கு ஒன்றும் நடவாது." என்று சொல்லப்படுகிற பொருள்களின் மீதுள்ள பற்றை உறுதியினாலும் சுத்திகரிக்கப்பட்ட அந்தக் கரணத்தினாலும் உதறித்தள்ளு.



அதை நீ அடிக்கடி மறுத்த போதிலும் அது உன்னைத் திரும்பத் திரும்ப வந்து அண்டும். ஆவேகங்கள் சாந்தியானபொழுது ஆஸக்தி தானே மடிந்துவிடுமாயினும் சிறிது காலம் ஒவென்று கோபித்திரைந்து ஆவேகங்களைச் சலிக்கும்படி செய்து பார்க்கும். பொறுமையாக, விடாது உறுதியைப் பிரயோகஞ் செய்; தோல்வியைக் கண்டு தளராதே; இச்சை மிகப் பொல்லாத வன்து; அட்டையைப் போல் ஒட்டிக்கொள்ளும் குணமுடைத்து இன்னும் வேண்டும்,இன்னும் வேண்டும் என்று கத்தும் பெரிய அட்டையின் மகளே, இச்சை என்பது. இவனுடைய கூக்குரலை பலாத்காரமாக அடக்காதே; அதை பயனியாது இருந்துவிடு; கூக்குரலிடும் ஆசாமியை ஒழிப்பதற்காக உறுதிகொள். ஆஸக்தியின் வலி குறையக் குறைய, காமனத்தின் சக்தி முக்காலே மூணு வீசத்திற்குக் குறைந்துவிடும்; இதை நீ பிறகு எளிதில் உன்னை விட்டகற்றிவிடலாம். காமனம் நீங்கிய பிறகும், பின்னுஞ் சிறிது காலம் வழக்கதோஷத்தை முன்னிட்டு சிலவற்றின் மீது நைப்பாசை உண்டாகும்; ஆனால் இப்பொழுது காமனம் இதயத்தினின்றாவது அல்லது புத்தியினின்றாவது உண்டாகாது—ஆசை கேவலம் பிராணனினின்றே உதிக்கும். ஆஸக்தி மட்டிலும் நம்மை விட்டு நீங்கி விடுமாகில்,நாம் இச்சைகளை மறுத்த போதிலும் பின்னும் மறுத்ததின் பயனாக ஆராத் துயர் அல்லது விடாது வேண்டுமென்ற அவா உண்டாகாது. சிறிது காலம் அகத்தில் மட்டிலும் அமைதி இராது. காமனம் போய்விடினுங்கூட ராகம் அல்லது விருப்பம் தொந்திரை கொடுத்து வரும். விருப்பம் அகத்தில் குடியிருக்கும் வரை வெறுப்பு அல்லது த்வேஷம் வந்தே தீரும். காமனம் அல்லது ஆசை தொலைந்துவிட்டபடியால், நீ எப்பொருளையும் வேண்டி வேண்டி விரும்பமாட்டாய்; ஆனால் சில கைக்கெட்டும் பொழுது உனக்குப் பிரியமாக இராது; மற்றுஞ்சில உன்னிடத்தில் மகிழ்ச்சியை விளைவிக்கும். உன்னிடம் ஏற்கனவே உள்ளவைகளிடத்து நீ வெறுப்புக்கொள்ள மாட்டாய்; அவைகளிடத்து நீ பற்றும் வைக்க மாட்டாய். நீ "நடக்கிறபடி நடக்கட்டும்" என்று சொல்லி வரும் விளைவுகளை ஏற்ற போதிலும் துன்பத்தின் வருகை உனக்குப்பிடிக்காது; இன்பத்தின் போக்கை உன் நெஞ்சம் பொறுக்காது. ஆகவே இராகத்வேஷத்தினின்று விடுபட்டு, பரிபூரண ஸமத்வத்தை உன்னிடத்து நீ ஏற்படுத்திக்கொள்.

உனதிடத்து பூரண ஸமதை ஏற்படுமாயின் நீ மூழுப் பேரமைதி என்று சொல்லப்படும் சுத்த சாந்தியில் அமர்வாய், அல்லது சுத்த போகத்தை அநுபவிப்பாய். சாந்தி என்பது எதிர்மறை (negative) ஆநந்தமாகும். நிர்குண பிரம்ஹனில் நிலைத்தவர்கள் சாந்தியானந்தத்தைப் பெறுவார்கள். சுத்த போகம் என்பது அஸ்தி பட்ச (எதிர்மறை அல்லது நாஸ்தி பட்சத்திற்கெதிரான) ஆனந்தம். த்ரிகுணாதீத அனந்த பிரம்ஹனில் நிலைத்தவர்கள் சுத்த போகத்தாலுண்டாகும் ஆனந்தத்தைப் பெறுவார்கள். நீ இரண்டையும் அடையலாம்; இரண்டையும் அடைவதே உத்தமமானது. பரிபூரண சுத்த சாந்தியில் வேரூன்றி எழுந்த சுத்த போகத்தையே ஈஸ்வரன் உலகத்தில் அநுபவிக்கிறார். அநேகர் காமமற்ற போகம் என்பதை என்னதென்றுகூட அறியார்கள்! காமமற்ற போகம் முடியாத செயல் என்பது மூடக் கருத்து; எண்ணிறந்தவர்கள் நிஷ்காம போகத்தை முடியாதென்று சகஜமாய் நினைப்பதிலேயே அந் நினைப்பின் மூடத்தனத்திற்கு குறைவு ஏற்பட்டுவிடாது. இவ்வித நினைப்பு அக்ஞானத்தினால் உண்டாகின்றது; இது அக்ஞானத்தின் பிரதான பாகமாகும். இச்சை நம்மை விட்டொழியாதவரை நமக்கு உண்மையான போக நுகர்ச்சி உண்டாகாது. இச்சையை திருப்தி செய்த பிறகும் நமக்குள் ஒருவித சஞ்சலம், நிச்சயமில்லாமை, முதலிய காணப்படும்; சுத்த போகத்தின் பயனாக அமைதி, கலக்கமின்மை, வெற்றியுணர்ச்சி, முடிவற்ற திருப்தி, தெவிட்டாமை, வைராக்கியமின்மை, என்றுமாக நீடிக்கத்தக்க இன்பம் முதலியன ஏற்படும்: இதை ஹர்ஷமென்றாவது அல்லது ஸுகமென்றாவது சொல்ல முடியாது—இதுவே ஆனந்த மெனப்படுவது; இது அமிர்தம் அதாவது தெய்வத் தன்மை நிறைந்த சாகாமை; அதாவது ஈஸ்வர இயலுடன் ஒன்றுபடக் கலக்கல்—ஐக்கியபடல், இதனால் அதற்கு காமம் கிடையாதென்பது தெளிவு; காமத்திற்குப் பதிலாக சுத்த லிப்ஸை உண்டாகும். சுத்த லிப்ஸை என்பது பகவான் தருவதையெல்லாம் பெற்று அநுபவிக்குங்கிறன் இராஜஸிக மனிதனுக்கு மிக்க வேதனையை யுண்டுபண்

ணக்கூடிய துயர், நோய், வெட்கம் முதலிய சகலமும் சுத்த விப்லையுள்ளவனுக்கு ஆனந்தமாகத் திரும்பிவிடும். நரகத்தில் தள்ளப்பட்ட போதிலும், அவனுக்கு அது நரகமாகத் தோன்றாது—அங்கு ஸ்வர்க்கத்தில் இருப்பதுபோல அவன் உணர்வான். பக்தனைப் போல் "இது என் காதலனிடமிருந்து பெறப்பட்டது" என்று மட்டிலும் சொல்வதோடு நில்லாது "இதுவே காதலன்; இது ஆனந்தம் பிரஹ்மன்: இது சாந்தம், சிவம், சுபம், ஸ்வதந்திரம்" என்று ஞானியைப்போலும் அவன் உணர்ந்து சொல்ல வல்லான்.

இவ் வித சுத்தியை எவ்வாறு செய்து முடிப்பது என்னும் முறையை நான் இங்கு இன்னொரு முறை திரும்பச் சொல்ல வேண்டியதில்லை—நான் இதை ஏற்கனவே போதுமானவரை கோடிக் காட்டியிருக்கிறேன். தாந்திரிகஸாதனமுறை கடைசிவரையில் ஒரே விதமானது—சக்தியின் மீது பொறுப்பு; அதாவது நம் ஆதாரத்தினுள் யோகஸாதனம் முடியும்வரை அகர்த்தனாக நிற்கும் புருஷனுடைய எவ்வித சேஷ்டையுமின்றி இயங்கும் தவஸ்ரீயின் மீது பொறுப்பை போட்டுவிடல். புருஷன் அகர்த்தனாக இருப்பதனால் அவனுடைய ஈஸ்வரத்வத்திற்கு ஒரு சிறிதும் பழுது வராது. ஆக்ஞையிடுவதும், அநுமதிதருவதும் புருஷனாகிய ஈஸ்வரனின் பொறுப்பு. தான் இழந்து விட்ட அரசின் அரிமணையையும், தன்னை எதிர்த்து அடங்காது ஒழுகி வரும் நெறிமுறை தவறிய குடிகளின் மீதுள்ள ஆதிக்கியத்தையும் சிறிது சிறிதாக ஜீவனாகிய புருஷேச்வரன் மறுபடி பெறுகவேண்டும்.

# தேசிய பாடசாலையின் கல்வி முறை

—[o]—

(திரு வ. வே. சு. ஐயர்)

கல்வி என்பது ஒருவிதமானது அன்று. ஆகையால் எவ்விதமான கல்வியைப் பயிற்ற விரும்புகிறோம் என்பதைப் பொறுத்திருக்கின்றன நாம் கையாட வேண்டிய முறைகள். ஆனால் படிக்கப் போகும் மாணவர் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு கைத்தொழில் நன்றாகக் கற்றுத்தர வேண்டும் என்பதை நாம் இங்கு வற்புறுத்துவோம். நவீன நாகரிகத்தின் முன்னணியில் நிற்கும் அமெரிக்கர் இந்த விஷயத்தில் வெகு கவனமாக இருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் தாம் இந்த ஏற்பாட்டை முதல் முதல் ஆரம்பித்தவர்கள் என்று சொல்லலாம். நவீன நாகரிகத்தை நாம் பல அம்சங்களில் பலமாகக் கண்டித்த போதிலும், இந்த ஒரு விஷயத்தில் அதன் வழியைப் பெரிதும் ஆதரிக்கிறோம். ஏனெனி வொரு தலைமுறையிலும் ஆயிரத்தில் தொ ரத்துத் தொண்ணூற்றைந்து பேர் உழை ஜீவிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். ளுக்கு ஏறத்தாழ, பிறர் எவரையும் நாடாம கையாலேயே தொழில் செய்து சம்பா கூடிய வழி ஒன்று கற்பித்துத் தந்துவிட் அன்னார், அடிமைத்தனத்தில் விழாமல் சு புருஷர்களாவே இருப்பார்கள். இப்பொ உத்தியோக சாலைகளில் வேலை பார்க்கும் ருக்குத் தனியாக ஊதியம் சம்பாதித்துத் கூடிய தொழில் ஒன்று தெரிந்திருந்தால், களுடைய எசமானர்கள் நிஷ்காரணமாய்ச் லும் கடுஞ் சொற்களையும், செய்யும் அவம



களையும் சகித்துக்கொண்டு ஆடுகளைப் போல இருக்கவே மாட்டார்கள், மான மிழந்து வாழாமை தான் இனிது என்று, அவமதிக்கிற எசமானர்களிடத்தில் அரை க்ஷணம்கூட நில்லாமல், தங்களுக்குத் தெரிந்த தொழிலை நடத்திச் சம்பாதித்துக் கொள்ளலாம், என்று வெளியில் வந்து விடுவார்கள். இவர்கள் வெளி வருவதால் இவர்களும் சுதந்திரிகளாய்ப் போவதுடன், இவர்களுடைய எசமானர்களும் குமாஸ்தாக்களை மரியாதையாக நடத்தவேண்டும் என்று கற்றுக்கொண்டு விடுவார்கள். நம் நாட்டு மனிதர் எல்லோரும் கடுஞ் சொற்களையும் அவமானங்களையும் உடனுக்குடனே எதிர்க்காமலிருந்து மௌனியாய்ப் போகாமல் நிர்ப்பயமாய் நின்று தம் மானத்தைக் காப்பவராகவே ஆவர். ஆகவே சம்பாதித்துப் பிழைக்க வேண்டியிருப்பவர் கைத்தொழில் ஒன்று சிறு வயதில் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம் என்று ஏற்படும். ஆனால் செல்வவந்தர்களின் மக்கட்குக்கூட ஒரு கைத்தொழில் தெரிந்திருப்பதில் அநேக நன்மைகள் உண்டு. முதலில் இன்றைக்குச் செல்வவந்தர்களாயிருப்பவர்கள் எப்பொழுதும் அதே நிலைமையில் இருப்பார்கள் என்ற நிச்சயமில்லையாதலால், அவர்கள் மக்களுக்கும் ஒரு காலத்தில் கைத்தொழிற் பழக்கம் அவசியமாயிருக்கலாம். தவிர, தொழிலின் தன்மை அநுபவத்தில் தெரிந்திருக்கிறவர்கள் தொழிலாளிகளை ஒரு பக்கம் அன்போடு நடத்துவார்கள், மற்றொரு பக்கத்தில் அவர்களால் ஏமாற்றப்படமாட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, கைத்தொழில் செய்வது அறிவுக்கே ஒரு தனிப் பயிற்சியும் தருகிறது என்று போதனா சாஸ்திர ஆராய்ச்சிக்காரர் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகையால் எல்லா விஷயங்களையும் உத்தேசித்து, நமது கல்விச்சாலைகளில், தச்சு, கொல்லுத் தொழில், ஜமக்காளம் நெய்தல், மண் பதுமைகள் செய்தல் முதலிய தொழில்களில் அவரவர்கள் தகப்பன்மார் விரும்பும் ஒன்றை மாணவருக்குத் தினம் ஒருமணிநேரமாவது கற்பித்துத்தருவது அவசியமாகஇருக்கும்.

கைத்தொழிலைப்பற்றி ஏன் இத்துணையும் பேசினோம் என்றால், நம் நாட்டில் கைத்தொழிலையும், கல்வியையும் சேர்க்கும் வழக்கம் இப்பொழுது சில தலைமுறைகளாகப் போய்விட்டதால் ஜனங்கள் இந்த அபிப்பிராயத்தைச் சொன்னமாத்திரத்திலேயே ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றும், அதைப் பைத்தியமான எண்ணம் என்று மதித்துவிடுவார்கள் என்றுமேதான். ஆனால் 'சங்கை அறுத்துண்டு வாழ்வோம், அரனே, நின்போல இரந்துண்டு வாழோம் இனி,' என்று சொன்ன மகா வித்துவானான நக்கீரரும் 'இழை நக்கி நூல் நிரடும் ஏழை' என்று சொல்லிக்கொண்ட திருவள்ளுவரும், காளமேகப் புலவரும் இன்னும் பலரும் கையினால் தொழில் செய்வது கற்ற மேதாவிகளுக்கு அகௌரவமன்றென நம்தமிழ்நாட்டிலேயேகாட்டியிருக்கிறார்கள் என்பதை நேயருக்கு நினைவுறுத்த விரும்புகிறோம்.

இலக்கியக் கல்வி மாத்திரம் கல்வியன்று; வேறு பலவும் கல்வியே என்று நாம் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லி வருவதால், இலக்கியக் கல்வியை நாம் இகழுகின்றோம் என்று ஒருவரும் நினைக்க வேண்டாம். மிகவும் ஏழைப்பட்ட குழந்தைகள் முதற்கொண்டு எல்லாக் குழந்தைகளும் இலக்கியக் கல்வியும் கற்க வேண்டும் என்பதே எமது அபிப்பிராயம். ஆனால் இக் கல்வியானது சுயபாஷையைத்தான் மிக அதிகமாகக் கவனித்ததாயிருக்கவேண்டும் என்று சொல்லுவோம். தமிழ் நாட்டு அறிஞர்களுக்குத் தமிழில் இரண்டு எழுத்து சேர்த்துத் தவறின்றி எழுதத் தெரியாதபடி செய்து விட்டிருக்கிற தற்போதைய கல்வி முறையை நாம் மிகவும் வெறுக்கிறோம். மாணவர்க்குத் தமிழ் நூல்களைப் படித்துப் பொருள் எளிதில் உணரவும் தமிழில் தெளிவுற

எழுதவும் பேசவும் பயிலுவிப்பதே நமது முறையாகும். தமிழ்ப் பாஷையின் போக்குகளை அறிந்து கொள்வதோடு, கணக்கு, தேச சரித்திரங்கள், பூகோள வர்ணனை, சாமானிய பௌதிக சாஸ்திரம் முதலிய வற்றைத் தமிழ் மூலமாகவே ஒரு மட்டுக்குப் படித்த பிறகேதான் மாணவர் ஆங்கில பாஷையைப் படிக்கத் துவக்கவேண்டும் என்பது நமது அபிப்பிராயம். சாதாரணமாய் நாம் சொல்லிய முறையில் தமிழில் கல்வி கற்ற பிள்ளைகள் பன்னிரண்டு வயதில் ஆங்கிலத்தைப் படிக்கத் துவக்கினால் இரண்டு மூன்று வருஷங்களுக்குள், அந்தப் பாஷையிலும் உண்மையான தேர்ச்சி பெற்றுவிடுவார்கள். இங்கிலீஷ் கற்க வேண்டியதன் அவசியம் என்னவென்றால், தொழில் வியாபாரங்களுக்காகட்டும், நவீன சாஸ்திர பரிசிலனைக்காகட்டும், வெளி நாட்டு இலக்கியங்களை ஆராய்வதற்காகட்டும், வெளி நாடுகளுக்குச் சென்று தொழில்கள் சிற்பம் முதலியன கற்று வருவதற்காகட்டும், அந்தப் பாஷையைப் போல அத்தனை உபயோகமுள்ள பாஷை வேறொன்றுமில்லை, என்பதே. இவ்விதம் பொதுக் கல்வி கற்பித்த பிறகு, மேலே அவரவர்களுடைய அறிவின் போக்குக் கேற்றபடி, மாணவர்களைப் பேரிலக்கியம், கணிதம், சாஸ்திரங்கள், தர்சனங்கள், சிற்பம் முதலியவற்றுள் ஒன்றில் பாரங்கதராகும்படி செய்ய முயலவேண்டும். இவ்வாறு செய்தால்தான் மாணவர் அறிவைப் பொறுத்த மட்டில் தெளிந்தவர்களாவார்கள். அவர்களைக் குணவான்களாக்குகிறதும் கல்வியின் பிரதான அம்சங்களில் ஒன்று. (தேச பக்தன்)

# பெஸ்தலொஜி

(திரு. வ. நடராஜன் பி. எ. எல். டி.)

மேற்கு நாடுகளில் கல்வித் துறையில் உழைத்துப் பெரும்புகழ் பெற்றவர்களில் மூவர் முக்கியமானவர். அவர்கள் ரூஸோ, ஸ்பென்சர், பெஸ்தலொஜி. முதல் இருவரும் கல்வி முறைகளைப்பற்றி பல நூல்கள் இயற்றினரேயன்றி, பெஸ்தலொஜியைப்போல கல்வித் தொழிலிலேயே உழைத்துப்பாடுபட்டவர் அல்லர். தற்காலம் பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் அனுஷ்டிக்கும் போதனா முறைகள் பெரும்பாலும் பெஸ்தலொஜி தன் உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் உலகத்தினருக்கு விளக்கிக் காட்டியவையாம், அவர் காலத்திற்குப் பிறகுதான் இவ் வித பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணம் ஐரோப்பியதேசங்களில்உண்டானது. ஏழை எளியவர் முதலிய சகல ஜனங்களுக்கும் கல்வி கிட்டும்படி செய்யவேண்டுமென்று முதல் முதல் அவர் தான் வழிகாட்டினார். மேலும் சிறு பிள்ளைகளுக்குப் போதிக்கும் வகையில் அவர் காட்டிய சீர்திருத்தம் வியக்கத்தக்கது.

நமது நாட்டிலும் நம் மக்களுக்குச் சிறந்த கல்வி போதிப்பது பெற்றோர்களின் முக்கிய கடமையென நாமும் கருதுகிறோம். முற்காலங்களைப் போல ஒரு ஆசானிடம் பிள்ளைகளைவிட்டு விட்டுப் பெற்றோர்கள் யாதொரு கவலையுமின்றி இக் காலங்களில் இருக்கமுடியாது. ஜனப்பெருக்கம் அதிகரிப்பதால் சகல ஜனங்களும் கல்வி அமுதம் பருகவேண்டுமாயின் ஏராளமான பாலபாடசாலைகள் ஏற்படவேண்டும். இவ் விதம் பல



நூறு பிள்ளைகளை ஒருமிக்கக் கூட்டி ஓரிடத்தில் இருத்திப் பாடம் போதிப்பதற்குப் பல உபாத்தியாயர்கள் போதனா முறைகளைப் பயின்றிருக்கவேண்டும். பெஸ்தலொஜி தன் ஆயுட்காலத்தில் தான் பாடுபட்டதற்குக் கிடைத்த பெரும்பலனைப் பார்த்து ஆனந்திக்கும்படியான பாக்கியம் பெறாவிடினும் அவருக்குப் பிற்காலம் பல உபாத்தியாயர்கள் அவர் காட்டிய வழியைப் பின்பற்றி கல்வியபிவிருத்தி செய்து வருகின்றனர்.

முதல் முதலாக இவ்வித பொதுவான பாடசாலை ஏற்படுத்தும் எண்ணங்கொண்டவர் அவரே. எவ்வித துன்பங்கள் நேரிட்டபோதும் தான்கொண்ட எண்ணத்தை விடாமல் அனுபவத்தில் நடத்திக் காட்டித் தனக்குப் பிற்காலம் கல்வி என்னும் ஒளி உலகமுழுதும் பரவும்படி செய்த அவர் சரித்திரத்தைப்பற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொருவனும் தன் ஜீவிய காலத்திற்குள் யதாமொரு நோக்கத்தைப்பற்றி அதை நிறைவேற்றிக் கொண்டு ஆனந்தமாக இருக்கவேண்டுமென்று ஆசைப்படுவது மனித சுபாவம். சிலர் கேவலம் சுயநலமான செல்வம் சேகரிப்பதும் உத்தியோக பதவி பெறுவதும் கருதிப் பாடுபடுவர். ஜனசமூகத்திற்காகவே உழைத்துத் தன் உயிரையும் மதியாமல் அவதிப்பட்டவர்கள் வெகு சிலரே உளர். கோவில் குளம் முதலியன எவ்விதம் பொதுசொத்து எனக் கருதி ஜனங்கள் அனுபவிக்கிறார்களோ அது போலவே பாடசாலைகளும் சகலஜனங்களுக்கும் பொதுவாக ஒரு நிதிபோல இருக்கவேண்டுமென்று பெஸ்தலொஜி ஆசைப்பட்டார். இந்த ஆசையைப் பூர்த்திசெய்து கொள்ளும் பொருட்டுத் தன் ஆஸ்தியெல்லாம் செலவிட்டுத் தன் தேகசுகத்தையும் இழந்து தரித்திரத்தில் உழன்று தன் ஆயுட்காலம் முழுதும் கஷ்டப்பட்டார். அவர் ஆயுட்காலத்தில் ஜனங்கள் அவரை மதித்து உதவி செய்யாமலிருந்தும், அவர் பால பாடசாலையை எவ்வளவு நேசித்திருந்தார் என்பதும் அவர் எழுதியுள்ளதிலிருந்து தெரியவரும்:—"நான் இறந்த பிறகு என் சடலத்தை என் அன்பான பள்ளிக்கூடத்துச் சுவற்றோரமாக வெளியே புதைக்கும்படி வேண்டுகிறேன். என் பெயரை மாத்திரம் காட்டும் ஒரு கல் நட்டு வைத்தால் போதும். பல வருஷங்கள் மழை ஜலம் சொட்டு சொட்டாக விழுந்து என்பெயர் எழுத்துக்கள் பாதி அழிந்தபோன பிறகு ஒருவேளை ஜனங்கள் என்னைப்பற்றி நியாயமாகமதிக்கலாம்." அவர் காலத்தில் ஜனங்கள் அவரை கௌரவிக்காவிடினும் அவர் இறந்த பிறகு அவர் பெயரை மறவாமல் பல ஞாபகப் பொருள்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். படங்கள், சிலைகள், அவர் பெயரால் புத்தகசாலைகள், பாடசாலைகள், கண்காட்சிச் சாலைகள் இவ்விதமாகப் பல ஊர்களில் இருக்கின்றன. இவற்றையெல்லாம்விட மேன்மையான ஞாபகம் என்னவெனில் அவர் காட்டிய நல்வழியைப்பற்றிப் பல பாடசாலைகளும், அவைகளில் மேலான அவரது நோக்கத்தை யறிந்து அதில் மூழ்கிய உபாத்தியாயர்கள் பலர் உழைத்துப் பாடுபடுவதுமாம்.

ஸ்விட்சர்லாந்தில் சூரிச் பட்டணத்தில் பெஸ்தலொஜி வளர்ந்தார். அவர் வாலிபப் பருவத்தில் அவ் ஊரில் புகழ் பெற்ற பல பண்டிதர்களும் ஞானிகளும் இருந்தனர். மேலும் அச் சமயம்தான் சுயேச்சை என்னும் பெரும் புயல் ஐரோப்பா முழுதும் வீச ஆரம்பித்தது. பழயகால சம்பிரதாயத்தாலும் மூடக் கட்டுப்பாடுகளினாலும் ஏற்பட்ட விலங்குகளை உதறி மனிதன் மனது சுயேச்சையாகத் திரியும்படி செய்யவேண்டும் என்று வித்வான்கள் கதறினார்கள். அதன் பயனாக வாலிபர்கள் பலர்கூடி அநேக இடங்களில் ராஜ்ய முறைகளையும் கட்டுப்பாடுகளையும் கண்டித்து அவைகளை ஒழித்துக் குடியரசு ஏற்படுத்த வேண்டுமென்று கிளர்ந்தனர். ஒரு சமயம் பெஸ்தலொஜியும் இக்கூட்டத்தில் சேர்ந்திருந்தபடியால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இவ்வித சகவாசத்தில் பழகிய பெஸ்தலொஜிக்குக்கல்வியிலும் குடியரசு போன்ற சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பேரவா உண்டானது. ஏழைகளையும் கஷ்டப்படுபவர்களையும் காப்பாற்றும் நிமித்தம் அவர் எப்போதும் தயாராக முன் வந்தார். வாலிபகாலம் அவர் அனுபவித்த கஷ்டங்களினால் இவ்விதம் பெருங்கருணையும் பச்சாத்தாபமும் இவருக்கு ஏற்பட்டது. தனது ஆறுவது வயதில் தகப்பனை இழந்து விட்டதால், பெஸ்தலொஜியின் குணங்கள் அமைவதற்கு அவர் தாயார் தான் மூலகாரணம். உலகத்தில் பேரறிவாளரும் மகா

வீரர்களும் பொதுவாகத் தத்தம் மாதாக்களால் பயிற்றப்பட்டு நற்குணங்கள் பெற்றவராவர்.

பெஸ்தலொஜி முதலில் வைதிகத் தொழில் செய்வதற்கு ஏற்றவாறு கிறிஸ்துவப் புரோகிதருக்குள்ள படிப்பைக் கற்றுக்கொண்டார். ஆனால் அத் தொழிலைவிட ஜனங்களுக்கு க்ஷேமம் ஏற்படுவதற்கேற்ற சாதனம் கல்வியே என அறிந்தார். உலகத்து ஜனங்கள் பிணி, மூப்பு, சாக்காடு என்ற தீரா வியாதிகளைப்பெற்றுத்தவிப்பதைக்கண்ட சித்தார்த்தர் போலவே பெஸ்தலொஜியும் ஏழைக் குடியானவர்கள் படும் அவதியைப் பார்த்து வருந்தினார். ஆகா! ராஜாங்க மிருந்தென்ன? அழகிய அரண்மனைகளும் மாட மாளிகைகளும் இருந்தென்ன? பிரபுக்கள் தங்கச் சரிகைஆடைகள்அணிந்து அழகியபுரவிகளின் மீது சவாரி செய்து வேட்டையாடி என்ன? பாவம் இவ்வளவு ஜனங்கள் படும் வருத்தத்தை நீக்க வகையறியாமற் போனார்களே!" என்று பலவாறாக அவர் யோசனை செய்வார்.

அவரது உ௯-ம் வயதில் அவருக்கு ஒரு மகன் பிறக்க, அது முதல் அவர் வாஸ்தவமாக உபாத்திமைத் தொழில் பூண்டனர். ஜனங்களின் க்ஷேம விருத்தியின்பொருட்டு கல்வி முறைகளைச் சீர்திருத்த வேண்டுமென்று பெஸ்தலொஜி தன் உ௦-ம் வயதிலிருந்தே பிரசங்கம் செய்தும் பல பத்திரிகைகளுக்கு எழுதியும் இருக்க, இப்போது தனக்கு ஒரு பிள்ளை பிறந்தபிறகுதான் அச் சீர்திருத்தம் எவ்விதம் செய்யலாம் எனத் தானே ஆரம்பித்தார். கொடுங்கோன் மன்னனைப்போன்று அதிகாரம் செய்து பயமுறுத்திப் பிள்ளையை வளர்ப்பதா, அல்லது பிள்ளையை அதன் இஷ்டப்படி விட்டுப் பழக்குவதா என்று வெகு யோசனை செய்தார். கடைசியில் அவர் தன் பிள்ளையின் கல்வி நிமித்தம் பட்ட அனுபவ ஞானத்தைத்தான் பிற்பாடு கல்விச் சாலைகளில் உபயோகித்தார். இந்தப் பாடத்தை இந்த விதம்தான் போதிக்க வேண்டும், பிள்ளைகளிடம் இந்த விதம் நடந்துகொள்ள வேண்டும் என்று ஒருவித கட்டுப்பாடான எண்ணத்துடன் அவர் உபாத்திமைத் தொழிலை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி யிருக்குமாயின், அவர்பெயர் இவ்வளவு வியாபகமாயிராது. சமயோசிதமாகப் பிள்ளைகளின் மனோபாவத்திற்கும் இயற்கைச்சுபாவத்திற்கும் ஏற்றவாறு போதிக்கும் விஷயத்தைச் சரிப்படுத்திக்கொள்வதே உபாத்தியாயரின் சாமர்த்தியம். பெஸ்தலொஜி இந்த மகா-ஞானத்தைத்தான் எடுத்துக் காட்டினார். அவர் அனுபவத்தில் அறிந்த முக்கிய விஷயங்கள் சில உள—அவசரப்படாமல் இருப்பது; கண் பார்த்ததைக் கை செய்யும்; கண் பார்த்தால் மனது நன்றாய் அறியும்; இயற்கைப்படி நடப்பதால் சுலபமாக ஞயம் கிடைக்கும்; வார்த்தைகளைவிடக் காரியங்களில் அதிக கருத்தாயிருப்பது; ஆயிரங்காலத்துப் பயிராகிய பிள்ளையினுடைய வளர்ந்துவரும் தன்மதிப்பும் சுயேச்சையறிவும் நோகாமல் நடப்பது. இந்த உண்மையான விஷயங்கள் நமக்குப் புதியவை யல்ல. ஆனால் சுமார் நூறு வருஷங்களுக்கு முன் அவர் காலத்தில் இவ்விதம் பாடசாலைகளில் பிள்ளைகளுக்குப் பாடம் போதிக்க வேண்டுமென்றால் ஒருவரும் ஒப்புக் கொள்ளவில்லை. பல நூறு வருஷங்களாக அதட்டி, மிரட்டி, பிரம்பால் அடித்துப் பாடம் ஒப்புவிக்கும்படி செய்து வந்த உபாத்தியாயர்களுக்கு பிரம்பு இல்லாவிடில் ஒரு கை இழந்தது போலேயாகும்.

இப்போது நமது தேசத்தில் இன்னும்சிலர் தற்காலக் கல்வி முறையின் போக்கை யறியாமல் வீணே வசைமொழி சொல்கின்றனர். பிள்ளைகளைப் பயத்தில் கொண்டுவருவதே சிறந்தது என்று வாதிப்பர் ஒரு சாரார்; பிள்ளைகளை அன்பினால் கவர்ந்து நன்மை தீமையை அவர்களே பகுத்தறியும்படி பழக்குவிப்பது தான் சிறந்தது என்று வாதிப்பர் இன்னொருசாரார். சில இடங்களில் பெற்றோர்கள் பாடசாலைக்கு வந்து, தம் மக்கள் பயமே இல்லாமல் வளருவதால் படிப்பு வருவதில்லை என்றும், பயம் ஏற்படும்படி அதட்டி அடிக்க வேண்டுமென்றும் புகார் சொல்லுகிறார்கள். ஐயோ! இந்தப்பயம் என்னும்நோய் நமது ஜனங்களைப் பிடித்து வருத்தும்வரையில் க்ஷேமம் ஏற்படாது. மேனாட்டுக் குழந்தைகள் எவ்வளவு சந்தோஷமாகவும் சுயேச்சையாகவும் வளர்ந்து வருகிறார்கள். பால பாடசாலைகளைப் பார்க்கும் பொருட்டு வந்த ஒரு அமெரிக்க மாது நமது இந்தியக் குழந்தைகள், ஐரோப்பிய அமெரிக்கக் குழந்தைகளைவிடப் பொதுவாக யுக்தியும் புத்தியும் பெற்றிருந்தாலும், அவர்கள் ஏதோ வியாதியினால் வருந்துவது போல உடல் குன்றி மனம் சலித்து சந்தோஷ மில்லாமல் வளருகிறார்கள் என்று அபிப்பிராயப்பட்டார்.! ஆம்! இந்தப் பயம் என்னும் வியாதி பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்குத் தலைமுறை தலைமுறையாக வந்துள்ளது. என்ன வாழ்க்கை வேண்டியிருக்கிறது, என்ற சலிப்பு சிறுபிள்ளையின் ரத்தத்தில் ஊறும்படி செய்துவிட்டனரே!

"குழந்தையின் சந்தோஷத்தைக் கெடுப்பது பாவம். குழந்தைகள் சந்தோஷமாகக் குதிக்கட்டும், ஓடிவிளையாடட்டும், நன்றாகச்சிரிக்கட்டும்" என்றுபெஸ்தலொஜி போதித்தார். எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வது தான் பாடசாலையின் முக்கிய நோக்கம் என்று நம்மில் அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் பெஸ்தலொஜியின் பிள்ளை பன்னிரண்டு வயதாகியும் எழுதப் படிக்க அவனுக்கு நன்றாகத் தெரியாது. நியுஹாப் பட்டணத்தில் அவர் அனாதை ஏழைகளுக்கு ஒரு பாடசாலை ஏற்படுத்தினார். அப் பாடசாலையில் தன் பிள்ளையையும் சேர்த்தார். அவர் முதலில் ஏற்படுத்திய விதத்தில் ஒவ்வொரு பிள்ளையும் தானே உழைத்து ஜீவனம் சம்பாதிக்கும்படி கல்வியும் நற்குணங்களும் கற்பிக்க எண்ணினார். ஆனால் அவரது விவசாயப் பண்ணையில் நஷ்டமுண்டாகி கைப்பொருளெல்லாம் இழந்தனர். ஆயினும் அவர் மனத் தளர்வடையாமல் தான் வெறுந் தீர்த்தம் அருந்திக்கொண்டு தன் சுக ஆசைகளை அடக்கிக் கொண்டு ஏழைக் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்கு உதவி செய்தார். ஏழைப்பிள்ளைகளுக்கு ஏற்படுத்தியபாடசாலையில் நாளடைவில் ஐம்பது அறுபதுபிள்ளைகள் சேர்ந்து வசித்தார்கள். அவர்களுடன் தாமும் கஞ்சி குடித்துக்கொண்டு பெஸ்தலொஜி வசித்தார்.

சாதாரணமாக இவ் வகுப்புப் பிள்ளைகள் முட்டாள்கள், அதனால் படிப்பு ஏறவில்லை என்று உபாத்தியாயர் குறை சொல்வதுண்டு. மாணாக்கனை மடையன்என்று சொல்லும் உபாத்தியாயனே பெருமடையன் என வேண்டும். பெஸ்தலொஜியின் அனாதை ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்த பிள்ளைகளை மிகவும் கேவலமான தாழ்ந்த மனித வர்க்கத்தில் கணக்கிடவேண்டும். இருந்தும் அவர் அப் பிள்ளைகளுடன் ஐந்து வருஷம்உழைத்தார். தோட்டத்திலும் வயலிலும் பிள்ளைகளுடன் வேலை செய்வார்; நூல் நூற்பதிலும், பால் கடைந்து வெண்ணெய் எடுப்பதிலும் சில பிள்ளைகள் பயின்றார்கள். கணக்கும் எழுத்தும் மாத்திரம் கல்வியாகாது, ஒவ்வொருவரும் ஓரோர் தொழில் செய்து ஜீவனம்செய்வதற்கு வேண்டிய பழக்கமும் பாடசாலையில் இருக்க வேண்டுமென்பது பெஸ்தலொஜியின் ஆசை. இந்த அனாதைப் பாடசாலையை வெகு சிரமப்பட்டு ஐந்து வருஷகாலம் நடத்தின பிறகு, தன் கைப்பொருளெல்லாம் செலவாகி அவர் தன் ஜீவனத்திற்கே தவிக்க வேண்டியதாயிற்று.

பதினெட்டு வருஷகாலம் பெஸ்தலொஜி மனது புண்ணாகித் தவித்தார். தான் செய்ய எண்ணியிருந்த பெரிய யோசனைகளெல்லாம் அவரை வருத்தின. கைவைத்த காரியம் பலியாமற் போக, தன் பொருளும் இழந்து, தன் பந்துக்களும் நாட்டாரும் பரிகசிக்க, தன் மெலிந்த நிலைமையை உன்னி உன்னி உருகிப் போயினர். இவன் யாரோ பைத்தியம் பிடித்து என்னமோ ஆரம்பித்துப் பிறகு பரதேசியாயினன் என ஜனங்களும் பேசிக் கொண்டார்கள். இந் நாட்களில் அவர் பல புத்தகங்கள் எழுதிப் பிரசுரித்தார். இப் புத்தகங்களினால் அவர் பேர் கியாதி பெற்றது. பிரான்சு, ஜர்மனி தேசங்களிலிருந்து பலர் அவருக்குக் கடிதங்கள் எழுதினர். அதே சமயம் ஸ்விஸ்க்குடியரசு அதிகாரிகள் அவருக்கு ஸ்டான்ஸ் பட்டணத்தில் ஒரு அனாதைப் பாடசாலை நடத்தும்படி உதவி செய்தார்கள். சுமார் ஒரு வருஷகாலம் இந்தப் பாடசாலை நடைபெற்றது. இப்புது மாதிரியான பாடசாலைக்குத்தாராளமாகப்பணம் ராஜாங்கத்தார் கொடுக்கவில்லை. அங்கு உழைத்த பெஸ்தலொஜிக்கு இருமல் ஏற்பட்டு அதனால் வருத்தம் ஒரு புறம் இருந்தாலும் அதனிலும் பன்மடங்கு வருத்தம் அப் பாடசாலை மூடப்பட்டதனால் ஏற்பட்டது.

சில மாதங்கள் மலைமீது உடம்பு தேற்றிக் கொள்ளும் நிமித்தம் பெஸ்தலொஜி வசித்தார். பிறகு ௧௮௦௦-ம் வருஷ அவரது ருஉ-ம் வயதில் பர்க்டார்ப் என்னும் ஊரில் உபாத்தியாயராக அமர்ந்தார். அந்தப் பள்ளிக்கூடத்தில் கடைசி வகுப்பு ஆசிரியராக இருந்தார். இவ்வளவு

வயதாகியும் அவரது உத்சாகம் குறையாமல் ஒரு வருஷ காலத்தில் அவரிடம் பயின்ற பிள்ளைகள் வெகு சீக்கிரம் கற்றுக்கொண்டார்கள். பிறகு அப்; பாடசாலையின் தலைவராகி பெஸ்தலொஜி ௨௫-வருஷகாலம் உழைத்தார். அவருக்குத் தலைவரா யிருப்பதில் கொஞ்சமும் இஷ்டம் இல்லை; முன் போலவே உபாத்தியாயராகவே இருக்க ஆசை. தன் ஆசைக்குகந்த சீர் திருத்தங்களை அப்பியசித்து அதில் சந்தோஷமடைந்தார். அவரிடம் பயின்றவர்களில் சிலர் பிறகு அவரைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து எழுதியிருக்கின்றனர். பாடசாலை முழுதும் அவருக்குப் பிதா என்ற பெயர் வழங்கும். அவரது பாடசாலையைப்பற்றிக் கேள்விப்பட்ட வித்வான்கள் பலர் நேரில் பார்க்கும் பொருட்டு வந்தார்கள்.

பெஸ்தலொஜியும் பிரான்சு, ருஷ்யா, ஜர்மனி முதலிய தேசத்து மன்னர்களிடம் நேரில் பேசி ஏழை ஜனங்களின் க்ஷேமத்தை விருத்தி செய்யும்பொருட்டு கல்விச் சாலைகள் ஏற்படுத்தும்படி வேண்டினர். சரியானபடி கல்வி பரவியதாயின் தேச நன்மையும் க்ஷேபமும் அதிகப்படும் என்பது அவருடைய அழியாத எண்ணம். தூக்குமேடைக்குக் கொண்டுபோகப்பட்ட ஒரு கைதியைப் பார்த்து ஒரு சமயம் அவர் "சரியானபடி இவன் கல்வி யடைந்திருந்தால் தேசத்திற்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்காதல்லவா!" என்று வருத்தப்பட்டார்.

பெஸ்தலொஜி இறந்து நூறு வருஷங்களாயினும் அவர் பெயர் வஜ்ரக் கற்களென உலக சரித்திரத்தில் ஜ்வலிக்கிறது. தேச க்ஷேமத்திற்கு வழி ஏழை ஜனங்கள் சந்தோஷமாய் வசிப்பதென்றும், அவர்கள் சந்தோஷமாக வசிப்பதற்குக் கல்வி அபிவிருத்திதான்பெருஞ் சாதனம் என்றும் அவர் அனுபவத்தில் காட்டினார். தற்காலம் நமது தேசத்தில் பெஸ்தலொஜி போதித்த முறையைச் செவ்வனே அறிந்து அவ்விதம் உழைக்கும் ஜனங்கள் எவ்வளவு இருப்பினும் இன்னும் வேண்டுமென்று நாம் பிரார்த்திப்போமாக.

# நீண்டாயுள்

———[o]———

## நித்திரையும் சாந்தியும்

சென்ன பட்டணத்தில் ஹைக்கோர்ட்டு வக்கீலாக இருந்து வருகிறவரும் உயர்தரக் கலைவல்லுனரும் விஞ்ஞான ஆராய்ச்சியில் சிறந்து விளங்குபவருமான எமது ஆப்த நண்பரொருவர் சில மாதங்களுக்கு முன் எமக் கெழுதிய கடிதத்தில் நீண்டாயுளுடன் வெகுகாலம் ஜீவித்திருப்பதற்கு ஒரு புதிய விஞ்ஞான வழி கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்றும் அவ் வழியை யப்பியசித்து நீண்டாயுளுடன் அவசியம் நாமிருக்க வேண்டும் எனவும் எமக்குத் தெரிந்த வழியைத் தெரியப்படுத்தும்படியும் எழுதியிருந்தார்.

அவருக்கு நாமெழுதிய முதற் கடிதத்தில் ஜீவசக்தியின் குறையே அற்பாயுளுக்குக் காரணமாக இருப்பதால் அச் சக்தியை நமது தேகத்தில் ஏராளமாகப் பெருக்கிக் கொள்வதால் நீண்டாயுளைத் திட்டமாக அடையலாம் என்றும் வற்புறுத்தினோம்.

இவ் விஷயமாக தற்போது சில மாதங்களாக அவருக்கும் எமக்கும் ருசிகரமான பல தர்க்கங்கள் நேரிட அத் தர்க்கங்களின் பலனாக நாம் ஒரு புதிய உண்மையைக் கண்டு பிடித்து அப் புதிய



உண்மையை மேற் கூறப்பட்ட ஜீவசக்தி யபிவிருத்தியுடன்பழக்கத்திற்குக்கொண்டுவரவேண்டுமென்றும் அவ் விதம் கொண்டு வருவதானால் திட்டமாக நீண்டாயுளை யடையாலம் என்றும் சித்தாந்தப் படுத்திவருகிறோம். இந்தப் பெரும் இரகசியத்தை விளக்குவதான விவகாரம் நமது "பால பாரதியை" படித்து வருபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகுந்த உபகாரமுள்ளதாயும் அவசியமானதாயு மிருக்குமென்று கருதி நீண்டாயுளுக்காக நாம் கண்டுபிடித்துள்ள இரகசியங்களையும் விவகாரத்தின் சாரத்தையும் சிலவியாசங்களால் வெளியிடக் கருதியுள்ளோம். ஆகவே முதல் வியாசத்தைக் கீழே கொடுக்கிறோம்.

"ஜீவச்க்தி.,,

நமது தேகத்தின் தேவையான பிராணன் அல்லது ஜீவசக்தி யில்லாமையே நோய், மூதுவயது, மரணம், ஆகிய இவைகள் உண்டாவதற்குக் காரணமாகையால் ஜீவசக்தியை ஒவ்வொருவரும் அப்பியசித்துப் பெருக்கிக்கொள்ள வேண்டும். இங்ஙனம் செய்தால் உடல், உயிர், முதலிய இந்த நாம் என்ற உருவத்தை நீண்டாயுளுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

நம் முன்னோர்கள் ஜீவசக்தி வித்தையை நன்கறிந்தவர்களாகவும், பயிற்சி பெற்றவர்களாகவும், இருந்து கேவலம் நீண்டாயுள் மட்டுமல்ல அதற்கு மேற்பட்ட பதவிகளையும் அடைந்திருந்தார்கள்.

அவர்களின் சந்ததியாராகிய நாம் ஏன் அந்த "ஜீவசக்தி" வித்தையைக் கற்றும் படித்தும் பெருக்கிக்கொள்ளக்கூடாது.

மேல் நாட்டார் ஜீவசக்தி அல்லது உயிர் வித்தை நீங்கொழிய மற்றச் சகல விஞ்ஞானங்களிலும் பெரும் பயிற்சியும், அனுபவமும் உள்ளவர்களாக இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். அந்த விஞ்ஞான அறிவால் அவர்கள் அடைந்து வரும் மகோன்னத பதவியையும் நாம் பார்க்கிறோம். எனினும் அவர்கள் ஜீவசக்தி வித்தையால் நம்மவர்க்கு வெகுதூரம் பிற்பட்டவர்களே யாவார்கள்.

சென்ற சில ஆண்டுகளாக அன்னோரும் நம் நாட்டு ஜீவ வித்தையின் உண்மைகளை யறிந்து ஆராயத் தொடங்கி யிருக்கிறார்களென்றறிய மிக மகிழ்கிறோம்.

ஆகவே இந்த ஜீவ வித்தையை மேல் நாட்டாராயினும் கீழ் நாட்டாராயினும், மற்ற எந்த நாட்டாராயினும் பொதுவாக ஜன சமூகம் முழுவதும் பயின்று வரல் அவசியம் என்று மறுபடியும் வற்புறுத்துகிறோம்.

இந்த ஜீவ வித்தை என்பது எது என்று அறியப் படிப்போர் ஆவல் கொள்ளலாம். அது வேறொன்றுமல்ல. ஜீவன் அல்லது பிராணனைச் சுத்தமுள்ளதாகவும், நிரம்பவும் நமது தேகத்தில் சேர்த்து வைத்துக்கொள்வதே யாகும்.

இப்படிச் செய்வதற்கு அதிகப் பிரயாசையொன்றுமில்லை. கடல்போல் நாம் வசிக்கும் இவ் வுலகத்தில் நம்மைச்சுற்றியும் எந்த இடத்திலும் நிரம்பியிருக்கும் ஜீவனை வாயுவின் வழியாக உள்ளிழுத்து அப்பியசித்து ஜீவ சம்பாத்தியம் செய்து வருவதே யாகும்.

இதையே நமது யோகிகள் "பிராணயாமம்" என்று கூறுகிறார்கள். புதிய விஞ்ஞான அப்பியாசியாகிய நாம் அதை ஜீவ வித்தை யென்றழைக்கின்றோம்.

இவ் வித்தையை யறியாத எக் கல்விமானும் பயன்படும் மனித வாழ்வின் பலன்களைப் பூர்த்தியாக அடையமாட்டான். அற்பாயுள், நோய், அறிவீனம், மாணம், ஆகிய துன்பங்களால் பயன்படுத்தப்பட்டு நிலையற்ற வாழ்வைக் கைக்கொண்டவனாகத் தவிப்பான்.

இந்த நிலையில் தான் தற்போது உலகத்து நாகரீக, அநாகரீக ஜன சமூகம் முழுவதும் வசித்து வருகின்றன; இந்த நிச்சயமற்ற வாழ்வில் உலகத்தில் வசிப்பதை நீக்கி நிச்சயமுள்ள வாழ்வை யடையத்தான் மனிதசமூகம் விரும்புகிறது. அவ் விருப்பம் வேறு எந்த வழியிலும் சாத்திய மல்ல. ஜீவ வித்தைப் பயிற்சியால்தான் சாத்தியமென்று படிப்போர் அறியவேண்டும் இப் பயிற்சி ஆரம்பிக்கப்படின் ஜீவன் அல்லது பிராணன் மனித தேகத்தில் மூன்று முக்கிய மாற்றங்களை யல்லது நிலைகளை யுண்டாக்குகின்றன.

முதலில் பயிற்சி பெருகப் பெருக தேகத்தின் அழுக்குகள் எரிக்கப்பட்டுச் சாம்பாராக்கப்படுகின்றன. இரண்டாவதாக தேகத்தில் அஜ் ஜீவன் ஏராளமாகத் தங்கி தேகத்தின் பழய, கட்டிடத்தைப் புதுப்பித்துப் பலப்படுத்தித்தான் சந்தோஷமாகத் தங்குவதற்குத் தகுதியுள்ளதாகவும், நிச்சய வாழ்க்கையுள்ளதாகவும் செய்து கொள்கிறது. மூன்றாவதாக புத்தி, சித்தம் மனம், முதலியவற்றைச் சுத்த முள்ளதாகவும், ஆழ்ந்து யோசிக்கத் தகுதியுள்ளதாகவும், வைராக்கியம்,மனஉறுதி, திர்க்கம், முதலிய குணங்களைத் தக்கவாறுள்ளதாகவும் செய்துகொள்கிறது.

ஆக இந்த முக்கிய முத்தொழிலும் பெற்றபின் பொதுவாகத் தேகத்தின் உள்ளும், வெளியிலும் ஜீவசக்திக்குத் தடையான ஏதாவது வெகு காலத்துக் கெட்ட வழக்கங்களாவது பயிற்சிகளாவது இருந்து அதனால் பெருங்கேடுகள் விளைந்து வருவதனால் அந்தத் தீய வழக்கங்களை அடியோடு எடுத்தெறிந்துவிடுகிறது.

இந்த நிலையடைந்தபின் மேல் நமது தேகம் அல்லது நாம் அல்லது மானிட சமூகம் நீண்டாயுளுக்குத் தகுதியுள்ளதாகிறது. இதன்மேல் நீண்டாயுள் இந் நிலைகள் தொடர்ந்துகொண்டேயிருந்தால் நீண்டாயுள் சாத்தியமாகிவிடுகிறது.

நமது நண்பர் விரும்பிய நீண்டாயுள் இங்கிருந்தே ஆரம்பிக்கிறது. இந் நீண்டாயுளுக்குத் தடையாயுள்ள கேடுகள் (இந் நிலை நிஜமாயின்) பல இல்லாவிடினும் சில இருக்கின்றன அவைகளில் முதன்மையானவை நித்திரையும், சாந்தியும், ஆகிய இவ்விரு தடைகளே யாகும் ஆகையால் முதலாவதான நித்திரையைப் பற்றி இங்காராய்வோம்.

## நித்திரை

நித்திரை மனிதனது கெட்ட வழக்கங்களில் ஒன்றாகும். அது மனிதனது சுபாவமன்று. வேலைக்குப்பின் ஓய்வு அவசியமேயன்றி நித்திரையவசியமன்று. உயிர் எப்பொழுதும் நித்திரையை எதிர்க்கிற சுபாவத்தையுடையது. வினனில் உயிர் விழிப்பிலிருக்கும்போது நித்திரை வருவதில்லை. நித்திரை மிகவும் ஓங்கி வரும் போது உயிர் பலமுள்ளதாகயிருக்குமானால் நித்திரையை வென்றுவிடும். பலமற்றதாக விருக்குமானால் நித்திரை உயிரை வென்று விடுவதுமாக இருக்கிறது. தேகத்தின் இரத்தவோட்டம், ஜீரண வேலை இவைகள் நித்திரையால் பலக்குறைவாகி நிதான நிலைக்கு மிகத்தாழ்ந்தும் இருக்கிறபடியால் உயிர் நிலையில் நித்திரை விரோதமுள்ளதாகிறது. தேகம் உயிரையும் உயிர் தேகத்தையும் ஆதரவாகக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஒன்றில்லாதபோது மற்றொன்று அழி



கிறது. நித்திரை யில்லையேல் உயிர் அழிவதில்லை. இந்த நிலைக்கு மாறாக நித்திரை தடுக்கப்பட்டோ நிறுத்தப்பட்டோ விடுமானால் உடல் உயிர் இவைகளின் நிலை, சுகத்தையும் சுறுசுறுப்பையும் அடைவதை நாம் பார்க்கிறோம். ஆகவே நித்திரை உயிர் நிலைக்கு அவசியமுள்ளதாக மாட்டாது.

படுக்கை, தலையணை, ஒய்ந்த இடம், சமயம் முதலியவைகளைக் கண்டபிறகே நித்திரை பெரும்பாலும் ஆரம்பிக்கிறது. நித்திரையைப் பற்றி நினைப்பதும் ஒரு பெரிய காரணமாகும் நினைக்காதபோது நித்திரை வருவதில்லை. வெகு காலத்துக் கெட்ட வழக்கமே இந்த நினைப்புக்கு ஆதரவாகும். இந்தப் பழக்கத்தை மெதுவாக நீக்கிவிட்டால் நாம் நித்திரையை மறந்துவிடலாம். மறந்தால் அது வர மாட்டாது.

நித்திரையை நிறுத்துவதால் நல்ல பசியும், தாகமும், சுறு சுறுப்பும் உண்டாகின்றன. ஒரேவேளையாகாரத்தோடு இரவுப் பொழுதைப் போக்க முடியாது. இரண்டு அல்லது மூன்று வேளை யாகாரம் இரவில் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதிகமான ஆகாரம் உட்கொள்ளலாம், அது போலவே அதிக பசியும் விருத்தியடைகின்றது. அன்றியும் நாட்பட்டதும் எந்த வைத்தியத்தாலும் தீராததுமான கடின ரோகங்களெல்லாம் நித்திரை செய்யாது விழித்துக்கொண்டிருப்பதால் சுகப்பட்டுவிடும் அற்புத ரகசியத்தை நாம் பார்க்கலாம்.

தற்காலத்தில் வைத்தியர்கள் இந்த உண்மைக்கு மாறாக நல்ல நித்திரை யில்லையானல் அதைக் கேடான குறிகளாகக் கொள்கிறார்கள். இது விஞ்ஞான விரோதமும் பொய்யானதுமான அபிப்பிராயமாகும். நோயாளி நல்ல தூக்கம் வாராமல் கஷ்டப்பட்டுக்கொண்டே யிருப்பானல் அவன் சாகமாட்டான். அவன் நோயும் சில தினங்களில் சுகமடைந்து விடுகிறது. நோய் கொண்டபோது நோயாளி நன்றாகத் தூங்குவானால் அவுன் நோய் நீடித்துப்பெருகும். அல்லது அவன் வெகு சீக்கிரம் இறந்து போய் விடுவானென்பது நிச்சயம். இந்த உண்மையைச்சென்ற இருபதாண்டுகளாகப் பல நண்பர்களுக்கும் நாம் மெய்ப்பித்திருக்கிறோம்.

நித்திரைபோகாது அழுதுகொண்டும் அதிக துஷ்டத்தனம் செய்துகொண்டும் இருக்கும் குழந்தைகளைத் தாய்மார்கள் வெறுத்துக்கோபித்தும் கேடெனக்கருதியும் அக் குழந்தைகள் நன்கு தூங்கும்படி மருந்துகளையோ, அபினி போன்ற விஷபதார்த்தங்களையோ கொடுத்துப் பழக்குகிறார்கள். இதுவே இந்தக் கேடான நித்திரை மனித வாழ்வைப் பற்றிக்கொள்வதற்கு முதற் காரணமாகும். இம் மருந்துகள் தாயாரில்லாதபோது குழந்தைகள் தூங்குவதற்காகத் தாய்மார்கள் செய்யும் இந்திர ஜால வித்தைகள் பலவாகும். அணியல்லது படுக்கையை விரிப்பதும் குழந்தையைப் பலவந்தமாக அதில் குப்புறப்படுக்கப்போட்டு முதுகில் மெதுவாகத் தட்டிக்கொடுத்துப் பாட்டுப்பாடுவதும், பொய்யான கதைகளைச்சொல்லிப் பயத்தை யுண்டாக்குவதும், நித்திரை வந்ததா, வந்ததாவென்று பலதாம் கேட்பதும், நாசமாகப்போகும் குழந்தை தூங்கமாட்டானென்கிறதே என்ன 'செய்வேன்" என்று தன்னைத் தானே நொந்து பலரிடம் சொல்வதும் என் குழந்தை தூங்க ஒரு மருந்து சொல்லாயா வென்று அக்கம் பக்கத்துப் பெண்களிடம் கேட்பதும், தொட்டில் தூங்குமஞ்சம், தலையணைகள் மெத்தைகள் முதலியவைகளில் குழந்தைகளை அடிக்கடி வெகுநேரம் படுக்கப் போட்டு வைப்பதுமாகிய எத்தனையோ எத்தனையோ அக்கிரமமான வழக்கங்களை

கையாண்டு நித்திரையை நாம் உண்டாக்குகிறோம்.

இந்தக் கேடான வழக்கங்களாலே நித்திரைப் பேய் மனிதவாழ்வைத் துக்கமும், துன்பமும், உள்ளதாகவும், நோயும் பலஹீனமும் உள்ளதாகவும் செய்து விட்டது. அன்றியும் மனித ஆயுளில் பாதியைத் தனக்கு பலியாக்கியும் கொண்டது என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

மனிதனுக்கு உணர்ச்சியற்ற பிறகே நல்ல நித்திரை தொடங்குகிறது. நல்ல நித்திரையிலிருந்து உணர்ச்சியுண்டாவதற்கு முன் எழவே முடியாது. இவ்வுணர்ச்சி நித்திரையின் வல்லமைக் குட்படுத்தப்படும் வழக்கத்தைத் தவிர்ப்பதற்குச் சிறந்த வழி வேறொன்றுமில்லை. நித்திரையை நீக்குவதேயாகும்.

நித்திரையால் உண்டாகும் பல பெருங்கேடுகளில் முக்கியமானவை இரண்டாகும். அவை விருத்தாப்பியமும், மரணமும் என்க. நித்திரை வரும்போது அந் நித்திரையைத் தவிர மற்றச் சகல பதார்த்தங்களின் மேலுமுள்ள விருப்பங்களும் மறந்துவிடப்படுகின்றன. அந்த நித்திரை விருப்பமே பலப்பட்டு நிற்கிறது. மரணமும் இப்படியே யுண்டாகின்றது விருத்தாப்பியம் அதிக நித்திரையால் வெகு சீக்கிரம் உண்டாய் விடுவதை நாம் பார்க்கிறோம். அது போலவே கொஞ்சம் அல்லது அற்ப நித்திரையால் விருத்தாப்பியம் சிறிது மெதுவாக அல்லது தாமதமாக வருவதையும் நாம் அறிந்திருக்கிறோம். பொதுவாக விருத்தாப்பியர்கள் இரவுகளில் வெகு நேரம் தூங்குவதில்லை. மிகவும் சிறிது காலமே தூங்குகிறார்கள். அத் தூக்கமும் ஆழ்ந்த தூக்கமல்ல கோழித்தூக்கமேயாகும். ஒரு விருத்தாப்பியனும், ஒரு நடுத்தர வயதுடையவனும் தூங்குமிடத்தில் நாம் சென்று அழைப்போமானால் விருத்தாப்பியனே முதலில் எழுவதை நாம் பார்க்கிறோம். அல்லது பார்ப்போம். ஏனென்றால் நடுத்தர வயதுள்ளவன் வெகு சீக்கிரம் விருத்தாப்பியனாவதற்காக ஆழ்ந்த தூக்கம் தூங்குகிறான். விருத்தாப்பியன் தன் கிழத்தனத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சிறிதளவே தூங்குகிறான். அச்சிறிதளவுத் தூக்கத்தாலேயே அவன் விருத்தாப்பியனாகவிருக்கிறான் என்பதை யறியவேண்டியது. அக் கிழவன் வேகமாகத் தூங்கத் தூங்கத்தொடங்கிவிட்டானானால் அதுவே அவனது மரணத்திற்கு ஆரம்பம் என்றறிய வேண்டியது. சில தினங்களில் அவன் சாவான் என்பதில் சந்தேகம் வேண்டுவதில்லை.

தூக்கத்திற்குப் பின் தொடர்ந்து சூரிய ஒளி இருந்தாலன்றி தூக்கம் விழித்தவனுக்குப் பசியும், தாகமும் உண்டாவதில்லை. மறுபடியும் தூக்கம் வருவதை நாம் பார்க்கிறோம். நாள் ஒன்றுக்கு நான்கு மணிநேரம் தூங்கிப் பழகியவன் அந் நான்கு மணியோடு திருப்தியடைவதையும் எட்டு மணிநேரம் தூங்கிப் பழகியவன் எட்டு மணித் தூக்கத்தோடு திருப்தியடைவதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே தூக்கம் மனிதனது வழக்கத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டதேயன்றி அவசியத்தை ஆதாரமாகக் கொண்டதல்ல.

தூக்கத்திற்கு முன்னர் இருந்த தேகநிலைக்கும் தூக்கத்திற்குப்பின்னருள்ள தேகநிலைக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும். தூக்கத்திற்குப் பின் உயிரின் நிலையும், இரத்த வோட்டத்தின் கதியும், தேகத்தின் சரும நிலையும் கேடடைந்து, பசி குன்றி கால் கைகள், ஓய்ந்து, தளர்ந்து இருத்தலை நாம் பார்க்கிறோம். இக் கேடுகள் போஜனம் ஜீரணமாகி முடிந்ததால் உண்டானதாகக் கருதப்படுகிறது. இது தப்பான அபிப்பிராயமாகும். நித்திரைக் காலத்தில் தேகத்தின் அனல் சிறிது சிறிதாகக்



குறைந்து இரத்தவோட்டம் மட்டுப்பட்டு தேகக் கருவிகள் உயிர்த்துணைக்குத் தவித்து ஓய்ந்ததினால் இந் நிலை யேற்பட்டதாகும். விழிப்பின் பின் சிறிது சிறிதாக, இந் நிலை மாறுவதால் புத்தியின் "சக்தி" பெருகி நிதான நிலைக்கு வருதல் வேண்டும்.

மனிதர்களையேனும், மிருகங்களையேனும், விஷப்பாம்புகள் கடித்து விட்டாலும், பெருங் காயங்கள் உண்டாகிவிட்டாலும் இரவு முழுதும் பகல்முழுதும் தூங்காமலிருந்தாலொழிய பிழைப்பது கஷ்டம் என்று முற்காலத்தற்கால வைத்தியர்கள் கண்டிப்பாகக் கூறியிருப்பதையும், கூறிவருவதையும் நாம் அறிவோம். வியாதியில் வருந்திச் சுகப்பட்டவர்கள் ஸ்நானம் செய்தால் அன்று பகல் தூங்குவது கூடாதென்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். உடல் பனியினால் வருந்திய போது அப் பனியின் குளிர்ச்சி நிவர்த்தியாகும் வரை தேகத்தை நெருப்பாலோ, வெயிலாலோ, வாட்டிக்கொண்டு உஷ்ணம் உண்டான பிறகே தூங்க வேண்டும் என்றும், இன்றேல் மரணம் திட்டமாக வுண்டாகுமென்றும் வைத்தியர்களும் அனுபோகஸ்தர்களும் கண்டிப்பாகக் கூறுகிறார்கள். நெப்போலியன் ருஷிய நாட்டிற்குப் போர்ப்படை யனுப்ப அப்படை ருஷியத்தலைநகராகிய செயின்ட் பீடர்ஸ் பர்க்கின் பக்கத்தில் பனியால் களைத்துப் படுத்ததால் முப்பதினாயிரம் படை வீரரும் மடிந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அப் படைவீரர் தூங்காதிருந்தால் மடிந்திருக்கமாட்டார்கள். நம் நாட்டுப் பல விரதங்களில் பகற் தூக்கமும் இராத்தூக்கமும் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. சிவராத்திரி தினத்தில் பகலும் இரவும் கண்டிப்பாகத் தூங்கக் கூடாதென்றும் தூங்கினால் பலன் கிடைக்கமாட்டாதென்றும் சொல்லப்படுகிறது. அன்றியும் மனுதரும சாஸ்திரத்தில் பொதுவாகவே பகல் தூக்கம் செய்தல் கூடாதென்றும் அவ்விதம் தூங்கினால் மிகுந்த பாவம் உண்டென்றும் பகலில் தூங்கினவன் எழுந்தவுடன் படுக்கையை எடுத்தெறிந்துவிட்டு உடனே ஸ்நானம் செய்து ஒரு கிஸ்ஸாம் தங்கம் பிராமணனுக்குத் தானம் செய்யவேண்டுமென்றும் இரவு படுத்த படுக்கையைப் பகலிற் பார்க்கவும் தொடவும் கூடாதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் உயிரை வளர்க்கவும், பலத்தைப் பெருக்கவும், அறிவை விருத்தி செய்யவும், எண்ணங்கொண்டே அதற்குத் தடையும் பகையுமான நித்திரையைக் கட்டாயப்படுத்தித் தடுத்திருக்கிறார்கள்.

மேலே கண்ட விஷயங்கள் மதங்களின்படியும், வைத்திய முறைப்படியும், விஞ்ஞான ரீதியாகவும் ஆட்சேபிக்க முடியாத உண்மைகளாகவிருப்பதால் யாவரும் இச்சிக்கின்றதான நீண்டாயுள், நோயின்மை, பலம், ஆனந்தம் இவைகளின் பொருட்டு ஏன் நாம் நித்திரையை இரவும் பகலும் நீக்கிவிடக்கூடாது? இக் கேள்விக்கு விடை ஆம், அவசியம் நீக்கவேண்டியதே என்பதேயாகுமே தவிர வேறின்று என்பதை நாம் கூற வேண்டுவதில்லை.

மிருகங்களும், பட்சிகளும், புழுக்கள் முதலியனவும் தூங்குவதாகச்சொல்லும் சித்தாந்தம்முழுவதும்பொய்யென்றுநாமிங்குவெளிப்படுத்துவது அவசியமாகும். நமது சித்தாந்தப்படியும் பரிசைகளின் படியும் மிருக பட்சி முதலியவைகள் தூங்குவதே யில்லை. ஆனால் இரவாகயிருப்பதாலும், வெளியிற் பறக்கச் சாத்தியமற்றிருப்பதாலும் பகல் முழுவதும் வெளியில் அலைந்து வேலை செய்திருப்பதாலும் இந்த ஜீவராசிகள் ஓய்வெடுத்துக் கொள்கின்றன இதுவே உண்மை.

நித்திரை அல்லது தூக்கம் என்பதற்கும் "ஓய்வு" என்பதற்கும் மிகுந்தவித்தியாசம் இருப்

பதைப் படிக்கும் விவேகிகள் யோசிக்கவேண்டும். பிரக்ஞையற்று ஐம்பொறிகளும் அடங்கிச் செயல்கள் பெரும்பாலும் ஒடுங்கி வினையற்று, அறிவற்று, ஸ்பரிச ரூபங்கள் இன்றித் தூங்குவதற்கும் கேவலம் ஓய்வெடுத்துக்கொள்வதற்கும் மிகுந்த தூரம் இருக்கிறது. மிருக பட்சிப் புழுக் கூட்டங்களை ஒரு முறைச் சிறு சப்தத்துடன் கூவினாலும் அவைகளின் உடலை ஏதாலேனும் தொட்டாலும் அந்த நிமிடமே அறிந்துகொண்டு தான் மனிதனைப் போல் நித்திரை என்ற அவஸ்தையில் இல்லையென்றும் ஜாக்கிரதை அல்லது விழிப்பு என்ற உயிரின் உருவத்துடனிருப்பதாகவும் நமக்குத் தெரிவிப்பது போல் காட்டிவிடுகின்றன. ஆகவே அவைகள் தூங்கவேயில்லை என்பதை நாம் நன்றாக அறிகிறோம்.

மனித ஜாதி ஒன்றே நித்திரையால் தங்கள் வாழ்நாட்களில் பாதியைப் பலி கொடுத்து நோய்களும், பலஹீனமும், அறிவின்மையும், அற்பாயுளையும் பெற்று, அழிந்துகொண்டு வருகிறது. இது மிக அறிவீனமும் துக்கிக்கத்தக்கதுமாகும்.

மானிட சிருஷ்டியின் சுபாவப்படி மனித ஜாதி முழுவதும் இரவும் பகலும் தூங்குவதில்லையானால் ஓய் வெடுத்துக் கொண்ட காலம் போக மற்றக் காலங்களில் ஜாக்கிரதையில் வசித்து இரத்தவோட்டத்தையும் ஜீரணத்தையும் அபாரமாகப் பெருக்கி வியாதிகளையின்றி நீண்டாயுள் பெற்று வாழ்வதில் தடை யொன்றுமில்லை. தற்போதுள்ள அநேகம் ஸ்தாபனங்களும் ஔஷதங்களும், டாக்டர்களும் இருக்கமாட்டார்கள். பகலைப் போல் இரவிலும் மனிதன் ஆடிப்பாடி உண்டு உடுத்து அனுபவித்துக் களித்துச் சுகப்படுவதுடன் வெளி வேலை முழுவதும் சாத்தியமற்ற இராக் காலங்களிலும் வீடுகளில் படித்தும் வேலைகள் செய்தும் புஸ்தகங்கள் எழுதியும் இன்னமும் பல வகைத்தொழில்களைச் செய்தும் அவைகளைப் பகற் பொழுதில் பண்டமாற்றியும் விற்றும் செல்வம் முதலிய சகல பாக்கியங்களையும் ஏராளமாக அடையலாம்.

இவ்வித ஆனந்த வாழ்வை இவ்வுலகத்தில் இதற்கு முன்னிருந்த ஜனங்கள் அடைந்திருந்ததில்லையென்றும் தூங்கியே வாழ்நாட்களைக் குறைத்து நோய்வாய்ப்பட்டு மடிந்து வந்தார்களென்றும் ஒருவராலும் சொல்ல முடியாது.

நமது முன்னோர்கள் நமது சித்தாந்தப்படியே இரவும் பகலும் தூக்கமற்று விழிப்புடனே சுகதேகிகளாகவும் சிரஞ்சீவிகளாகவும் வாழ்ந்து வந்தார்களென்றும் அறிவீனத்தாலும் சோம்பலாலும் கெட்ட வழக்கங்களை வர வர ஏராளமாக நாளடைவில் அடைந்து கெட்டுவிட்டார்களென்றும் தெளிவு படுத்திக் காட்டத் தகுந்த ஆதாரங்கள் நம்மிடம் ஏராளமாக இருக்கின்றன. அவ்வாதாரங்களை முழுவதும் எடுத்துக்காட்ட இச் சிறு வியாசம் இடம் தாராதாகையால் சமயம் வந்துழி தயாராயிருக்கிறோம்.

தூக்கமாகிய சத்துருவை மனித ஜாதி தனது வழக்கத்திலிருந்து நீக்கி எப்பொழுதும் விழிப்புடனேயே இருக்கப் பழகிவர வேண்டும் என்றும் அவைகளில பலன்களை ஆனந்தத்துடன் அடைந்து அநுபவிப்பதுடன் நீண்டாயுளின் பஞ்சத்தை நீக்கவேண்டும். என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

“ துஞ்சினார் செத்தாரில் வேறல்லர் எஞ்ஞான் [றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர் ”

“சாந்தி”

“சாந்தி” யென்பது ஓய்தலே யன்றித் தூக்கமன்று. இங்கு நாமெடுத்தாளும் இப்பொருளன்



வேறு பொருள் தமிழ் மொழி கூறுமாயின் அம்மொழியை நாம் சபிப்போமாக. வேலை செய்து தளர்ந்த உயிரானது மறுபடியும் தன்னை நிரப்பிக் கொள்வதற்காக எடுத்துக் கொள்ளும் காலத்திற்கே இந்தப் பெயராகும் இந்தச் சாந்தியும் உயிரின் மற்ற வேலைகளைப் போல் ஜாக்கிரதாவஸ்தையேயாகும். அங்ஙனமின்றி “சாந்தி”க்குத் தூக்கம் அல்லது மரணம் என்ற பொருளில் நாம் கொள்வோமல்லேம். அவ்விதம் கொள்வதாயின் அந்தச் சாந்தி நமக்கு வேண்டுவதன்று. அதற்கெதிரான நிர்ச்சாந்தியே நாம் வேண்டற்பாலதாகும். ஏனெனில் நிர்ச்சாந்தியே, தனக்குச் சுபாவமான உயிரையும், நீண்டாயுளையும் கொடுக்கிறது.

உயிரையுடைய மனிதன் தூக்கம், மரணம் என்ற நிலைமைகள் ஒழிந்த எச் சமயத்திலும் சாந்தியென்ற அல்லது சுத்தமாகச் சுருசுருப்பற்ற பதத்தில் இருப்பது கஷ்டமாகும். அன்றித் தூக்கத்தையே சாந்தியென்றழைப்போமானால் அச் சாந்தி நம்மால் எதிர்த்துத் தகர்க்கத்தக்கதாகும். அத்தகைய சாந்தி எந்த ஜீவராசிக்கும் இயற்கையில் உரித்தானதல்ல. மனிதன் ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஒரு பொருள் அல்லது இடத்தை நாடிக் குறியாகக்கொண்டு தனது சகல எண்ணங்களையும் அதில் ஒன்றுபடுத்தி ஏகாக்கிர சித்தனாயிருக்குங் காலத்தில் இதைச் சாந்தியென்ற தூக்கத்தின் பொருளைக் கொண்டு அழைத்தல் கூடாது. இது உயிரின் இயற்கையான வேலையாகிய நிர்ச்சாந்தியென்றே கூறுதல் வேண்டும். ஏனெனில் இந் நிலையில் தூக்கத்தின் குணங்கள் ஒன்றுமிருப்பதில்லை. உயிரின் வெப்பமும், ஒளியும், ஆராய்ச்சியுமே விளங்கி நிற்கின்றது. ஆகவே நித்திரையின் நிலையைக்கொண்ட சாந்தியை நீண்டாயுளை விரும்புவோர் எப்போதும் எதிர்த்து நிற்க வேண்டும். ஆகவே நாம் விரும்புவது சாந்தியன்று. நிர்ச்சாந்தி! நிர்ச்சாந்தி!! நிர்ச்சாந்தி!!!

(ப. ஆ)

விளக்கினின்றே விளக்கை ஏற்றுவது போல் குருவின் அருளினின்றே உங்கள் மனதை அருட்படுத்துங்கள்.

இன்று முதல் பகை என்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள். பச்சைக் கண்ணாடி போட்டுக் கொள்பவனுக்கே உலகம் பச்சையாகத் தோன்றும். ஆசையும், பொறாமையும், அறுந்தால் பகையேது!

திருப்தியோடிருங்கள். உங்கள் தேவையைச் சுருக்குங்கள். பாரத்தைக் குறைப்பதே தன்னைச் சுதந்திரப் படுத்திக்கொள்ளும் வழி.

நீங்கள் முதலில் சுதந்திரம் அடையுங்கள். கண்களுக்குக் கருணையும், கைகளுக்குத் தொண்டும், வாய்க்கு இன்சொல்லும், மனதிற்கு அன்பும், சுதந்திரந்தரும். ஒன்றிற்கும் நீங்கள் அடிமையாக வேண்டாம்.

யார் சர்வ வல்லவனோ அவனே உங்களுக்குள் உள்ளான். சர்வ சக்தியும் உங்களுக் குள்ளதென எண்ணுங்கள்.

# மஹரிஷி வ. வெ. சுப்பிரமணியம்

—————[o]—————

## ஒரு சிறந்த படிப்பினை

மரணமே மனிதனின் உரை கல்லாகும். உரைக்கல்லில் உரைத்த பின்னரே தங்கத்தின் உயர்வு தெரிகிறது. மரணத்திற்காக மனிதர்கள் துக்கப்படுவதில்லை. தனி மனிதனோ அன்றி, ஒரு நாட்டாரோ மரணத்திற்குப் பயந்தோ, தப்பியோ வாழ முடியாது. உண்மையில் "துக்கம்" மரணத்தால் நேரிடும் நஷ்டத்திற்கே யன்றி மரணத்திற்கல்ல.

நமது மகரிஷியின் மரணம் வீரமும், அசகாயச் சூரத்தனமும் கலந்ததாக இருந்ததோடு, நம் நாட்டு வாலிபர்களுக்கும், தேசாபிமானிகளுக்கும் ஒரு சிறந்த படிப்பினையாகவும் இருப்பது இங்கு கவனிக்கத் தக்கது. உயிரை வெல்லமாக நினைத்துத் தங்கள் கடமையினின்றும் தப்பித்துக்கொள்வோரை நாம் எங்கும் எப்பொழுதும் பார்க்கிறோம். நமது பொது வாழ்க்கையில் அன்னாராலுண்டாகும் அவமானத்தையும், நஷ்டங்களையும் நாம் அனுபவித்து வருகிறோம். அடிமையில் ஆழ்ந்து விடுதலைக்குத் தவித்து நிற்கும் இக் காலத்தில், அத்தகைய பேடிகள் நமக்கு வேண்டுவதில்லை. அவர்களால் ஆரம்பத்தில் ஏற்படும் அற்ப நன்மைகளை விட, பெரிய அவமானங்களையும் நரம்புத் தளர்ச்சியையும் நாம் அடைய நேரிடுகிறது. ஆகவே "சூரனுக்குச் சேர்ந்த மரணஞ் சிறு துரும்பு...உயிர் துரும்பு" என்ற ஒளவையின் வாக்குப்படி நமக்கு வேண்டியவர்கள் வீரர்களே யாவார்கள். சத்தியத்தில் நம்பிக்கையும், அசையாத வைராக்கியமும், வைர மலை போன்ற மனோதிடமுமுள்ள வீரர்களே நமக்கு வேண்டும். இத்தகைய வீரர்களைத் தற்போது நம் நாடு அவசரமாக வேண்டுகிறது.

மகாத்மாவின் 'ஒத்துழையா' ஆக்கினைகளை நம்மவர்கள் சிரமேற்கொண்டு, அவரைப் பின்பற்றி, கடந்த சில ஆண்டுகளில் 'இவ்வீர வித்தையை' நம் நாட்டார் கற்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஒவ்வொரு நாளும் எந்தேசாபிமானி தன் கடமையைத் தவறுகிறானோ? அன்றி எத்தேசாபிமானி கடமையைச் செலுத்துகிறானோ? என்று எதிர்பார்த்த வண்ணமாயிருந்தோம். நூற்றுக்கு எண்பது பெயர் தவறியதைப் பார்த்து நாம் தவித்தோம். பாரதத்தாய் மார்பில் கையடித்து அழுதாள், மகாத்மா மனம் இளைத்துத் துக்கப்பட்டார். ஆனால் அங்கங்கு நம் வீரர்கள் காட்டிய மன உறுதியையும், சாகசத்தையும் பார்த்து நாம் சிறிது சந்தோஷமும் அடைந்தோம். இச் சமயத்தில் நம் நாட்டார்க்கு வீர போதம் செய்வதற்குப் பல ஆசாரியர்களை பாரதமாதா தயார்செய்து வந்ததை நாம் கண்டோம். அவ்வித ஆசாரியர்களில் நமது வ.வெ. சுப்பிரமணியம் வீரமடக்கமுடியாத முதன்மை ஸ்தானத்தைப் பெற்றார். என்பதை அவரது வீர மரணம் நமக்குப் போதிக்கிறது. இவ்வுண்மையை யாரால் மறுக்க முடியும்! இவ்வுண்மையை நாம் முன்னமே யறிவோம். இப்பொழுது நம் நாட்டில் இம் மகானின் மரணத்திற்காக மனம் வருந்தி அழுவோர் ஒருவரும் இன்று. ஆனால் அன்னாரின் மேலான குணங்களையும், அசையாத மனோதிடத்தையும், சத்திய வாழ்க்கையையும், நம்மனோர்க்கு வளர்ந்து வருங்காலத்தில் மடிந்து நம் இரத்தத்திற்புது புத்துயிரும், புது வீரமும் புகட்டிவரும் காலத்தில் அன்னார் மறைந்தனரே, என்றுதான் துக்கப்படுகிறார்கள்.

சரித்திர ரீதியாக ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு சமயத்தில் அடிமையிருள் சூழுவது சுபாவமேயாகும். இது தடுக்க முடியாததே. ஆனால் அதுபோலவே அடிமையிருள் நீங்குங்காலம் அந் நாட்டிற்கு அவசியம் வந்தே தீருகிறது.

### "சுதந்தர உதயம்"

இந் நியதிப்படி நம் பாரத நாட்டின் சுதந்தர உதயம், சென்ற சில்லாண்டுகளாகத் தோன்றியிருப்பதை நாம் பார்க்கிறோம். ஒரு நாட்டின் சுதந்தர உதயம் தோன்றிவிட்டதற்கு இரண்டு பெரிய அடையாளங்கள் வேண்டுவதாகும். அவற்றில் ஒன்று தேசத்திற்கு அஞ்சா நெஞ்



சர்களான தேசாபிமானிகள் தோன்றி ஜெயில் வாசம் துன்பம் இவைகளைத் துரும்பாக மதித்து மனமாறுது உழைத்தல். மற்றொன்று வீரத்தையும் சத்தியத்தையும் தட்டி யெழுப்பி அவைகளைக் காட்டுவதற்காக உயிரை அர்ப்பணம் செய்தல். ஆக இவ்விரண்டில் முதலாவது கடமை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும்போதே இரண்டாவது கடமை நடந்தேறுமானால் அதுவே சுதந்திர உதயத்தின் பிரத்தியட்ச சாக்ஷியாகும், நமது மகாத்மாவின் முதற் கடமை நாம் குறித்தவாறே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் இக் காலத்தில் நமது மஹரிஷியின் 'வீர மரணம்' இரண்டாவது கடமையைச் செய்து முடித்தாய்விட்டது.

ஆகவே சுதந்திர சூரியன் திட்டமாக நாட்டில் உதித்துவிட்டான் என்பதில் என்ன ஆட்சேபனை. இனி நமது மஹரிஷியைப் பின் தொடரும் மஹா வீரர்களின் தொகை புற்றீசல் போல் பெருகும் என்பதில் ஆட்சேபனை யில்லை.

வெகு சீக்கிரத்தில் பென்னம் பெரிய தேசாபிமானச் சாகசச் செய்கைகளைச் செய்யும் பல்லாயிரம் வீரர்களை நாம் பார்க்கப் போகிறோம். ஏனெனில் நமது மஹரிஷியே அதற்கு வழி காட்டி யாவார்.

### சில பேரெண்ணங்கள்

நமது மஹரிஷியின் பேரெண்ணங்களைப் பலரும் ஒருவாறறிவார்கள். சிலர் சற்று நன்கறிவார்கள். அப்பெரியாரைப் புகழ்ந்து பல கடிதங்கள் வெளியாயிருக்கின்றன. இனியும் பல வெளிவரும். அவரது சரித்திர புஸ்தகங்களும் உதிக்கவே போகின்றன. எனினும் எமக்கும் மஹரிஷிக்கும் சென்ற எட்டாண்டுகளாக இருந்து வந்த நெருங்கிய சம்பந்தமும், அவரது வீர மரணம் வரையிலுள்ள கடிதப்போக்குவரத்தும், நம்மவருக்கு அவரது பல அற்புத நற்குணங்களையும் பென்னம் பெரிய எண்ணங்களையும் நன்கு விளக்குவதாகும் என்று நம்புகிறோம் ஆகையால் அவைகளில் சிலவற்றை கீழே குறிப்பிடுகிறோம். அம் மகானது சரித்திரமெழுதுவோர் விரும்பின் முழுக்கடிதங்களையும் அளிக்கத் தயாராகவிருக்கிறோம்.

### தமிழாராய்ச்சி

மஹரிஷி பாண்டிச்சேரியிலிருந்த காலத்தில் முதல் முதல் கம்பராமாயணம் பாலகாண்டத்தைச் சுருக்கி வெளியிட்டதை யறிந்து ஒரு பிரதியை வரச் செய்து நாம் பார்வையிட்டு எமது ஆட்சேபனைகளை மிக பலமாக காரணங்களுடன் காட்டி மஹரிஷியை எதிர்த்த போது மஹரிஷி எம்மை அலட்சியம் செய்யாது விடுத்த பதில் கடிதத்தின் மதுரப் போக்கும், பணிவும், வீரப்பாகும், ஊக்க நெருப்பும் செறிந்து கிடப்பதை படிப்போர் கவனிப்பாராக. கடிதம் வருமாறு:-

### கடிதம்

"தம்பநிலையம்" புதுவை வைகாசி ௧௫

அன்புள்ள ஐய, ௨௮—௫—௧௯௨௫.

தங்கள் கடிதம் விளம்பரம் முதலியன கிடைத்தன. தங்களுடைய அபிப்பிராயத்தை உள்ளது உள்ளபடியே எழுதியதற்காக நன்றி பாராட்டுகிறேன்.

என் பதிப்பு 'தமிழின் மரணத்துக்கு வழி காட்டுகிறது' என்று தங்களுக்குத் தோன்றும்போது அதை நான் தங்களுக்கு வி.பி.யில் அனுப்பக்கூடாது என்று நிறுத்திக்கொள்கிறேன். ஆனால் தங்கள் பேரில் நான் கோபமாக இருக்கிறேன் என நினைக்க வேண்டாம். கோபித்தால் இக் கடிதம் எழுதமாட்டேன் அல்லது வேறு தோரணையில் எழுதியிருப்பேன்.

தங்கள் கடிதத்தினின்றும் தங்கள் ஆட்சேபனைக்குக் காரணம் ஒன்றும் தெரியவில்லை. செய்யுள்களைப் பிரித்து அச்சிட்டிருப்பது தங்களுக்கு சந்தோஷமே உண்டாயிருக்கிறது. பல பாட்டுகளைவிட்டு அச்சிட்டிருப்பது தங்களுக்கு வருத்தத்தை உண்டு செய்திருக்கிறது. புராணங்களைக் குறுக்குகிறது நான் ஆரம்பித்த வழக்கமில்லை. ராமாயண ஆரம்பத்தில் பார்த்தால் ஆதியில் அது ௧00-கோடி சுலோகம் கொண்டதாயிருந்ததாகவும் பிறகு நாளாவர்த்தியில் ஜனங்களுடைய சிரத்தை சாவகாசம் முதலியவற்றின் குறைவைக் கருதி

அப்போதைக்கப்போது ஆசிரியர்சுருக்கினர்களென்றும் ஏற்படும். தமிழிலும் தொகை நூல்களெல்லாம் வேறு விஸ்தாரமான செய்யுள் தொகுதிகளினின்று சுருக்கப் பட்டவை என்று ஏற்படும். பஞ்ச தந்திரமும், வில்லி புத்தூரார் பாரதமும் முதனூலில் பெரும்பாகங்களை வெட்டிவிட்டுக் கதைச் சிதைவின்றி எழுதப்பட்டவை என்று தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

நான் கம்ப ராமாயணத்தைச் சுருக்கியதன் காரணம் தங்களுக்குஅனுப்பிய விளம்பரத்தில் எழுதியிருக்கிறது. இக் காலத்தில் காவியம் பெரிதாக இருக்கிறது என்ற காரணம் பற்றியே அநேகம் அறிவாளிகள் (ஆங்கிலம் கற்றவர்களுக்குள்ளே) கம்ப ராமாயணத்தைத் தொடு வதில்லை. இக் காரணத்துக்காக அதைப் படித்து அனுபவித்து அதன் யோக்கியதையை வெளிப்படுத்தக் கூடிய மேதாவிகள் அதைப்படிக்காமலே இருந்துவிடு தல் தீங்கா? அல்லது கம்பராமாயணத்தைச் சுருக்கி அச்சிடுவது தீங்கா? என்று யோசிக்க வேண்டும். தவிர பால காண்டத்தில் மிக உயர்ந்த பாட்டு என்று ரஸிகர் கள் மதிக்கத்தக்க பாட்டுக்கள் அனைத்தும் என் பதிப் பில் வந்திருக்கின்றன. விடப்பட்ட பாட்டுகளில் ஒன் றேனும் எடுத்திருக்கிற பாட்டுகளைவிட உயர்ந்ததாக இரா. தவிர கதை சிதைவின்றி ஆற்றுப் பெருக்குப் போல வரும்படியேதான் நூல்சுருக்கப்பட்டிருக்கிறது. ௬௭-பக்கங்கள்கொண்ட முகவுரையில் கம்பனுடைய கவியழகைப்பற்றி எனக்குத் தெரிந்தமட்டில் கூறியுள்ள முகவுரையைப் போல எழுதிப் படிப்போருக்குக் கம்ப ராமாயணத்தில் சுவை உண்டாகுமாறு செய்திருக்கி றேன். என் பதிப்பு சாதாரண பதிப்பை ஒட்டும் கருத் தோடு போடப்பட்டதும் அல்ல. என் பதிப்பிலுள்ள சுருக்கத்தைப் படித்துவிட்டுப்படித்தோர் சுருக்கத்தி லேயே இத்தனை மதுரமாக இருக்கையில் சம்பூரண மான நூலைப்படிக்காமலிருக்கக் கூடாதென்றே எண்ண வேண்டும் எனபது என் கருத்து. காகிதமும் மலிந்து தமிழுலகம் நான் பிரித்திருக்கிற ரீதியை ஏற்றுக்கொண் டால் ஏழு காண்டங்களையும் சுருக்கி ஒரு பதிப்பும், சுருக்காமல் ஒரு பதிப்பும் போடவேண்டும் என்பது என் நோக்கம். "இலியாது" முதலிய மேனாட்டு மகா காவியங்களும், "ஹெரிவார்டு தி வேக்" "டாலிஸ்மன்," "ஐவான்ஹோ" முதலிய கதைகளும் இன்னும் பலவும் சுருக்கப்பட்டிருக்கின்றன. இதனால் சிறிது காலம் பொழுதுள்ளவர்களும் இப் பெரிய நூல்களிலுள்ள பெருஞ் சுவையில் உயர்ந்தபாகத்தை அனுபவிக்கும்படி நேருகிறது. நமது நாட்டில் அறிவுடையவர்களில் பெரும்பாலர் தமிழை திரஸ்கரித்து மேனாட்டு பாஷை களையே கற்று அவைகளையே சுவைத்துக்கொண்டு வருகையில் இதுபோன்ற சுருக்கம் அவர்களைத் தங்கள் பாஷைகளிலுள்ள மகா காவியத்தையும் பார்க்காமலி ருக்கத் தற்காலம் சரியான காரணமில்லை என்று நினைக் கும்படி செய்யும். தமிழில் ஆழ்ந்திருப்பவர்களுக்குக் கூடப் பாலிலிருந்து வெண்ணெயைத் திரட்டி எடுப் பதுபோல மிகவும் அரிய செய்யுள்களைத் தனியே திரட்டி வைத்திருப்பதில் அதிருப்தி ஏற்பட நியாய மில்லை. ஆகையால் இப் பதிப்பு அறிவாளிகளில் ஒரு சாரார் தமிழைப்படிக்காமல் நிறுத்துவதைத் தடுப்பதற் கென்று பிறந்திருப்பதால் தமிழின் இளமையை மறு படி கொண்டுவருவதற்காகவே உதவி புரியும் என நம் புகிறேன்.

எதற்கும் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்ததற் காக நான் வந்தனம் செலுத்துகிறேன். தங்களுடைய தமிழபிமானத்தை அது எனக்குக் காட்டிற்று. என் பதிப்பு தமிழின் மரணத்துக்குத் தொலைவாகவேனும் காரணமாணவேனும் இருக்கும் என்று எனக்குத் தோன்றினால் இத்தனை பணம் செலவழித்திருந்தும் நாம் கஷ்ட நிலைமையிலிருப்பினும் இன்றைக்கே என் கையிலுள்ளபிரதிகளனைத்தையும் தீக்கிரையாக்குவேன். தங்கள் கடிதத்தைக் கண்ட பிறகும் அது இதற்கு மாறான குணமுடையது என்று தோன்றுவதால் அதைப் பரப்ப முயன்றுகொண்டிருக்கிறேன்.

இங்ஙனம் தங்கள்,
வ. வெ. சுப்பிரமணிய ஐயர்

இக் கடிதமே நமது மஹரிஷியோடு நாம் உறவு செய்த வருஷத்ததாகும். இது முதல் வாரம், பட்சம், மாதங்கள் தோறும் கலைத்திறம், தேசாபிமானம், ஆசா ரத் திருத்தம் ஆகிய விஷயங்களைக் குறித்த கடிதங்கள் ஏராளமாக நடைபெற்று வந்தன. ஒவ்வொரு கடிதத்தி



லும் வீர வாழ்வின் பிரகாசமும், சுதந்திரத்தின் சுவை யும் ததும்பித் ததும்பி வழிந்த வண்ணமாக இருந்தது.

## பாலபாரதி எண்ணம்

மஹரிஷி புதுச்சேரியி லிருக்கும்போதே கல்கத்தா மாடான் ரெவியூ பத்திரிகை போன்ற ஒரு தமிழ் மாதப் பத்திரிகை யொன்றைப் பிரசுரிக்கும் பேரவாக்கொண் டிருந்ததைத் தெரிவித்து வந்தார். தொண்ணூறு பக் கங்களும் பல படங்களும் நிறைந்த ஒரு சக்தி வாய்ந்த மாதத் தமிழ்ப் பத்திரிகையாகிய சூரிய வொளியைக் கொண்டே தமிழர்களின் மனவிருளை ஓட்டி, இவ் வுல கத்தில் தாங்களும் மனிதர்கள் தான் என்ற தெளிவை யுண்டாக்க வேண்டும் என்ற பேரெண்ணத்தை அடிக் கடி எனக்கு எழுதி வந்தார்.

கடைசியாகப் புதுச்சேரியினின்றும் வெளியில் வந்த பின்னும் அதே எண்ணத்தைச் சீக்கிரம் நிறைவேற்ற இச்சிப்பதாக எழுதினர். என்றாலும் பணமுடையால் அவர் அடைந்த கஷ்டங்கள் பல. நல்லோரை நாடும் சுபாவம், அச்'செல்வி' என்ற விபசாரிக்கில்லை. அத் திரு மகளாகிய வேசை பெரும்பாலும் துஷ்டனோடு சேர்ந்து சுகிக்கவே இச்சிக்கிறாள். அது அவள் சுபாவ மாகும். என்ற போதிலும் நமது மகரிஷி அத் தரித்தி ரத்திற்குத் தோற்றுப் பின் வாங்கவில்லை. புதுச்சேரி யினின்று விடுதலை யடைந்தபின் அவரது எண்ணங்கள் பழயனவோடு பல புதியனவும் பெருகிற்றேயன்றிக் குறையவில்லை.

## தமிழ்க் குருகுல இச்சை

தான் வெளியில் வந்துவிட்டாலும் ஒரு சிறு சிறைச் சாலையினின்றும் பெரிய சிறைச்சாலையாகிய நம் பாரத நாட்டில் நுழைந்திருப்பினும் தன் தமிழருக்கும், தமிழ்த் தாய் பாஷைக்கும், தன் தாய் நாட்டிற்கும் எவ்வித ஊழியம் செய்தால் தன் தேசாபிமான தாகம் தணியத் தகுதியுள்ளதாகுமென்று பலவிதத்திலும் யோசித்துக் கடைசியாகத் தமிழ்நாடு செய்த தவப்பயனாலும், தமிழர் களின் அதிர்ஷ்ட வசத்தாலும், நம் தமிழ் மக்களின் இருளடைந்த மனதில் விஞ்ஞான வொளி வீசச் செய்ய வும் தமிழ்க் குருகுலம் ஒன்றை ஸ்தாபிக்க எண்ணம் கொண்டார். இவ் வெண்ணம் புதுச்சேரியிலிருக்கும் போதே உதித்ததாகவே நாம் ஊகிக்கிறோம். எப்படி யிருப்பினும் புதுச்சேரி விடுதலைக்குப் பிறகே இவ் வெண்ணத்தைக் குறித்து வேலை செய்ய ஆரம்பித்தார்.

## தமிழர்களின் அன்பு

ஜனக்கூட்டங்களுக்கு முன்னின்று பல பிரசங் கங்களைத்தான் செய்யாவிட்டாலும், பல சபைகளில் தலைமை ஸ்தானம் வகித்துப் பிரசங்கங்கள் செய்யா விட்டாலும் தன் ஒதுங்கிய புதுச்சேரி வாழ்க்கையின் தவநிலையைத் தமிழர்கள் நன்கு அறிந்து தன்னை அன் புடன் ஆதரித்து வருவதையும், தன் தேசாபிமானத் தில் தமிழர்கள் பூரண நம்பிக்கைகொண்டிருப்பதையும் பல தமிழர்களிடையில் பழகித் தெரிந்து கொண்டவ ராய் மனத்திடமும் ஊக்கமும் பெருகும்படி செய்து கொண்டார். ஆகவே இந்தத் தலைமையற்ற, தெளி வற்ற, விரிந்த, விவேகமற்ற அந்தகத் தமிழர்களை எப் படியும் திருத்தித் தனது தமிழ் நிலையைக் காட்டவும் இதுதான் சமயம் என்றும் அதற்குத் தமிழ்க்குருகுலம் என்ற ஸ்தாபனமே சரியான வழி யென்றும் தெரிந்து கொண்டார். ஆனால் நம் நாட்டில் முற்காலத்தில் பல ரிஷிகுலங்களும் குருகுலங்களும் இருந்து வந்தது வாஸ் தவமேயானாலும் நம் பாரதியின் துர்த்தசையால் அவை கள் அழிந்து மடிந்து போனமையால் இந்தக் காலத் தில் ஸ்தாபிக்கப்பட்டு நன்கு நடக்கப்பட்டுவரும், காங் கேரியிலுள்ள ஸ்வாமி சிரத்தா நந்தாவின் 'ஆரியசமாஜ' குருகுலம், போல்பூர் 'விஸ்வபாரதி' முதலிய ஸ்தாபனங் களைப் பார்த்துப் படித்தறிந்து வர இச்சை கொண்டு

## வட இந்திய யாத்திரை

௧௯௨௦-ம் வருஷம் மே மாதத்தில் வட நாட்டை நோக்கிப் புறப்பட்டார். மஹரிஷி பம்பாய் மார்க்க மாகப் புறப்பட்டு பம்பாய், நாசிகை, பஞ்சவடி, புனா முதலிய இடங்களையும் மகாத்மாவின் சத்தியாக்கிரஹ ஆசிரமத்தையும் பார்த்துக்கொண்டு ஹரித்துவாரத்தை யடுத்த காங்கேரி குருகுலம் வந்து சேர்ந்தார். அவ்

விட்டங்களில் பார்க்கவேண்டியவைகளைப் பார்த்துக் கொண்டும் அறிய வேண்டியவைகளை அறிந்துகொண்டும் ௩௦—௫—உ௦ல் காசிக்கு வருவதாக எமக்குக் கடிதம் எழுதினர்.

## என் குடிசை

ஸ்ரீ கிருஷ்ணனை எதிர்பார்த்த விதுரன் போலவும், மஹா பீடர் சக்கரவர்த்தியை எதிர் பார்த்த குடியானவனைப் போலவும் ஸ்ரீ ராமனை எதிர் பார்த்த சபரித் தாயைப் போலவும் மஹரிஷியை எதிர்பார்த்து, எப்பொழுது விடியுமெனக் காத்திருந்தேன். ககஉ௦ம் வருஷம் மே மாதம் ௩௦ம் தேதி காலை என் தேக சுகம் நன்றாக இல்லாமையால் என் மருமான் சுப்பிரமணியனை ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு, மஹரிஷிக்கு எவ்வித உபசாரம் செய்வதென யோசனை செய்துகொண்டிருந்தேன். கடைசியாக மஹரிஷி என் குடிசைக்கு வருவதற்கு சமயம் சமீபிப்பது போல் தெரிந்ததும் வந்தவுடன் நான் செய்யும் உபசாரம் இன்னதென எனக்குத் தெரியவில்லை. கடைசியாகப் பூமாலையிலும் 'பாமாலையே' ரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் மிகப் பிரியமானதென்று எனக்குத் தோன்றினமையால் அடியிற்கண்ட செய்யுட்களை அங்கிமிடமே பாடி முடித்தேன். கவிகளின் அமைப்பும், பொருளமைதியும், என்னைத் திடுக்கிடச் செய்தது. அக் கவிகள் அம் மகானின் திறமையும் குணமும் தேசாபிமானமும் உண்மையாக அமைந்தது அவருடைய குண மகிமை யென்றே கண்டேன்.

## அக் கவிகள் இவை

### நல் வரவு

பன்னு செந்தமிழ்ப் பாண்டியன் கழகமோ பனுவற்
குன்று தன்சிர முருட்டிய வரங்கனுள் ளுறையோ
மன்னும் நாவல சுப்பிர மணியநீ வருதற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லின்றே.

நல்வரவு நின்வரவா குகாங்கள்
நாடெலாம் நலிய நின்னைப்
பல்வருடந் தடுத்தாண்ட பழியகலப்
பழிக்கெதிராம் பலன்க ளோங்கக்
கல்வியறி வொடுமொழுக்கம் கலைஞானம்
பெருஞ்செல்வங் கவின வோங்கித்
தொல்லுலகிற் பாரதநா டெங்கெலாம்
புகழ்வளத்துத் துலங்க மாதோ.

அந்நாளில் நகரிழந்தும், நாடிழந்தும்,
வீடிழந்தும் அலைந்துங் காட்டில்
பன்னூறாண் டயர்ந்த பாரதரே
பனி நீக்கும் பரிதி யேபோல்
பின்னாளிற் பகைதடிந்து தமதுரிமை
பெற்றமுறை பிசகாவண்ணம்
நின்னாலும் நினைப்போல்வார் தம்மாலும்
பெறவருதல் நிஜமே யாமால்.

குறையிலார் குற்றமிலார் கோளிலார்
குணக்கேடாங்கொள்கை யில்லார்
சிறையிலாம் புகப்பெறுவார் தெளிந்து செயல்
வகையின்றித் தேய மெங்கும்
முறையிலார் கோலோச்ச முழுதுணர்ந்தார்
வாயின்றி மூங்கையாவார்
அறையிலார் அம்மம்ம எவர் பொறுப்பா
ரித்துயரமவனி மீதே?

மறை யிருந்த திருவாயும் மதியிருந்த
மனவலியும் வைரம் பாய்ந்து
நிறையிருந்த தேசாபி மானமெனும்
நெருப்பிருந்த நிலையும் நேரப்
பொறை யிருந்த தவவலியும் கலைவலியும்
புவிமுழுதும் புகழ மீண்டும்
சிறையிருந்த வ.வெ. சுப்பிரமணியன்
திரும்பினன் ஜயங்கொண்டே.

இக் கவிகளின் கடைசிக் கவி நான்காவதடி முடிந்தும் முடியாமலுமிருக்கும் சமயம், மஹரிஷி எனது குடிசைக்குள் நுழைந்தார். அம் மகானை உடனே எதிர்கொண்டழைத்து உபசரித்துப் பணிந்து நான் கிருதார்த்தனானேன்.



மஹரிஷியை நேரில் நான் பார்த்ததும் ஒரு பிரமிப்பையடைந்தேன். விரிந்த சிர ரோமமும், வளர்ந்த தாடியும் வீரம் நிறைந்த கண்களும், அன்பு ததும்பும் முகமும் என் மனதைக் கலங்கச் செய்தன. ஆதி காலத்து மஹரிஷிகளின் கூட்டத்தில் ஒரு யௌவன ரிஷிபிண்டத்தைக் கண்டவனேயானேன். இன்றும் என் கண் முன் அவ் வுருவம் அப்படியே பிரத்தியட்சத்தில் நிற்பதுவே என் பாக்கியமாக விருக்கிறது. இந் நிலையில் மஹரிஷி அருவியில் விழுந்து இறந்துவிட்டார் என்ற கதையை நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். ஏனெனில் அம் மஹரிஷியின் பிரத்திட்சக் கவர்ச்சியால் கவரப்பட்டிருக்கிறேன்.

## பிராயச்சித்தம்

பின்னர் ஒரு நாள் முழுவதும் பழமையும் புதுமையுமான தேசாபிமானச் சம்பாஷணை நடந்தபின் தான் ஐரோப்பா சென்று வந்திருப்பதால் தன் பந்துக்களின் விருப்பப்படி பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டுமென்று விரும்புவதாகத் தெரிவித்தார். இவ் வுரை கேட்டதும் ஒரு பால் ஆனந்தமும் ஒரு பால் வியப்பும் கொண்டவனாய் நெருப்புக்குப் பரிசுத்தமும், சூரிய ஒளிக்கு அழுக்கு நீக்கும் ஸ்நானமும் உண்டா? தங்களுக்கா பிராயச்சித்தம்? தங்களுடைய பரிசுத்த நிலையே அடிமைகளாகிய இந்தியர்களைப் புடம் வைத்துப் பரிசுத்தம் செய்யத் தக்க தாயிற்றே! இது வேண்டற்பால தன்றே என்று மறுத்தேன். மஹரிஷி என் வார்த்தைகளுக்குக் குலுங்க நகைத்தோராய் தாங்கள் சொல்வது சரியேயாகும் எனினும் என் பந்துக்களின் விருப்பப்படி நான் அந்தப் பரிகாரத்தை வெளிப்படையாகச் செய்து கொள்ளவே வேண்டியிருக்கிறது. ஏனெனில் நான் ஊர் சென்றதும் கேட்பார்கள் அவர்களை உண்மையால் திருப்தி செய்யவேண்டியது என் கடமை யென்றார்.

மஹரிஷியின் மனம் போலவே காசி வைதீகர்களைக் கொண்டு சிறப்பாகப் பிராயச்சித்த கருமங்கள் செய்து வைக்கப்பட்டது. மஹரிஷி மிகவும் சந்தோஷப்பட்டார். அவர் பிரஞ்சு நாட்டின் தலைநகராகிய பாரிஸ் பட்டணத்திலிருக்கும்போது, சில பிரபல பிரஞ்சு சமஸ்கிருத வல்லுனர் இந்து ஆசாரங்களைப் பற்றியும் கருமானுஷ்டானங்களைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தபோது பிராமணர்கள் அனுஷ்டித்துவரும் கருமானுஷ்டானங்களைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்த போது பிராமணர்கள் அனுஷ்டித்து வரும்கருமானுஷ்டானங்களாகிய பர அபரக்கிரியைகளைப் பிரஞ்சுக்காரர் போன்ற ஐரோப்பியர் சமீபத்திலிருந்து பார்க்கலாமா என்று கேட்டதாகவும் அவ் விதம் பார்ப்பது கஷ்டமென்றும் ஆனால் அவ் வைதீகர்களை நாம் வேறாக அழைத்து மாதிரிக்குச் செய்துகாட்டச் சொன்னால் செய்து காட்டுவார்கள் என்றும் தான் பதில் சொன்னதாகவும் தெரிவித்தார்.

இரண்டொரு தினங்களில் பிராயச்சித்த கருமங்கள் முடிந்த பின் அச் சமயம் இவ் வூரில் நடந்த சகல இந்திய காங்கிரஸ் கமிட்டி மீட்டிங்கிக்கு மஹரிஷி சென்றிருந்தார். நானும் உடன் சென்றேன. மஹரிஷி இதுவேதான் புதுச்சேரி விட்டு வெளியில் வந்த பிறகு நாட்டுத்தலைவர்களை முதலில் சந்திக்கும்சமயமாகஇருந்தது. பெரும்பாலானதலைவர்கள் மஹரிஷியைக்கட்டித் தழுவி ஆனந்த மடைந்தார்கள். மஹரிஷிக்கு அக் கமிட்டி மீட்டிங்கில் ஆஜராயிருந்த லோகமான்ய பால கங்காதர திலகனிதியைப் பார்த்துப்பேசவேண்டும்என் பதே யாகும். ஆனால் மீட்டிங்கின்அவசர வேலைகளால் அன்று பார்க்கமுடிய வில்லை. ஆனால் மறுதினம்முயன்றும் திலகமஹரிஷிக்குப் பலவேலைகள்தொடர்ந்திருந்தமையாலும் நமது மஹரிஷிக்கும் பல அவசரவேலைகளிருந்தாலும் சாத்தியப்படவில்லை. அச்சமயத்தில் வடநாட்டுத் தென்னாட்டுச் சகல பெரியோராலும் கொண்டாடப்பட்ட நமது மஹரிஷி கூடிய சீக்கிரம் காசி விட்டுத் தெற்கே புறப்பட்டார்.

ஆனால் இச் சமயத்தில் நாம் குறிப்பிடத்தக்க இரண்டொரு விஷயங்களை இங்கு குறிப்பிடுவோம். நமது மஹரிஷி அச் சமயம் பழமையான இந்திய உடை தரித்திருந்ததையும் குடுத்தா பனியன் முதலிய ஒரு வித அங்கியுமில்லாதிருந்ததையும் நான் கண்டு குடுத்தாவும், அங்கியும், பனியனும் கூட அணியாததற்குக் காரணம் கேட்டேன். அதற்கு அவ்வுடைகள் ஐரோப்பிய உடைகளா யிருப்பதுவே காரணமென்று கூறினர்.

அதற்கு நான் "கஞ்சுகி" என்றபதம் குடுத்தாவையே குறிப்பதாகும் என்றும் இராமாயணத்தில் கூட "கஞ்சுகியால் நின்றானை" என்று கம்பன் கூறியுள்ளானென்றும், நம் நாட்டில் அரசர்களும் உத்தியோகஸ்தர்களும் வைதிகர்களும் கூட கஞ்சுகி யென்றழைத்த உடையை யணிந்திருந்ததாகப் பழமையான நூல்களில் காணப்படுகின்றன வென்றும் ஆகவே கஞ்சுகி நம் நாட்டு உடையே யன்றி அன்னிய உடையல்லவென்றும் கூறினேன். எமது வார்த்தையை மஹரிஷி ஆட்சேபணையின்றி ஒப்புக்கொண்டது மிக மகிழ்ச்சியைத் தந்தது. அதிக்கிரமித்து நம் நாட்டை அடிமைகொண்ட அன்னியரிடம் நமக்குள்ள பெரும் பகைமையைக் காட்டுவதற்கு அடையாளமாக ஏதாவதொரு "பகைமறை அடையாளத்தை எப்பொழுதும் நாம் உடைத்தாயிருப்பது நலமே என்றும், ஏன் எனில் அன்னியரின் நற்குணங்களை நாம் புகழ்வோமாயினும் அன்னியநாட்டை அடிமை கொள்ளும் துர்க்குணத்தை எப்போதும் நாம் வெறுக்கிறோம் என்பது உண்மையே யாதுமென்றும் நான் கூறினேன். இதற்கடுத்ததாக மஹரிஷி புறப்படச் சில மணிகளுக்கு முன் நான் பேசியதாவது:— "தமிழ்க்குருகுல விஷயமாக ஒரு நிச்சயவிதிகளை முதலிலேயே வெளிப்படுத்திப் பணம் வசூலிப்பது நல்லதெனக் கூறினேன். அவ் விடயத்தைப் பல நண்பர்களுடன் யோசித்து எழுதுவதாக உத்தரவளித்துப் பிரியா விடை கொண்டார். தெற்கே சென்ற சில மாதங்களுக் கெல்லாம் "தேசபக்தன்" ஆசிரிய ஸ்தானத்தை ஒப்புக் கொண்டார்.

## தேசபக்தன் சேவை.

முதலைவாய்ப் பிள்ளையை யழைத்த சுந்தரர்போலவும் என்பைப் பெண்ணுருவாக்கிய ஞானசம்பந்தரைப் போலவும் சிறிய தேசபக்தனை ஆதரவாகக் கொண்டு தமிழ் மொழிக்குப் புத்துயிரும், தமிழர்களுக்குவீரமும், ஊட்டி தமிழ் நாட்டைத் தூக்கத்தினின்றும் உசுப்பி வந்தார். என்ன வீர ரச வியாசங்கள், என்ன விஞ்ஞான ராஜதந்திரம் என்ன உயிரளிக்கும் உரைகள் பத்திரிகைக்குத் தானமளிக்கப் பட்டன. ஆப்கானிஸ்தானத் தாசனுக்கு முடி சூட்டிய சந்தர்ப்பத்தைப்பற்றி ஒரு தலையங்கம் என்னைப் புதுமனிதனே யாக்கி விட்டது. முகமதியரின் உள்ளமும் ஆங்கிலேயரின் எண்ணங்களும் அடியோடு திடுக்கிட்டேயிருத்தல்வேண்டும்.

இவ் வாறு சிறிது காலமே இப் பத்திரிகை நடப்பினும் மஹரிஷியின் மூளை வலியால் ஆங்கில அரசாட்சிக்கு மூளை வலி யுண்டாக்கி விட்ட தென்பதில் ஆட்சேபணை யில்லை.

எனினும் நமது மஹரிஷி செய்யாத குற்றத்திற்காக ஆங்கில ஆட்சியோர் நம் ரிஷிக்கு அப்பத்திரிகை நின்ற சில மாதங்களுக்குப் பின் ஒன்பது மாத வெறுங்காவல் தண்டனை விதித்தார்கள். விதித்தும் சிறைக் கூட்டிற்குள் நமது மஹரிஷி வீணாக யிருக்கவில்லை.

## கம்பனின் கலை யாராய்ச்சி.

அந்த அற்பகாலமாகிய சிறை வாசத்தில் கம்பன் கலையாராய்ச்சியைப் பற்றி ஆங்கிலத்தில் கீர்த்தி பெற்ற விவகார விவரணம் எழுதத் தொடங்கினார். அச் சிறைக் கூடத்திலிருந்து எமக்கு எழுதிய கடிதத்தில் அடியிற் கண்டவாறு எழுதியிருந்தார்.

## பல்லாரி சிறைக் கடிதம்.

அன்புள்ள சகோதர,

நான் இங்கே இருக்கிற சங்கதியைப்பற்றித் தாங்கள் பத்திரிகைகள் மூலம் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன். இன்னும் ஆறு மாதங்கள் இங்கே இருக்கவேண்டியிருக்கிறது, அவையும் இம் மூன்று மாதங்கள் சென்றது போலவே இலக்கிய முயற்சியில் கழியும் என்றே எதிர் பார்க்கிறேன்.

தங்கள் சரீர நிலைமை எப்படி யிருக்கிறது. அறிய ஆவலுள்ளவனாக இருக்கிறேன். தவிர சகோதரியும், நமது பீஷ்ம, துரோணாதியரும் வயதுக்கும் நிலைமைக்கும் தக்கபடி க்ஷேமமாய் இருக்கிறார்களா என்றறிய விருப்பம். எனக்குப் பிராயச்சித்தாதிகள் செய்து வைத்த நண்பர் எல்லோரையும் விசாரித்ததாய்ச் சொல்லவேணும். இனித்தங்களால் இப்பொழுது எனக்கு



ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறது. அஃதாவது நான் எழுதிவரும் Study of Kamban ல் வால்மீகியும் துளசிதாசரும் எழுதியுள்ள ராமாயணங்களின் அந்தந்தக் கட்டங்களைக் கம்பனுடைய கட்டங்களோடு சீர்தூக்கிக் காட்ட வேண்டிய அவசியமாக இருக்கிறது. அதற்காக Griffth's Translation of Valmiki Ramayanam &Tulasi Das ஆகிய இவ் விரண்டு நூல்களும் எனக்கு அவசியமாயிருக்கின்றன. இது தவிர திலகரின் "கீதாரகசியம்" பார்க்கவேண்டும் என்கிற ஆசையிருக்கிறது. இந் நூல்களில் குறைந்தது இரண்டு காசியில் கிடைக்குமாதலாலும் அவைகளை வருவித்துத் தருவோர்கள் வேறொருவரும் இல்லாமையாலும் தற்காலம் சிறையில் என்னிடம் உள்ள பணம் இவை வாங்கப் போதியதல்ல வாதலாலும் தங்களுக்குச் சிரமம் கொடுக்கிறேன். சிறை நின்று வெளிவந்ததும் அவற்றின் விலையைத் தங்களுக்கு அனுப்பிவிடுகிறேன்.

(க) கீதாரகசியம் ஹிந்தி தர்ஜுமாவானது ஹிந்தி பிரசார புத்தக சாலையிலாவது வேறு ஹிந்தி புத்தக சாலையிலாவது அகப்படும். விலை ரூ ௩—௪—௦.

(உ) Griffths Valmiki விலை ரூ ௧௦ Luzac Co ல் அகப்படும். இது பனாரஸிலேயே உள்ள புத்தகக் கடை. அங்கே கிடைக்காவிடில் Chakravarti Chaatterjee Co, College square Calacutta என்ற விலாசத்திலகப்படும். அவர்களுக்கு Discount ஏதாவது தள்ளுவார்களா? தபால் செலவு என்னஎன்றுகேட்டுப்பணத்தை அனுப்பி அங்கிருந்து எனக்கே நேரே ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பச் சொல்லலாம். என் விலாசம் குறித்தனுப்பவும்.

௩ Griffith's Tulasi Das Ramayanam Luzac Co ல் அகப்படும். அதன் விலை ரூ ௫. அப் புத்தகங்கள் வியாபாரிகளுக்கு 33 % விலையில் தள்ளிக்கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

Study of Kamba ல் ௩௬௦ பக்கம் முடித்திருக்கிறேன். இப்பொழுது லக்ஷ்மணனுடைய குண விமர்சனத்திலிருக்கிறேன். புத்தகம் ௫௦௦ பக்கம் வரையில் போகும் என நினைக்கிறேன். உதாரணப் பாட்டுகளை ஆங்கிலக் கவியாகவே பெரும்பாலும் செய்ய முயன்று வருகிறேன். வட நாட்டு வித்துவான்களுக்கும் தமிழ் நாட்டவரில் தமிழை மறந்தவர்க்கும் கம்பனுடைய பெருமையைக் கூடிய மட்டில் வெளிப்படுத்திக் காட்டும் என நம்புகிறேன்.

தங்களுக்குப் பிராணாயாமசித்தி கிடைத்துவிட்டதா? வியாபாரம் செவ்வனே நடந்தேறி வருகிறதா? நாட்டிலுள்ள குழப்பங்களெல்லாம் அடங்கி நமக்கு நல்ல காலம் சீக்கிரம் கிடைக்கவேண்டும் என்று ஜகதீசுவரியை தினம் பிரார்த்தித்து வருகிறேன்.

தங்கள் குழந்தைகளுக்கு அவரவர்களின் பேருக்கு ஏற்ற குணங்கள் வளரவேணுமென்று நான் ஆசீர்வதித்ததாய்ச் சொல்லவேண்டும்.

வந்தேமாதரம்

வ. வெ. சு. ஐயர்.

என் விலாசம்.

V. V. S. Aiyer
Reg. No 65 H
Central Jail
Bellary.

அக் கடிதத்தைக் கண்டு கிரிபித் இங்கிலீஷ் ராமாயணமும் இந்தி துளசி தாஸ் ராமாயணமும் அனுப்பிக் கொடுத்தோம். (திரு. ப. ஆதிமூர்த்தி.)

(தொடரும்)

# பைந்தமிழ்ச் சோலை

(திரு சுத்தானந்த பாரதியார்)

*தாய்மொழியுந் தன்னறமுந் தாய்நாடுந் [தண்ணளியின்*
*ஈயுமிறை நல்லடியும் ஏத்து.*

ஆங்கில நெய்தற் சோலையில் உலவினேன். செகசிற்பியாரின் கூத்திலக்கியத்திற் குளித்தேன். அமலாதிதன் நெஞ்சோடு கிளர்த்தலும், லீயர் மன்னன் சுற்றம் முனிவதும், கார்தினல் உல்ஸி தான் மன்னர் சேவை செய்த வீணுட்களுக்கு இரங்குவதும், யூலிய கேசரியின் முடிவுக் காட்சியும், அந்தோனியின் அமைதியான கூர் மொழிகளும், உரோமியன்னின் காதலும், என் எதிரே நின்று பேசின. கடலினும் ஆழ்ந்த கருத்துக்களும், மலையினும் உயர்ந்த மாண்பும், இளவேனிலின் இனிய நடைபழகும், பொருட் செறிவும், கதை நுட்பமும் என் நெஞ்சைத் தம் வயப்படுத்தின. "எழுமின்! விழிமின்!" என்று மில்தன் பாடிய "இழந்தவின்" என்னைத் தட்டி யெழுப்பியது. காட்டில் களிப்பையும், தனிமையில் ஆர்வையும், மக்களற்றவிடத்தில் நண்பரையும், கடலின் ஓசையில் பாட்டையும் உணர்ந்து, மக்களிடம் அன்பிற் குறையாது, இயற்கையிடம் பேரன்பு பாராட்டும் பைரன் இதாலியாவையும், கிரேக்க நாட்டையும், அவற்றின் பழம்புகழையும், தற்போது அவற்றிற்குற்ற தாழ்வையும் உருகிப் பாடிய உயர்ந்த அடிகள் என் எண்ணங்களை உயர்த்தின. "ஏழை மனிதனே! கொடுங்கோலின் அரியணை உன் தளர்வின் மீதே எழும். அத் தளர்வை மறந்து, கடவுள் உனக்கு ஈந்த உயர் பணியைப் பொறுமையுடன் செய்" என்னும் வேத்ஸ்வர்த்தின் இயல் வளஞ் சிறந்த பாக்கள் எனது நெஞ்சை அள்ளின. இன்னும் கீத்ஸ் ஷெல்லி; கோல்த்ஸ்மித் முதலிய காவிய வீரரின் தெளிவும், அதிஸன், ஸதில், மெகாலே, ஸ்காத் போன்றோரின், இணையற்ற உரை நடைகளும் என்னுள் இன்பத்தைப் பாய்ச்சின. ஆங்கில இலக்கியச் சோலையில் எல்லா நாட்டுப் பெரியோரும், கவிகளும், மகிழ்வதைக் கண்டேன். கிரேக்க நாட்டுக் கவியரசான ஹோமர் ஆங்கில உடையுடன் "நாட்டினர்களே! பொறுமின்! ஒருவரை பொருவர் கொல்லுவதினின்று உங்கள் வெறி பிடித்த கைகளை நீக்குமின்! அமைதி வருகிறது" என்று தன் இலியாதைப்பாடி முடிக்கிறான். மோலியர், ஷில்லர், கெதே, தாந்தி, வர்கிலியன், காளிதாஸன், தாகூர், இன்னும் உலகின் இளவேனிற்சோலைக்குக் குயிலாக விளங்கும் பாவலரெல்லாம் ஆங்கிலச் சோலையை அணிபுறுத்தி நிற்கின்றனர். அறிவு நூலார் 'தம்மதே உலகு' என்னும் பெருமையுடன் உலவுகின்றனர். உலகின் அறிவும், தொழிலும், அனைத்தும் அடங்கி இன்னும் விரிந்த இந்த நெய்தற் சோலையில் மயங்கி என்னையே மறந்தேன். ஆங்கில மாது வாகை புனைந்து தானே மொழியரசி யென்னும் செல்வச் செருக்குடன், பிறமொழிகளெல்லாம் தனக்கு நடைபாவாடை விரிக்கப் புலவர் விழித்தாமரை பூத்த கவித்தடத்தில் அரச அன்னம் போல் நடக்கின்றனள்! அவள் அணிந்த பாமாலைகளின் இயல் மணமே என் காற்றுப் பையை நிறைத்தது. இந்த நெய்தற் சோலையில் என் நெஞ்சம் வேரூன்றியது.

இவ்வாறு ஆழ்ந்த நெஞ்சை ஒரு நறுமணச் சிறுகால் அழைத்தது. எப் பூவினின்று அந்த



ணம் வருகிறதென்று அறிய ஆவல்கொண்டு சன்றேன். ஆ! திருக்குறள் என்ற வாடா மல ன்றோ அத் தென்றலை ஊட்டியது! அத் தேன் லர் என்றும் நாண்மலராய் விளங்குகிறது. ந்த அறமாதின் திருவணி மலரைக் கண்ணி லாற்றிப் புண்ணிய மெய்தாப் புவியினர் இல்லை. ந் நாட்டாரும் தம் நாட்டுமொழிகளில் பெயர்த் ப் படிக்கும் என் தெய்வத் தமிழின் தேறலான ருக்குறளைக் கண்டதும் தாய்மொழி யன்பு ததும்ப, தமிழையும், தமிழரையும், தமிழ் நாட டையும் எண்ணினேன். ஆங்கில அரசிக்குக் றையாத பெருமையுடன் எனது தமிழ்த் தாய் ரு காலத்தில் உலவிய திருவை எண்ணி உருகி னது நெஞ்சு அன்பாலும் நன்றியாலும் றைந்தது.

தமிழே! தமிழே! தாய்தரும் அமிழ்தே
சங்கரன் வீற்ற சங்கத் தமிழே!
பாண்டியன் வளர்த்த பச்சிளந் தமிழே!
யாண்டும் புகழ்பெறும் அருங்கலைத் தமிழே!
பொதிகைத் தென்றலும் பொன்னியும் பாடும்
மதிமிகு பெரியோர் வழிபடுந் தமிழே!
கவின் பெருங் கவியணி கடவுள் தமிழே!
புவிக்கினி நூட்டும் புண்ணியத் தமிழே!
போற்றுவோர் மருந்தே! புலவர் விருந்தே!
நாற்றிசை பரப்பிய நல்லிசைத் தமிழே!
பன்மொழி படைத்துப் பல்கிய தமிழே!
என்னை வளர்த்த இளந்தாய்த் தமிழே!
பனிவரை யுச்சியிற் படம்விரி தமிழே!
தனிச்சிறப் புற்ற தளிரிளந் தமிழே!

என்று என் மனம் பாடியது. என்னைப் பெற்று வளர்த்துத் தாலாட்டிச் சீராட்டி யறிவூட்டிய தமிழே எண்ணமானேன். தமிழ் நாட்டின் உயர்ந்த நாகரீகமும், தமிழ் மைந்தரின், கல்வியும், செல்வமும், வீரமும், என் கண் முன் பொலிந்தன. மார்க்கோபாலனோடு என் மனமும் தமிழ் நாட்டின் திருவில் தவழ்ந்தது. பாண்டியன் கோனும் பாவலர் திறமும் முச் சங்கத்தின் முந்திய சீரும் "அரனே நின்போல் இரந்துண்டு வாழோம்! நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று அரனையும் தாக்கிய அஞ்சாப் புலவனை நக்கீரர் வீற்றிருந்த சங்கத்தின் தகையும், சங்கப் பலகையில் தொட்டிலாடிய தண்டமிழ்நூல்களும், "துரைத்தோணி நின்றுலாம் தூங்கு நீர் சேர்ப்ப" என்று புகழ் பெற்ற கடலரசாக விளங்கிய பாண்டியனின் வாணிபச் சிறப்பும், என் முன்னே விளங்கின. தமிழ் நாட்டின் ஔவையும், வள்ளுவரும், கம்பரும், அப்பரும், மாணிக்கவாசகரும், ஆழ்வார்களும், எனது நரம்புகளில் தமிழிசை மீட்டினர். நச்சினார்க்கினியர் ஆராய்ந்த பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும், அடியார்க்கு நல்லார் அகன்ற உரை எழுதிய அழகிற்கழகு செய்யும் சிலப்பதிகாரமும், சீருத்தக்க தேவரின் சிந்தாமணியும் எனது அறிவைக் கொள்ளை கொண்டன. தங்கள் நாகரீகத்தையும், வாணிபத்தையும், தொழிலறிவையும் கொண்டு, கப்பலூர்ந்து தமிழர் தேயதேயங்களுக்கும் தீவுகளுக்கும் சென்றதும், யவனியர் தமிழ் நாட்டுப் பெண்களின் தோழியராகக் குலாவியதும், வடுகரும் கொங்கணரும், கன்னடரும், தமிழைத் தாயென வணங்கியதும், சேரசோழ பாண்டியரின் செங்கோற் சிறப்பும், வீரப் பொலிவும், என்னைப் பெருமைப்படுத்தின. சுருக்கமாகத் தமிழின் இனிப்பும், தமிழரின் வீரமும், தமிழ் நாட்டின் வளமும், என்னைத் தமிழ்மணம் கமழும் தென்றலாக வந்து அழைத்தன. அத் தென்றல்வயப்பட்ட யான் என்னைப் 'பைந்தமிழ்ச் சோலை'யுட் கண்டேன்.

பைந்தமிழ்ச் சோலையின் ஒரு பங்கை கடல் விழுங்கியதைக் கண்டு வருந்தினேன். இன்று தலை நிமிர்ந்து ஒய்யாரமாக நடக்கும் ஆங்கிலவாசி பிறக்கு முன்னையே அவள் போன்ற பல அரசி

களுக்கு அரசியாய் விளங்கியது நமது தமிழ். சகசிற்பியாருக்கு முன்னே அவரினும் ஆயிரம் பங்கு திறமை வாய்ந்த செகசிற்பியார்களை நமது தமிழ் அன்னை ஈன்றனள். சரித்திர வாராய்ச்சிக்கு முன்னரே தமிழாராய்ச்சி தழைத்தோங்கியது. தமிழ் இலக்கியங்கள் பலபிறந்த பிறகே அகத்தியர் பின்னே இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் வரைந்தார். தமிழ், கடவுளைப்போல் ஒருவரால் பெறப்பட்ட தன்று. அது முதல் இறுதியற்றது. பரம்பொருளிடமிருந்து வந்து பரம்பொருளை விளக்கி, நம்மைப் பரம் பொருளிடமே சேர்க்கும் திருவுடையது, எல்லை யற்றது. கடலால் விழுங்கப்பட்டும், நெருப்பால் எரிக்கப்பட்டும், ஆற்றில் போடப்பட்டும், அழியாது என்றும் இளமையாக இலகுவது. தமிழ் எல்லாம் வல்லது. தன்னை அண்டிய அன்பருக்குப் பயிலப்பயில இடந்தந்து பரவுவது. இவ் வருமைத் தமிழ் முற்காலத்தில் முதற் சங்கக் காலத்தில், அகத்தியரும், அரனும், முருகவேளும், முடிநாகராயரும், நிதியின் கிழவனுமாகிய ௫௪௯-பேர்களால் ௪௪௪௦-ஆண்டுகள் அருமையாக வளர்க்கப் பெற்று, எண்பத்தொன்பது மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு, பரிபாடல், முதுநாரை, முதுகுருகு முதலிய அருமையான பாடல்களை ஈன்று பொலியும்போது கடலால் விழுங்கப்பட்டது. பின்பு இடைச் சங்கம் எழுந்தது. அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர் கருங்கோழி, வெள்ளூர்க் காப்பியன் சிறு பாண்டரங்கன், திரையன்மாறன், துவரைக்கோமான், கீரந்தையார் முதலிய ௫௯-அறிஞர் போற்ற ௩௭௦௦-பாவலர் பாட, ௫௯ மன்னரால்(வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறனீறாக) மதிப்புடன் வணங்கப் பெற்று ௩௭௦௦-ஆண்டுகள் பொலிந்து, அகத்தியமும் தொல்காப்பியமு மோதி, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை யகவல், மாபுராணம், இசை நுணுக்கம், பூதபுராணம் முதலிய பல நூல்களை யீன்று கபாடபுரத்திற் பொலிந்து கடலுள் மறைந்தது. தமிழில் எல்லாத் துறைகளிலும் எண்ணிறந்த நூல்களுடன், எண்ணிறந்த பாவலரின் அறிவு மைந்தரைக் கடலினும் பரந்த கலைபுடைத்தென உலகம் புகழுந் தமிழை அலைகள் ஒளித்தன! கடைச் சங்கத்தில் நக்கீரர், சேந்தம் பூதனார், இளந்திருமாறன், அரனார் முதலிய ௪௯-புலவர் சிறந்து விளங்கினர். ௪௦௯ பேர் பாடினர். முடத்திருமாறன் முதல், உக்கிர பெருவழுதியீறாக ௪௯ மன்னர், ௧௮௫௦ ஆண்டுகள் ஆதரித்தனர். நெடுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, கலி ௧௫௦, பரிபாடல் ௭௦, கூத்தா வரி, பேரிசை, சிற்றிசை முதலிய பன்னூற்களைக் குவித்து உத்தர மதுரையில் கடைச்சங்கம் பொலிந்தது. நமது தமிழ் ௮,௦௦௦ ஆண்டுகளுக்கு முன்னதாகவே எண், எழுத்துக்களுடன் பொலிந்தது. ஆ! எத்துணை நூல்கள் தமிழணங்கை அணியுறுத்திக் காலத்தால் கொள்ளப்பட்டன! நாடகத் தமிழ்தான் எத்தனை நூல்களாகப் பாடப்பட்டது! குணநூல், கூத்தநூல், சயந்தம் நூல், பரதம், முறுவல் முதலிய நாடக நூல்கள் எங்கே? ஓவியநூல், கனுநூல் பஞ்சபாரதீயம் என்னும் இசை நூல், தருக்கக் கோவை, தாளநூல் முதலியவை எங்கே? எல்லாம் தமிழ்ச் சோலையினின்று அகற்றப்பட்டன. அவை நின்றதற்கு அடையாளமாக உரையாசிரியரின் சிற்சில மேற்கோள்களே உள்ளன. அகத்தியத்தின் சிற்சில பங்குகளே எஞ்சியுள்ளன. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, ஔவைத் தமிழ் முதலியவையே இப்போது தமிழருக்கு நிழல் தரும் பழஞ் சோலை மரங்கள். இடைச்சங்கத்தின் இறுதியில் கலி௩௭௦௦ ஆண்டுகளுக்குள்ளே தான் ஐம்பெருங் காப்பியங்களும் பாடப்பட்டன. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, இம்மூன்றும், பைந்தமிழ்ச் சோலையின் பழ மரங்களாக விளங்குகின்றன. வளையாபதி, குண்டலகேசி எனுமிரண்டும் மறைந்து உரையாசிரியரின் மேற்கோளிலேயே





மின்னுகின்றன. நீலகேசி, சூளாமணி, உதயணன் கதை, நாககுமார காவியம், யசோதர காவியம் முதலியவையும் பாடப்பட்டது இக்காலமே. வாதவூரடிகளின் மனமலரில் திருவாசக மென்னும் தேன் ஊறியதும் இக் காலத்தேதான். இக்காலத்தில் சமணரும், புத்தரும், தமிழை அன்பூட்டி வளர்த்தனர். பிங்கலம், திவாகரம் என்ற நிகண்டுகளும், அணியியல் என்ற அணி நூலும், முத்தொள்ளாயிரமும், சில ஆழ்வார்களின் பாசுரங்களும் இக் காலத்திலேயே பாடப்பட்டன. இதன் பிறகு சைவ, வைணவ ஆசிரியர்களால் தமிழணங்கிற்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பாமாலைகள் தொடுக்கப்பட்டன. தேவாரத் திருமுறைகளும், நாலாயிரப் பிரபந்தமும் தமிழ்நாட்டுத் தென்றலுடன் சேர்ந்து பாடின. கல்லாடம் பிறகு பாடப்பட்டது. நன்னூல், நேமிநாதம், அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக் காரிகை முதலிய நூல்கள் இப்போது பாடப் பெற்றன. குலோத்துங்க சோழனின் அரண்மனையை அலங்கரித்த கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, ஔவை முதலிய புலவர் இன்னும் இளமையுட னிருக்கின்றனர். அவர்களையும் அவர்களுக்குப் பின்னே தமிழணங்கின் தோட்டக்காரராக இருந்தவரையும் பின்னே ஆராய்வோம். இக் காலத்தில் உதித்த கம்பராமாயணம், ஔவையின் நீதி நூல்கள், கலிங்கத்துப் பரணி, கந்த புராணம், பெரிய புராணம், பட்டினத்துப் பிள்ளையார்பாடல்கள், கண்டியலங்காரம், முதலியவற்றை, அவ்வப்போது பின்னே ஆராய்வோம். கலி ௪௫௦௨க்குப் பின்னே தமிழ்ச் சோலையைவளர்த்த அதிவீராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன், தேசிகன், வில்லிபுத்தூரார் பரஞ்சோதி முனிவர், நல்லாப்பிள்ளை, சிவஞான முனிவர் முதலியோரையும் பின்னே அறிவாம். இப்போது சென்றது போக எஞ்சி இலகும் தமிழ்ச்சோலையுட் சென்று ஒவ்வொரு நான்மரத்தின் பழச் சுவையையும் சிறிது அருந்துச் செல்வாம்.

நான் கண்ட பைந்தமிழ்ச் சோலை எல்லை யற்றது, வேலியால் பிறர் புகுவதைத் தடை செய்யாதது. எல்லாச் சமயத்தாரும் வளர்த்தது. தன்னயத்துடன் "பிறர் என்னை ஓதத் தகுதியில்லை உயர்ந்த வகுப்பினரே ஓத வேண்டும்" என்னும் இறுமாந்த சொல்லற்று எவ் வினத்தருக்கும் ஒவ்வியதானது. இதில் சைவ நாயன்மார்கள் தமிழுக் குரிய பண்ணில் தேவாரம், திருவாசகங்களை முழக்குகின்றனர், வைணவ ஆழ்வார்கள், திருவாய் மொழியை ஆர்க்கின்றனர். சமணர் ஜீவகசிந்தாமணியை ஆவலுடன் படிக்கின்றனர். புத்தர், மணிமேகலையில் மகிழாநிற்கின்றனர். கிறிஸ்தவர், வீரமா முனிவரின் தேம்பாவணியை வேட்கையுடன் கற்கின்றனர். முகம்மதிய சகோதரர், உமர்ப் புலவர் எழுதிய சீறாபுராணத்தை ஆராய்கின்றனர். வள்ளுவரின் தெய்வ காவியத்தை வழிபடாதவரில்லை. கம்பர் கவிதையில் இன்புறாதவரில்லை. தான் இன்புற்றதைப் பிறரும் இன்புறச் செய்வது தமிழரின் பெருங்குணம். தருகை நீண்டு அமிழ்தளிக்கும் தாயன்புடைய தனிமொழியே தமிழ். எனது எண்ணங்களை இப்படியே விரித்துக் கொண்டே போனால் வானையே காகிதமாயும் காலத்தையே எழுதுகோலாயுங் கொண்டு எழுதினாற்கூடத் தமிழின் பெருமை இன்னும் எவ்வளவோ மீதி யிருக்கும். ஆதலின் பைந்தமிழ்ச் சோலைக்குள் நுழைந்து பட்டது போக எஞ்சி நிற்கும் மரங்களின் தண்ணிழலில் உலவுவாம்.

அருந்தவ அகத்தியன் ஆக்கிய முதலான அகத்தியம் காலக் கறையானால் அரிக்கப்பட்டுக் கிடந்ததைக் கண்டு நொந்தேன். கடலையுண்ட குடமுனி யிடத்தே, பொருந்தக் கற்றுப் புரைதப

உணர்ந்த நல்லிசைப் புலவோன் தொல்காப்பியன் தமிழ் மொழி வாழத் தமிழ்ச் சுவைபரவ எழுத்துச் சொற் பொருள் இலக்கணஞ் செய்தான். அத் தொல்காப்பியம் என் மனங் குளிரச் செழித்தே நின்றது. ஆனால் தமிழ்க் கவிதையை யெல்லாம் தன்னிழலில் அடக்கி நிவந்த அதன் இன்பத்தை நுகர்வார் மிகச் சிலரே யாயினர். இயலிசை நாடகத் தமிழை அகத்தியர் விரிந்த நூலாய் விளக்கினர். தொல்காப்பியர் இயற்றமிழையும், பெருநாரை, பெருங்குருகு முதலிய நூலுடையார் இசைத் தமிழையும், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்னும் நூலுடையார் நாடகத் தமிழையும் வகுத்தும், விரித்தும் மயக்கற முறைகாட்டித் தத்தம் நூல் யாத்தனர். இளம்பூரணர், கல்லாடர், சேனாவரையர், நச்சினார்க்கினியார் முதலிய பேரியோர் உரை பெழுதிப் போற்றி வந்த தொல்காப்பியம் இப்போது தன் வழித் தோன்றிய பல சிற்றிலக்கணங்களுக்கிடையில் அறிபவர் மிகச் சிலராகத் தனித்திருக்கிறது. தொல்காப்பியனாரின் எழுத்தையுஞ் சொல்லையும் அறிவார் சிலரேனு மிருந்தனர். அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள், மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மாபு இயல்களுடன்கூடிய பொருளை அறிவார் விரல் விட்டு எண்ணக்கூடிய சிற்றெண்ணுடையாராய் அருகிவிட்டனர். சங்க இலக்கியங்களெல்லாம் இத் தொல்காப்பியத்தி கடங்கி நிற்றலால் இதன் வாயிலாகவே சங்க இலக்கியங்களுட் பொதிந்து கிடக்கும்பொருட்சுவையைப்போகிபவளவுநுகரலாம். தொல்காப்பியர் வைத்து வளர்த்த இம் மாப் பெரும் தொல்காப்பியத்திற்கு எனது வணக்கத்தைச் செய்துவிட்டு பதின் மரங்கள் வரிசையாய் நடப்பெற்ற பத்துப்பாட்டுச் சாலையை அண்டினேன்.

பத்துப்பாட்டின் பச்சிளங் காட்சி என் பார்வையைக் கவர்ந்தது.

முருகு, பொருநாறு, பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

என்ற பத்துப்பாட்டுகளின் பெயரைக் குறிக்கும் வெண்பாவைச் சொல்லிக்கொண்டே ஒவ்வொன்றையும் உற்றுநோக்கினேன். திரு முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்று பெயர் புனைந்து தமிழன்னையின் தங்க முடியிற் பொதிந்து மின்னும் பத்துப்பாட்டுகளின் மலரடிகளைக் கண்ணிலொற்றிக் கொண்டேன். நக்கீரர் போன்ற நல்லிசைப் புலவர்கள் அருளிச் செய்து சங்கப் புலவர்களால் தொடுக்கப்பட்ட ஒரு நூலை என் மொழியால் அணியுறுத்த முயலுவது வானவில்லிற்கு நிறஞ்சேர்க்க முயலுவதை யொக்கும். ஆதலின் சுருக்கமாக இப் பத்துக் கற்பகக் கனிகளின் சுவையை நுகர என் தோழரையும் அழைக்கின்றேன்.

இப் பாட்டுகளில் முருகன் பெருமையும், தமிழ் நாட்டின் வளமும், தமிழ் மன்னரின் கொடையும், வீரமும், தமிழ் மூதூர்களின் பெருமைகளும், பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், ஓரி முதலிய வள்ளல்களின் வண்மைச் சிறப்பும், ஐந்திணை வளமும், கார், கூதிர், காலத் தன்மையும், மதுரையின் அழகும், கரிகாற் பெருவளவன், நெடுஞ் செழியன் முதலிய அரசர் திருவும், இல்லற முறையும், கற்பின் சிறப்பும், இயற்கைப் பொலிவும், இயம்பப்படுகின்றன. பத்துப்பாட்டை வேறொரு முறை தனியாக ஆராய்வோம்.

எட்டுத்தொகையின் இன்பச்சாலை அடுத்து நின்றது. அதன் தண்ணிழலிற் சற்று நின்றேன்.



"நற்றிணை, நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை."

என்ற எட்டுத்தொகையின் தொகையைப் பாடிக்கொண்டே அருகு சென்றேன். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்று பெயர் படைத்த எட்டுத்தொகை தமிழன்னையின் வாகை மாலையாகும். இப் பாக்கள் பல பெரும் புலவர்களால் தொகுக்கப்பட்டன. தமிழ் நாட்டு மூவேந்தரின் வள்ளன்மையும், வீரமும், போர்த் திறனும், ஈகையும், அறனும், உரனும், கடல், வையையாறு, மதுரை முதலியவற்றின் அணியும், ஐந்திணைக்கு முரிய முதற் பொருள் கருப்பொருள் உரிப் பொருள்களையும், தமிழ் வேந்தர் பலருடைய சரிதைகளும் கொண்டு திகழும் எட்டுத் தொகை தமிழகத்திற்குப் பெருமை ஊட்டி நிற்கிறது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய எல்லா வகுப்பினரும் சேர்ந்து பாடித் தமிழுக்குச் சேர்த்த இப் பெருஞ் செல்வமான எட்டுத் தொகையையும் வேறு தலைப்பின் கீழ் ஆராய்வோம்.

இரு முந்நீர்க் குட்டமும்
வியன் ஞாலத் தகலமும்
வளி வழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றாங்கு
அவையளந் தறியினும் அளத்தற் கரிய
அறிவும் ஈரமும் பெருங்கண் ணோட்டமுஞ்
சோறு படுக்கும் தீயோடு
செஞ் ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிது தெறலறியார் நின்நிழல் வாழ்வோரே"

என்று பாடிக்கொண்டே பதினெண் அறச் செடிகள் உயர்ந்த பதினெண் கீழ்க்கணக்குச் சாலையை அண்டினேன்.

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு.

அறம் பொரு ளின்பம் வீடென்னும் நான்கு பேறுகளையும் பெறும் வழியைத் தெள்ளிதின் உரைக்கும் அறநூல்களெனவே இவற்றைக் கூறலாம். இவற்றில் பெரும்பான்மையான நூல்களைத் தமிழர் இன்னும் பொதுவாக வழங்கி வருகின்றனர். திருக் குறளும், நாலடியாரும் தமிழரின் பேச்சொடு தேன்கலந்தாற் போல் இன்னும் உறுதியாக நிற்கின்றன. திருக்குறள் "ஞால முழுதும் நயந்தளந்து" அறவிளக்காகப் பொலிவதை முன்னே பல விடங்களில் ஆராய்ந்துள்ளோம். இனியவை இன்னா இன்னவெனத் தெளிவுறச் சொல்லி நமது வாழ்விற்கு அறிவு புகட்டும் ஆசானைப்போல ஆகும் இப் பதினெண் கீழ்க்கணக்கின் சில கட்டளைகளைக் குறிப்பிடுவோம்.

பட்டாங்குத் தூயர் பழிச்சற் குரியராய்
ஒட்டின் றுயர வுலகத்தோர்— கட்டளை
யாம்வெறுக்கை யின்றி யமையாரா அஃதில்லார்
ஆம்வெறுக்கை நிற்க வுடம்பு [மையாவின்

என்னும் "இன்னிலைப்பாட்டு துறவிகட்கும் செல்வம் வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உற்றுவ துலகுவப்பச் செய்து— பெறுவதனால்
இன்புற்று வாழு மியல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது"

உண்மையான அறிவைத் தெளிந்து அடங்கி, தீவினையஞ்சி தனக்கு வந்த வினையை உலகம் மகிழும்படி செய்து, கிடைத்ததைக் கொண்டு களிப்படையும் இயல்பினர் என்றும் துன்பமில்லாத

வாழ்வை எய்துவர் என்று நாலடியார் சொல்லும் நெறியை நாடின் மக்களுக்குவேறென்ன வேதம் வேண்டும்!

*மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே*
*தானம் அழியாமை தானடங்கி வாழ்வினிதே*

*ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை*
*மானிடவர்க் கெல்லாம் இனிது.*

என்று பூதஞ் சேந்தனாரின் இனிது நாற்பது கூறுவதைக் கவனியுங்கள்!

# ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேச குமார சர்மா எழுதுவது)

## பதினொன்றும் அத்தியாயம்.

### குந்தையின் நிச்சயம்

செட்டியார் உபகுப்தனார் அவ் வெண்ணாயிரம் பொன்னையும் துரும்பெனக் கருதினார். கோபாவேசத்தினால் அவர் அப் பணப்பைகளை ஒரே உதையாய்ப் பலமாக உதைத்துத் தள்ளிவிட்டு ஆழ்ந்த விசாரத்தில் அழுந்தி நின்றார். குந்தசுந்தரிக்கு அவருடைய இச் செய்கை முன் எப்பொழுதும் அநுபவியாத புதுமையாயிருந்தது. அதைக் கண்டு அவள் திகைத்துத் தடுமாறினாள். இராணி இந்துமதியும் சியாம சுந்தரனும், அந்த துக்ககரமான நிலைமையிற்கூட, உபகுப்தனாருடைய இந்த அற்புதமான நடவடிக்கையைக் கண்டு பெரிதும் வியப்படைந்தனர். அவர் கடன்காரன் பிடியிலிருந்து விடுபட்டவுடனே மிக்க சந்தோஷத்துடன் தம் பத்தினியை வந்து பார்த்து, இளங்கோ ஜிதேந்திரனது தன்னல மறுப்பைப் பாராட்டி நன்றியுரை கூறுவாரென்றும், மிகுந்திருந்த எண்ணாயிரம் பொன்னையும் பெட்டியிற் போட்டு வைத்துக் கொள்வாரென்றும் அவர்கள் எதிர் பார்த்திருந்தார்கள். ஆனால் அவர் வந்தவுடனே தம் பத்தினியை அன்பு ததும்பும் விழி கொண்டு பார்ப்பதற்கு மாறாக கோபம் நிறைந்த பார்வையுடன் நோக்கி, மிகுந்திருந்த பணத்தை ஏற்றுக்கொள்ளாது திரஸ்கரித்தார்—இதைக் கண்டு இராணி இந்துமதிக்கும் சியாமசுந்தரனுக்கும் இப்பொழுது உபகுப்தனார் செய்த இந்தச் செய்கை—மனித சுபாவத்துக்கு அரிதான இந்த நடத்தை—எவ்விதமாய்ப் போய் முடிகிறது பார்ப்போமென்று நெஞ்சம் துடித்தது.

உபகுப்தனார் இரக்கங்கொண்ட, ஆனால் கலங்காத, குரலில் கூறினார்—"குந்தா, இன்று நீ பெரும்பிழை செய்துவிட்டாய். மிகவும் அநுசிதமான காரியம் பண்ணிவிட்டாய். இத்தனை நாள் என்னுடன் வாழ்ந்து பழகியும் நீ என்னை அறிந்துகொள்ளவில்லை. நீ இன்று செய்த காரியத்தினால் இதுவரையில் நான் வாழ்ந்த வாழ்க்கையும் ஒழுகிய ஒழுக்கமும் எல்லாம் பாழாய்விட்டது. இந்தப் பாதகத்துக்குப் பரிஹாரம் இனி உலக



வாழ்க்கையில்—இல்லற வாழ்க்கையில்—இருப்பதால் உண்டாகுமென்று நான் நினைக்கவில்லை. செல்வத்தில் எனக்கு அவ்வளவு ஆசை இருந்தால் என் முன்னோர்கள் வைத்துவிட்டுப் போன சம்பத்தை யெல்லாம் தண்ணீரைப் போல் இப்படி தானதர்மங்களில் வாரி வழங்கி யிருக்கமாட்டேனல்லவா? வாசவதத்தை சாகும் சமயத்தில் தன் அளவற்ற செல்வத்தை எனக்குக் கொடுத்துவிட விரும்பினாளே, அதைப் பெற்றுக்கொள்ளமாட்டேனென்று நான் ஏன் மறுத்துவிட்டேன்? உன் எதிரிலேயே நடந்ததைத் தான் பாரேன். யுவராஜன் என்னை அடிக்கடி எவ்வளவு வேண்டிக் கொண்டான்? ஆனால் நான் என் வலுவில் அந்த ஸாவுகாருக்குக் கைதியாகிவிட்டேன்? இதை நீ கொஞ்சமாவது கவனித்திருந்தால், இப்படிப்பட்ட இழிவான காரியத்தில் ஒருகாலும் இறங்கி இருக்கமாட்டாய் அல்லவா? நீ இப்படிச்செய்தது எவ்வளவு அவிவேகம்!!"

குந்தை அழுதுகொண்டே கூறினாள்—"நாதா, நான் இந்தக் காரியத்தைப் பணத்தாசையால் செய்யவில்லை. பதிப்பிரேமையே என்னை இந்த இழிவான காரியத்தைச் செய்யத் தூண்டினது."

உபகுப்தனார்—"அதிதிகளை ஆபத்துக்குள்ளாக்கும்படி தூண்டுகிற அந்த பிரேமையைச் சுட வேண்டும்! மகத நாட்டின் இராஜ குடும்பம் கலிங்க நாட்டின் இராஜ குடும்பத்தை எவ்வளவு துச்சமாய் எண்ணுகிறது, எவ்வளவு பகைமையோடு நோக்குகிறது—என்பதைப்பற்றி பாவிக்கவும் உன்னாலாகாது. இந்த மகாதிபதிகள் தங்களை பகவான் கௌதம புத்தனுடைய அடியார்களென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுடைய காரியங்களைப் பார்த்தால், கேவலம் ராக்ஷஸகிருத்தியங்களைப் போலவே இருக்கின்றன! இந்த மகததிபதிகள் லக்ஷக்கணக்கான ஜனங்களை ஸம்ஹாரம் செய்துவிட்டு, 'அஹிம்ஸா பரமோ தர்ம:' என்னும் உத்தம தத்துவத்தைப் பிரசாரம் செய்ய விரும்புகிறார்கள். இவ்வளவு லக்ஷணமாயிருக்கிறது அவர்களுடைய தத்துவ நிஷ்டை—மகத தேசமோ கபடச் சூழ்ச்சிகளால் உலக முழுதுள்ள தேசங்களைத் தோற்கடித்து வருகிறது. ஸம்புஷ்டாசாரியனைப் போன்ற துஷ்ட பிக்ஷுக்கள் தங்களைப் போன்ற நீசஜனங்களை ஒன்றுப் திரட்டிக்கொண்டு மகத நாட்டின் இராஜாங்கக் காரியங்களை நடத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் யுவராஜ ஜிதேந்திரன் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டால், அவர்கள் குற்றவாது செய்தது ஒன்றில்லாவிட்டால் ஒன்று ஆரோபித்துப் பழி சுமத்திப் பட்டப்பகலில் அவனைக் கொலை செய்து விடுவதில் முன்பின் பார்க்கமாட்டார்களே—அதுவும் அப்படி இப்படியல்ல, நியாயஸ்தலத்தின் பாவனை காட்டி, அதன் துணையைக்கொண்டே அப்படிச் செய்வார்கள். ஆனால், குந்தா, உனக்கேன் இப்படி புத்தி உண்டாயிற்று? இந்தப் பிரேமையின் சுழலில் விழுந்து, கணப் பொழுதில் அழியக்கூடிய இந்தப் பிரேமையின் மோகத்தில் சிக்கி, நீ இந்தக் கொடுஞ் செய்கை செய்துவிட்டாயே."

குந்தை—"நாதா, இப்படி என்மேல் கோபங் கொள்ளவேண்டாம். என் அஞ்ஞானத்தாலேயே இவ்வளவு நடந்துவிட்டது. யுவராஜன் இப்படி ஆபத்துள் அகப்பட்டுக்கொள்வான் என்ற எண்ணமே எனக்கு உண்டாகவில்லை."

இராணிஇந்துமதி—"செட்டியாரே, இவ்விஷயத்தில் குந்தையின் குற்றம் ஒன்றுமே இல்லை. யுவராஜன் எப்படியும் அசோகனுடைய கைதியாய்விடவே இருந்தான்."

"நீங்கள் யுவராஜனோடு இவ்வளவு ஜாக்கிரதையாய் ஒளிந்து மறைந்து பிரயாணம் செய்து கொண்டிருக்கும் போது, அவனை இந்த சமயக்

தில் காப்பாற்ற வேண்டியஉத்தரவாதம் உங்களைச் சார்ந்ததேயாகும்—இப்படி நான் எண்ணுவது தப்பென்று எனக்குத் தோன்றவில்லை.'' இவ்வாறு பேசிவிட்டு அவர் இராணியையும் சியாமசுந்தரனையும் நோக்கினர். தாம் சொல்லியதைக் கண்டித்ாவது ஆக்ஷேபித்தாவது . அ.வர்கள் ஒன்றும் பேசாதிருப்பதைக்கண்டு அவர் மீண்டும் மொழியலுற்றார்—''உள்ளபடியே உங்கள் இருதயம் இரத்த மாம்ஸங்கள் அமைந்திருக்கவில்லை. அவை வெறும் கல்லாலும்இரும்பினாலும் சமைத்தவை யென்று நான் நினைக்கிறேன். யுவராஜனோ வயதானவனல்ல. உலகியல் அறியாத சிறு பிள்ளை. பகைவர் கையில். அவன் விழுவதைக் கண்டும், நீங்கள் அவனைத் தடுக்காமலும் அவனுக்கு இதோபதேசமுஞ் செய்யாமலும், நிலைமையை விளங்க வைத்து எச்சரியாமலும் சும்மா இருந்து விட்டீர்கள். இது எவ்வளவு பெரும் பிழை!''

நெஞ்சைப் பிளக்கும் இவ் வார்த்தைகளைக் கேட்டு இராணியின் மனம் வேதனைகொண்டு பதைபதைத்தது. உண்மையான நிலைமை செட்டியாருக்குத் தெரியாமையாலேயே அவர் நம்மை இப்படிக் கடிந்துரைக்கிறரென்று இராணி எண்ணினாள். ஆயினும் பிரணயினியும் பௌத்தர்களின் கைதியாகி ஒரு போரபத்தை விலைக்கு வாங்கினளே என்பதை நினைக்க நினைக்க அவளுக்கு துககம் பே.லிட்டது. பௌத்தர்களோ தயாதாக்ஷிணிய மற்றவர்கள். இரகசியம் அவர்களுக்குத் தெரிந்துவிட்டால், இராணியாயிற்றே, இவளிடம் தயைகாட்டவேண்டும், இவளை ஆதரத்துடன் நடத்த வேண்டும் என்று அவர்கள் ஒருகாலும் யோசிக்க மாட்டார்கள். அதற்கு மாறாக மோசடி செய்ததாகக் குற்றஞ்சாட்டி அவமானம் செய்வார்கள். ஆனால் சிந்திக்கவும் யோசிக்கவும் வேண்டிய சமயம் இப்பொழுது போய்விட்டது. பச்சாதாபப் படவேண்டிய காலமே இப்பொழுது வந்திருக்கிறது. ஆகவே நடந்துபோன காரியத்துக்காக இராணிஇந்துமதி வருந்தலானாள். ஒரு பக்கம் குழந்தையும் பச்சாதாபப்பட்டு அழுதுகொண்டிருந்தாள்.

உபகுப்தன் செட்டியார் சிறிது நேரம் யோசித்துப் பேசலானார்—''வேணும் இப்படித்தான் உன்னுடைய நெஞ்சம் பச்சாதாபத்தால் வெந்து போகவேணும். நீ பெரும்பாதகம் செய்திருக்கிறாய்—உன்னைப் போன்றவர்கள் எரிந்து சாம்பலாய்ப் போகுமவ்வளவு பச்சாதாபப் படவேண்டும். குந்தா இந்தச் சுழலும் சம்சாரத்தை—உலக வாழ்க்கையைத்—துறந்து விடுவதற்குத் தருநியான சமயம் இது தான். ஸாவுகாரின் பிடியிலிருந்து இன்றில்லாவிட்டால் இன்னும் நாலுமாசத்திற்குப் பிறகாவது நான் எப்படியும் விடுதலையடைவேன். ஆனால் உன் மனம் உலக ஆசையில் முழுகிவிட்டது. அது இவ்வளவு சொற்பகாலம் கூடப் பிரிந்திருப்பதைப் பொறுத்துக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அது அவ்வளவு துர்பலமாய் இருந்தது! மேலும் எவ்வளவுக்கெவ்வளவு இவ் வுலக வாழ்க்கைப் போராட்டம் வளர்ந்து வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது மேன்மேலும் பலஹீனமாகிவிடும். ஆகையால் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும்.''

குந்தை கண்ணீரைத் துடைத்துக் கொண்டு உபகுப்தனை நகசிகைபரியந்தம் அன்புநிறைந்த பார்வையுடன் நோக்கினாள் அவளுடைய வாடிய முகத்தில் திட நிச்சயத்தின் காந்தி சுடர் வீசியது. அவளுடைய தேகத்தில் ஒரு திவ்யசக்தி பிரவேசித்தது. எத்தனையோ நாளாக உபகுப்தன் செட்டியார் அவளுக்கு உபதேசம் செய்து வந்தார்; ஆனால் அவ்வுபதேசம் இன்றே பயனளித்தது. அவள் இருந்தாற்போலிருந்து மதுரமாகிய, ஆனால் திடங்கொண்ட ஜீவனுள்ள குரலில் கூறினாள்—



''சரி எனக்கு மனம் தெளிந்துவிட்டது.''

''நன்றாய் யோசித்துப் பேசு: ஆர அமர சாவதானமாய்ச் சிந்தித்துப் பார்த்தையா?''

''வெகு நாளாக யோசித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது நிச்சயித்து விட்டேன். இந்த ஆகஸ்மிக நிகழ்ச்சியானது, என் கண்களை நன்றாய்த் திறந்து விட்டது. சம்சாரச் சுழற்சியில் துக்கப் பெருக்கத்தையும் நிர்வாணப் பிராப்தியால் உண்டாகும் நித்தியானந்தத்தின் பெருமையையும் நான் அறிந்துகொண்டேன் நாதா. இப்பொழுது என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்.''

சம்சாரத்திலிருந்து — உலக வாழ்க்கையிலிருந்து—உன் மனம் திரும்பிவிட்டதா?''

''ஆம்.''

''இந்த வார்த்தையைக் கேட்டதுமே உபகுப்தருக்குப் பிரம்மாநந்தமாய் விட்டது. ஆநந்த வெள்ளம் பொங்கியெழவே ''நமோ புத்தாய'' என்னும் வார்த்தைகள் அவர் வாயினின்றும் வெளிப்பட்டன. அவர் உவகையோடும் வியப்போடும் குழந்தையை இமைக் கொட்டாது பார்த்தவண்ணமா யிருந்தார்.

குழந்தையின் வைராக்கியம் க்ஷணத்துக்கு க்ஷணம் வளர்வதாயிற்று. அவள் கூறினாள்—''அடிகளே இந்தச்சம்சார பாசத்தை நான் அறுத்தெறிந்துவிட்டேன். இது வரையில் தேவரீருக்கும் எனக்கு மிடையில் பதி பத்தினி சம்பந்தம் இருந்தது. சம்சாரத்தைத் துறத்தலோடு இன்று நான் அதை மறந்து விடுகிறேன். இன்று வரை தேவரீர் செய்து வந்த உத்தமோபதேசங்களால் என்னை உச்ச நிலையடைவித்தீர்கள். இதன் பொருட்டு நான் தேவரீரிடம் மிக்கநன்றி பாராட்டுகிறேன். இந்த உபகாரத்துக்காக நான் பகவான் புத்தனை நோக்கித் தங்களுக்குச் சீக்கிரத்தில் சாசுவத சுகப்பேறு உண்டாகுமாறு பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன். சரி இப்பொழுது ஒரே விண்ணப்பமட்டும் செய்து கொள்ளுகிறேன்.''

அப்பொழுது செட்டியார் உபகுப்தனின் கண்களினின்று ஆநந்த நீர் பெருகியது. கழுதழுத்த குரலில் அவர் கூறலுற்றார்—

''குந்தா இல்லை, அம்மணி, இன்று தான் என் உபதேசம் ஸார்த்தமாக ஆயிற்று. சிறு பிராயத்திலேயே என் பிதா எனக்கு உன்னுடன் விவாகம் பண்ணிவைத்தார். இல்லாவிட்டால் நான் இந்த விவாகமென்னும் தொல்லையில் அகப்பட்டுக் கொண்டிருக்கமாட்டேன். எவ்வளவோ காலத்துக்கு முந்தியே என் பரம புருஷார்த்தத்தை ஸாதித்துக்கொள்ள விரைந்து எத்தனித்திருப்பேன் ...ஆனால் இன்றுவரை கேவலம் உன் பொருட்டே நான் சம்சாரத்தில் இருக்க நேர்ந்தது. நீ என்னை அண்டினவளாய் விட்டாய். உன்னை அஞ்ஞானத்தில் தனியே விட்டு விட்டுப் போவது எனக்கு அநுசிதமென்று தென்பட்டது. ஆகவே இன்று வரை உபதேசம் செய்து கொண்டே உன்னை பரிபக்குவப்படுத்தி வந்தேன். அந்த உபதேசத்தை நீ இன்று ஸார்த்தகமாக்கிவிட்டாய். நீயே என்னுடைய பரமபுருஷார்த்தமாகிய நிர்வாணத்துக்கு வழி திறந்து உதவினாய். நீ உபதேசம் பெறுவதற்குப் பாத்திரமாகவே இருந்தாய். இன்று நான் தன்னிய

ருக்கு தன்னிபனுப் விட்டேன்!" அதற்குமேல் பேச அவரால் ஆகவில்லை.

"அடிகளே, இன்று முதல் அடியாள் தேவரீருக்குப் பத்தினியல்ல, சிஷ்யையே. இனி அடியாள் செய்ய வேண்டியவைகளுக்கு இப்பொழுது உபதேசம் செய்தருளுங்கள்."

"என்னைவிட அதிக யோக்கியதையுள்ளவரிடத்திருந்தே நீ அவ் வுபதேசத்தைப் பெறவேண்டும். மொக்கலிபுத்திர திஷ்யனர் என்னும் மஹாத்மா நம் தர்மத்து ஸமஸ்த பிக்ஷுக்களுக்குள்ளும் சிரேஷ்டராய் விளங்குகிறவர். அவரே உபதேசிப்பதற்கு மிக உரியவர். அவரிடம் நீ போக வேண்டும்—பிக்ஷுணியாகி அந் நிலைக்குரிய விரதம் அநுஷ்டித்து ஜந்மஸாபல்யமடைய முயல்வாயாக. நான் இப்பொழுதே பிக்ஷுவாக முடியாது. யுவராஜ ஜிதேந்திரனை நான் விடுதலை செய்ய வேண்டியிருக்கிறது. நீயும் உன் பாப நிருத்தியத்துக்காக இடைவிடாது பச்சாதாபம் படக் கடவாய். ஜிதேந்திரனை மறந்துவிடாதே"

குந்தை—"அடிகளே, அசோக பூபதியின் வசத்திலிருந்து யுவராஜன் க்ஷேமமாகவே விடுதலை யடைந்தானென்று எனக்குத் தெரியவருகிற வரையில் என் துக்கம் ஆறாது."

"அதற்காக நான் இப்பொழுதே பாடலிபுத்திரத்துக்குப் புறப்பட்டுப் போகிறேன். போய் யுவராஜனுடைய விடுதலைக்காகப் பிரயத்தனம் பண்ணுவேன்." என்று சொல்லிக்கொண்டு செட்டியார் உபகுப்தனர் வீட்டை விட்டு வெளிப்பட்டார். குந்தையும் உபகுப்தனருடன் வீட்டிலிருந்து வெளிக் கிளம்பிவிட்டாள். வீட்டைத் துறந்ததும் உபகுப்தனர் தம்முடைய வீட்டையும் அதிலுள்ள எல்லாப் பொருள்களையும் அந்த எண்ணுயிரம் பொன் சகிதமாகத் தனக்கயலானகிய ஓர் உத்தமனிடம் ஒப்பித்துத் தானதர்மத்தில் செலவிடும்படிக் கேட்டுக்கொண்டார்.

உபகுப்தனர் இராணியையும் சியாமசுந்தரனையும் நோக்கி—"இனி எனக்குத் தாங்கள் ஆக்ஞையிடலாம்," என்றார்.

அதற்குள் இராணி இந்துமதியும் சியாமசுந்தரனும், உபகுப்தனருடன் பாடலிபுத்திரத்துக்குப் போவதென்றும், அங்கே கிடைக்கிற செய்திகளுக்குத் தக்கபடி தங்கள் வேஷத்தை வைத்துக் கொள்ளவோ மாற்றவோ செய்வதென்றும் தமக்குள் தீர்மானித்திருந்தார்கள். ஆகவே அவர்கள் தாங்களும் பாடலிபுத்திரத்துக்கு வருவதாகச் சொன்னார்கள். அப்பொழுது பிரணயினியின் வாகனம் அவர்களுக்கெதிரில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. சமயோசிதமாய்ச் செட்டியாரும் குதிரை ஸவாரி செய்ய உடன்பட்டார்.

குந்தை பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தாள். அவர் உபகுப்தனரின் உபயபாதங்களையும் பணிந்து கூறினாள்—

"அடிகளே, அடியாள் தேவரீருக்குக் கடைசி நமஸ்காரம் செய்கிறாள். இப்பொழுது தேவரீர் அடியாளுக்குப் பதியல்ல, குருமூர்த்தியாய்விட்டீர்கள்."

"வாழ்க மெய்யறம்," என்று உபகுப்தனர் அற முறைப்படி ஆசி கூறித் தம் அதிதிகள் இருவருடனும் பாடலிபுத்திரம் போகப் புறப்பட்டு விட்டார்.

குந்தையும் ஏதோ ஒரு வழி பிடித்துச் சென்றாள். இவ்வாறு இந்தப் பாஸ்பரம் அன்புபூண்ட தம்பதிகள் இல்லறம் துறந்து,விஷய சுகங்களுக்கு திலதர்ப்பணம் செய்துவிட்டு வலுவில் தங்கள் வீட்டைத் தேடிவந்த ஸ்ரீதேவியையும் துச்சமாய்க் கருதித் தள்ளிவிட்டு, ஆத்மமோக்ஷத்தின் பொருட்டு வெவ்வேறு திசைகளை நோக்கிப் போயினர். இந்த ஒப்பற்ற தம்பதிகளையும் அவர்களுடைய அபூர்வமான தியாகத்தையும் பார்த்து இந்துமதிக்கும் சியாமசுந்தரனுக்கும் உண்டான ஆச்சரியமானது ஆயுளுள்ளளவும் அவர்களை விட்டகலவில்லை.



# எதிர்காலக்கண்ணாடி

(எதிர்நோக்கி எழுதுவது)

சாந்தப்பிரியன்.

நம்பிபுரம் என்ற ஊரில் சாந்தப்பிரியன் என்ற அந்தணன் இருந்தான். அவன் எல்லாக் கலைகளிலும் தேர்ந்து, கற்றவழி நின்றான். சிறிதும் டம்பமில்லாதவன். பாவமற்ற தொழிலான நெசவை மேற்கொண்டான். அவனுடைய குணத்திற்கேற்ற சுமதி என்ற பத்தினியும் அமைந்தனள். சாந்தப்ரியனுக்கு, இரண்டு பிள்ளைகளும், சுகுணா என்ற பெண்ணும் உண்டு.

காலை ஆறு மணிக்குள் நீராடி, தன் வருணத்திற்குரிய கருமங்களைச் செய்தும் செய்வித்தும் முடித்து தன் மனைவி மக்கள் எல்லாரையும் ஒவ்வொரு ராட்டினத்திற் கருகிலும் நிற்கச் செய்வார். இராட்டினத்திற்கு மாலை சுற்றி, சந்தனம் குங்குமமிட்டு, தொழுது, "ஜெய பாரத சக்தி" என்ற திருநாமத்துடன் சுழற்றும்படி செய்வார். தானும் நூற்பார். நூற்கும்போதே குழந்தைகளுக்கு இனிய நீதிகளடங்கிய பாட்டுக்களைக் கற்பிப்பார். அ-மணி வரையில் நூற்றதும், தன் மனைவி சமையல் செய்யச் செல்வாள். சுகுணாவும் தன் தாயாருக்கு உதவி செய்யச் செல்வாள். சாந்தப்ரியன் நெய்யத் தொடங்குவார். தன் பிள்ளைகள் பாவு விரிப்பது, பசை வைப்பது, முதலிய தொழில்களைப்பார்ப்பார்கள். சுகுணாவும் தன்தாயாருக்குப் பற்று விளக்கிக் கொடுத்து வந்து, கண்டு சுற்றுவதும், ஆஸ் போடுவதுமாயிருப்பாள். சமயத்தில் பிள்ளைகளும் சுகுணாவும் நெய்வது முண்டு. சாப்பிட எழுந்திருக்கு முன், ௧௨ மணிக்குள் ௩ கெஜம் நெய்தாகிவிடும். நெசவு நன்றாய் இருந்ததினால் இதை போட்டி போட்டுக்கொண்டு வாங்க வருவார்கள். ஆனால் பணத்திற்கு விற்பதில்லை. நெல் தானியம் முதலியவற்றிற்கே விற்பார். விற்று வந்ததை உண்டு மீந்து, ஏழைகளுக் கிடுவார். அன்றன்று செலவிற்கு மேலேயே லாபம் வந்தது. அதனால் வறுமையின்றி வாழ்ந்தனர். உண்டதும் தன் குழந்தைகளுக்கு தமிழ், ஹிந்தி, சம்ஸ்கிருதம், எண்சுவடி முதலியவற்றைக் கற்பிப்பார். மாலை ௪ மணிக்கு தன் வீட்டின் பின்னுள்ள தோட்டத்தில் எல்லாரும் வேலை செய்வார்கள். வாழை, தென்னை, மா, பலா, காய்கறி முதலியவற்றைத் தன் தோட்டத்தில் பயிர் செய்தார். தனக்குப் பயன் பட்டது போக மீதியை தனக்கு வேண்டிய பண்டங்களுக்கு மாற்றிக்கொள்வார்.

இப்படி யிருக்கையில் சுகுணாவிற்கு மணப் பருவம் வந்தது. சமையல், நூற்றல், பாடல், வீட்டை ஒழுங்காக வைத்துக்கொள்ளல், பணிவு, அடக்கம், இன்சொல், களிப்பு, அழகு முதலிய அரிய லக்ஷணங்களெல்லாம் அமைந்தனளேனும், பிள்ளை வைத்திருப்போர் வரதக்ஷிணையில் ஒரு சல்லி யேனும் குறையவில்லை. கையில் தருவதும், காதில் போடுவதும், தங்கப் பாத்திரக் குவியல், வெள்ளிப்பாத்திரக் குவியல்களின் மதிப்பும், B. L. க்குப் பணம் தருகிறீர்களா என்ற கேள்விகளும் சாந்தப்ரியனுடைய மனதைத் துளைத்தன.

பிறக, சாந்தப்பிரியனுக்கு லீலா என்ற ஒரு தங்கை உண்டு. அவள் கணவன் ஒரு லட்சாதிப்பிரபு. அவர்கள் வீட்டில் வெள்ளி, பொன் சத்தம் எப்போதும் கேட்கும். லீலாவிற்கு ராஜாங்கம் என்ற ஒரே பிள்ளையுண்டு. அப் பிள்ளைக்கு நமது சுகுணாவைக் கொடுத்தார்கள். தன் கணவன் வீட்டிற்குப் போயும், சுகுணா நூற்பதையும் நெய்வதையும் விடுவதில்லை. தனக்கும் தன் கணவனுக்கும் வேண்டிய துணிகளை நூற்று நெய்து, மீதி யிருக்கும் நூல்களைக் கழியாக ஒரு அறையில் அடுக்கி வைத்தாள். ஆனால் இவளுடைய டம்பமில்லாத வழக்க மெல்லாம் பணக்கார மாமனுக்கும் மாமிக்கும், கணவனுக்கும் பிடிக்கவில்லை. தன் கணவனுடைய கட்டாயத்தின் பேரில் வைரத்தோடும் தங்க நகைகளும் பூண்டாள். ஆயினும் யார் கட்டாயப்படுத்தினும் தான் நூற்று நெய்ததைத்தவிர வேறு உடுத்துவதில்லை. மற்றப்படி வீட்டு வேலைகளெல்லாம் இவளே செய்தாள். எனினும் இவளுடைய நன்னடக்கைகளில் வெறுப்புண்டு, கணவன் முதலானோர் "சேணியச்சியைக் கொண்டேனே! என்ன கருமம், நாலு பெரிய மனிதர் நம் மனைவியைப் பார்க்க யோக்கியமில்லை! இவளை நன்றாக அடிக்க வேண்டும், கரித்திரம்" என்று இப்படியெல்லாம் வைய ஆரம்பித்தனர், அடித்தனர். சுகுணா எல்லாவற்றையும் பொறுத்தாள். ஒரு நாள் தன் கணவன் கோபத்தினால் இராட்டினத்தையும் தறியையும் மண்ணெண்ணெய் விட்டுக் கொளுத்தினான்! சமையல், வீடுகூட்டல், பற்று விளக்கல் முதலிய எல்லாத் தொழில்களையும் செய்தாளெனினும் அவர்களுக்கு அன்பின்றி மென்மேலும் கொடுமையாக நடத்தினர். ராஜாங்கத்திற்கு வேறு கலியாணம் செய்யவும் முயற்சித்தனர். இப்படி யிருக்கையில் லீலாவும் அவள் கணவனும் காலகதி அடைந்தனர்.

இப்போது ராஜாங்கத்தின் தர்பார் மும்மரமானது மோட்டார் வாங்கினான். வில்லைச் சேவகரை வைத்துக் கொண்டான். சமயலுக்குப் பரிசாரகரை வைத்துக் கொண்டான். சுகுணாவோடு பேசுவதுமில்லை. அவள் சொல்லைக் கேட்பதுவுமில்லை. தன் வீட்டில் ஒரு தாசியை அழைத்து வைத்து சதா அவளுடனிருப்பதும், அவளை மோட்டாரில் வைத்துக்கொண்டு ஊர் சுற்றுவதுமானான். தாசியால் கலக்கப்பட்டு தன் மனைவிக்குக் கொடுமைசெய்தான். ஒருநாள் சுகுணா தன் கணவனுக்கு நற்புத்திபுகட்டிக்கூறினாள்-"நாதா! தாங்கள் எத்தனை வருத்தினும் அத்தனையும்பொறுத்தேயிருக்கிறேன். தங்களுக்கு நல்லது நினைத்தே சொல்லுகிறேன், தமது சொத்தில் பாதிக்கு மேல் கரைந்துவிட்டது. தாசியின் வலையிற்பட்டு, டம்ப வாழ்க்கையில் சிக்கி இப்படிக்கெடுவது நீதியா? ஊர் முழுதும் தங்களை அவமதிக்கிறதே. நான் சமைக்கமாட்டேனா? தாசி தரும் இன்பம் என்னிடம் இல்லையா? நடப்பதற்குக் கடவுள் கொடுத்த கால்களில்லையா? அயல் நாட்டிற்கு ௬௦௦௦-ரூ. கொட்டி இந்த மோட்டாரை ஏன் வாங்க வேண்டும். ௬௦௦௦ ரூ. இருந்தால் நம் நாட்டில் எத்தனை ஏழைகள் பிழைப்பார்கள். நான் நூற்று அழகாக நெய்த துணியினும், நம்மை அடிமையாக்கிய அயல் நாட்டுத் துணியை ஏன் உடுக்க வேண்டும்? கைகால்களாகிய நமது சேவகர்களைச் சோம்பலாக்க வில்லைச் சேவகர்கள் எதற்கு"? என்று இவ்வாறு நன்மொழிகள் கூறவே ராஜாங்கத்திற்குக் கோபப் பொறி பறந்து "அடி அவஷ்ட தரித்திரமே! உன் அப்பனுடைய புத்தி உனக்கும் வந்துவிட்டது! நீ எனக்கு வாழ்க்கைப்பட லாயக்கில்லை! நாகரீகந்தெரியாத மசாலச்சீ! நீ இவ்வுலகிலிருப்பதே எனக்கு அவமானம் உன்னைக் கொன்றுவிடுகிறேன்" என்று கூச்சலிட்டான். தன் ரகசிய சேவகரை அழைத்தான். சுகுணாவை நடுக்காட்டில் கொண்டுபோய் கொன்றுவிடும்படி கட்டளையிட்டான். சேவகரும் இவளை மோட்டாரில் வைத்து நடுக் காட்டில் கொண்டுபோனார்கள். தாசி வேஷர்க்சுந்தரியின் மனோரதமே இப்படி ராஜாங்கத்தை விபரீதமாக்கியது.

இன்று முதல் ராஜாங்கத்தின் டாம்பீகத்திற்குக் கண்ணில்லை. தன் தாசிக்கே தன் சொத்தில் பாதியை எழுதி வைத்தான். அவளுக்குத் துண்டாக ஒரு பங்களாவும் அமைத்தான். அவளுடைய பங்களாவுக்கும் தன் பங்களாவுக்கும் டெலிபோன் வைத்தான். ஐரோப்பியரால் செய்யப்பட்ட கிராமபோன், மோட்டார் சைகிள், பயாஸ்கோப் முதலிய எல்லாவற்றின் மாதிரியையும் இவன் வீட்டில் காணலாம். காப்பிக்கடைக்கும், பலசரக்குக் கடைக்கும், பெட்ரோலியக்காரனுக்கும், மருந்துக்கடைக்காரனுக்கும்; சேவகருக்கும், பரிசாரகனுக்கும் வெகு நாளாகத் தர வேண்டிய பணம் நிரம்பியிருந்தது. தன் வீட்டின் மேலும் நிலத்தின் மேலும் கடன் நிறைந்தது. இச் சமயத்தில் தன் தாசிக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அதன் புண்ணியாபோஜனத்தன்று எல்லோருக்கும் வேட்டியும், விருந்தும், பணமுமாக நிறைத்தான். பிறகு ஒரு யோசனை செய்தான். தன் வீட்டிற்கும் வேஷாக்சுந்தரி வீட்டிற்கும் மின் விளக்குகள் போடத் தொடங்கினான். ஒரு அங்குலம் செம்புக்கம்பி வாங்கக்கூட இவனிடம் பணம் இல்லை. வேஷாக் சுந்தரியிடம் கேட்டான். அவள் விழித்தாள். டெலிபோன் கம்பியை அன்றோடு கத்தரித்தாள். கடன்காரர் வளைந்தனர். வீடு நிலம் எல்லாம் ஏலமானது. கட்டிய துணியுடன் வேஷாக் சுந்தரி வீட்டிற்கு வந்தான். அவள், "என் வீட்டை மிதிக்காதே உனக்கும் எனக்கும் ஒரு பாத்தியமும் இல்லை" என்றாள் வில்லைச் சேவகரும் பரிசாரகரும் தமக்குச் சம்பளம் தரவில்லை என்ற கோவத்தால் நொய்யப் புடைத்தனர். ராஜாங்கம் கடன்காப்பு மனுமட்டும் கடவுள் கிருபையால் அங்கீகரிக்கப்பட்டது. தன் மோட்டாரில் இன்னொருவன் ஏறியதையும், தன் வீட்டில் மற்றொருவன் இருப்பதையும், தன் தாசி தன் சொத்தைத் தின்று, தன்னையே தூஷித்துப் பிறனிடம் சென்றதையும், தன் டம்பத்தையும், இப்போதிருக்கும் கஞ்சியற்ற நிலைமையையும், தன் குணநிதியான பெண்சாதியைக் கொன்றதையும் நினைத்து, தன்னையே வெறுத்து, வெட்கித் தற்கொலை புரிந்துகொள்ளக் காட்டிற்கு ஓடினான்.

காட்டில் ஒரு சிறு குடிசை தென்பட்டது. அங்கே பசிக்கொடுமையால் சிறிது அன்னம் கேட்டான். ஒரு பெண் அன்னம் கொணர்ந்தாள். அவளைக் கண்டதும் ராஜாங்கம் காலில் விழுந்தான். தன் நிலைமையை முறையிட்டுக் கதறினான். நமது சுகுணாவும் தன் நாதனை அறிந்தாள் உபசரித்தாள். அவளைக் கொலைசெய்ய அனுப்பினவர் பக்கத்தில் நெய்துகொண்டிருந்தனர். அவருடைய மனதை திருப்பி நல்வழிப்படுத்தி, தூய வாழ்க்கையில் கழித்தாள் நமது சுகுணா. பிறகு சுகுணாவும் செல்வத்தின் தீதையும், டம்பமில்லா வாழ்க்கையின் நலத்தையும் உணர்ந்து சுகுணா சொற்படி நூற்று நெய்து, உழுதுண்டு, அங்குள்ள ஏழைகளுக்கும் பிழைப்புண்டாக்கி, தான் புதிய புனிதமான ஜன்மமெடுத்துக் கொண்டதாக எண்ணி வாழ்ந்தான். சாந்தப்ரியனும் தன் பெண்ணைத் தேடி இங்கு வந்தான். எல்லாரும் இன்பமாய் வாழ்ந்தனர்.

இடம்பம் விலக்கு
உடை நூற்றுடுத்து,
நெசவுத் தொழிற்செய்
நாட்டது போற்று
எள்ளுவ தொழிக
காமிற் கிணங்கேல்
பூவையர் வலைப்படேல்
மீத்துச் செலவிடு
வேலைசெய் துண்ணு.

என்ற நீதிகள் இக் கதையினின்று புலப்படுகின்றன.

## பலமதத்திற்கும் ஒரு கடவுள்

காயாபுரி என்ற ஊரில் ஆத்மி என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் எல்லாம் உணர்ந்து, ஒளிகண்டவன். தன் அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பர்ணசாலையில் அமர்ந்து, தனிமையில் இன்பமுற்றான். தன் மந்திரிகளை அடிக்கடி குடிகளுக்குத் தூதனுப்பி, அவர்களை நன்கு ஆண்டான். குடிகளும் அரசன் தூதர் மூலம் இட்டகட்டளையைச் சரிவரச்செய்து களித்தனர். அரசனைப் பல வகையாகப் படம் பிடித்து அடிக்கடி ஜனங்களுக்குக் கொடுத்தனர். இளமையிலும், ராஜ உடையிலும், சாதாரண உடையிலும், சந்யாசி போன்றும், தாடியுடனும், நெற்றியில் நாமம், வீபூதி சந்தனமுத்திரைசாற்றியும், சிலுவை சாற்றியும், தலைமொட்டையாகவும் அரசனைப் படமெழுதி குடிகளிடம் கொடுத்தனர். அரசன் எழுதிய பல நூல்களையும், அவரவர் வருணபேதத்திற்குத்தக்கபடி கொடுத்தனர். தாம் தாம் அடைந்த படமே அரசனின் உருவென்றும், தாம்தாம் அடைந்த புத்தகமே அரசனின் கட்டளையென்றும் எண்ணி, குடிகள் நடந்தனர்.

அவ் ஊரில் ருத்ர கோடி என்ற வீரசைவனும், மணவாளன் என்ற வீர வைஷ்ணவனும் குண்டு ராவ் என்ற

மத்வ மதத்தனும், வீரபுத்தன், ஏசுதாசன் அக்பர் சாஹெப் என்ற அறுவர் இருந்தனர். இவர்கள் தத்தம் மதங்களில் பற்றுடையரேனும், பிறமதகண்டகர். அரசனுடைய உருவையும், மதக் கொள்கையையும் பற்றி இவர்களுள் பேச்சு உண்டாயிற்று. பேச்சு கூச்சலானது. கூச்சல் அடிதடியானது.

நந்திகோடி:—நான் அரசனைக் கண்டிக்கிறேன். இதோ அவருடைய படத்தைப் பாருங்கள். நெற்றியில் நீறும், கழுத்தில் அக்கமும் அணிந்திருக்கிறார். நீறில்லாத நெற்றிபாழ் என்று எழுதியிருக்கிறார். இதோ அவருடைய புத்தகம். அவர் வீரசைவர். தாங்கள் அரசனைப் பார்த்ததும் கேட்டதும் பொய். தங்கள் புத்தகமும் பொய்.

மணவாளன்:—வாயினால் நீறு என்று சொல்லாதேயும். நாமக்கட்டி என்று சொல்லும். இதோ பாரும். அரசன் நாமம் போட்டுக்கொண்டிருக்கிறார். அவருடைய புத்தகத்திலும் திருமண் துளசி முதலிய வைஷ்ணவச் சின்னங்களையே கூறுகிறார். பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாமே என்று பெரியோரும் பாடியிருக்கின்றனர்.

துண்டுராவ்:—கோபிச்சந்தன முத்திரையும் கரிக்கோடுமே நெற்றிக்கழகு. அரசன் இட்டுக்கொண்டிருப்பதைப் பாருங்கள். இதோ அரசன் படம். இதோ அவர் விடுத்த புத்தகங்களெல்லாம் என் மதத்தையே உயர்த்துகின்றன.

தர்மபாலன்:—அரசன் உரு எப்படியாகில் என்ன? பிக்ஷுக்களாகி உலகில் அரசனுடைய மதமானபௌத்த மதத்தைப் பரப்பி நன்மை செய்யுங்கள்.

ஏசுதாசன்:—மறுமுறை இப்படிச் சொல்லற்க! ஏசுநாதருடைய சிலுவையைப் பாருங்கள் பாவிகளே உங்களுக்காகவன்றோ அவர் மரித்தார்! சிலுவை மாட்டி ஞான ஸ்நானம் பெற்று சட்டைகளணிந்து சர்ச்சுக்குச் செல்வோம். இதோ அரசனுடையவேதப் புத்தகத்திலும் இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது.

அக்பர் சாஹெப்:—எல்லாரும் மொட்டையடித்துக் கொள்ளவேண்டும்! மசூதிக்குப்போய் நிமாஸ் செய்யவேண்டும். ஆட்டையும் மாட்டையும் அதம் செய்யவேண்டும் என்று இவ்வாறு அடுக்கத் தொடங்கியதும் சண்டை பெருகிற்று.

ஒவ்வொருவர் பக்கமும் சிற்சிலர் சேரவே ஊர் ஆறாகப் பிரிந்தது. முன்னிருந்த சாந்தமும் அமைதியும்ஓடிப் போயிற்று. சாதுக்களுக்கெல்லாம் தீங்கு நேர்ந்தது. எல்லாரும் அரசனுக்காக முறையிட்டனர். தன் தூதர் மூலம் அரசன் இவற்றைக் கேட்டான். தான் வெளியே வரப்போவதாயும், அதற்கு முன் எல்லாரும் அமைதியாயிருக்கவேண்டுமென்றும் தெரிவித்தான். எல்லாரும் அரசன் வரவை எதிர்பார்த்திருந்தனர். தூதர் முன்னால் வந்து அமைதியை உண்டாக்கினர்.

குறிப்பிட்ட நாளில் அரசன் கொலுமண்டபத்தில் வீற்றிருந்தான். தன் யோக சக்தியால் அரசன்ஒரேஒளி மயமாய்விளங்கினான். ஆறு மதத்தரும் பார்த்தனர். அவர்கள் எதற்காகச் சண்டையிட்டனரோ அக்குறிப்புகளெல்லாம் அரசனிடமில்லை.

'தர்மம்' என்ற வேத புத்தகத்தை ஜனங்களிடம் கொடுத்தார். அதில் ௬ பிரிவினரின் வேதசாரங்களும் இன்னும்பல உண்மைகளும் அடங்கியிருந்தன. ஆறு பிரிவினரும் தமது சண்டையை நினைத்து வெட்கித் தலைகுனிந்தனர்.

அரசன் அன்புடன் குடிகளை நோக்கிச் சொன்னதாவது:— நடமாடும் கோயில்காள்! நீங்கள் இப்போது என்னைப் பற்றி வாதாடியது போலவே பல மதத்தினரும் ஈசனை அறிந்தவர் போல் சண்டை செய்கின்றனர். ஈசன் ஒருவன். அவன் எங்கும் உளன். அவனை நாம் காணாவிடினும் அவனுடைய சக்தியும் ஒளியும் எங்கும் பரவியுள்ளது. புத்தர், அருகர், சங்கரர், உடையவர், மத்வர். அப்பர், பரமஹம்ஸர், காந்தி ஏசுநாதர், முஹம்மதுரசூல், முதலிய தூதர் மூலம் நம்மை ஆளுகிறார். காலத்திற்கேற்ப இவர்கள் உபதேசம் வேறுபடும். வேதமெல்லாம் கடவுள் வாக்கே. இந்து, முஹம்மது, கிறிஸ்தவ, புத்த, ஜைனரின் வேதசாரமும் ஒன்றே. நன்மை செய்வதும், தீமை விலக்கலுமே எல்லா வேதங்களும் கூறுவதும்.

ஒன்றென்றுன்னு, பல மதமொருதே என்ற திருவாக்கோடு அரசன் தன் தவத்தை நோக்கிச் சென்றான். ஊர் அமைதியானது.




# நமது சிற்பச் செல்வம்

—— :[o]: ——

திருவள்ளூர் ஆலயத்தின் தோற்றம்

இவ்வாலயத் தோற்றம் இந்திய சிற்பச் செல்விக்கு ஒரு வெற்றிக் கோபுரமாக இலங்குகிறது. இதன் திரு எழுதவில் அமையாதது! நம்




திருவள்ளூர்க் கோயில்

நாட்டு சிற்ப வேலைகளைக் கண்டாயினும் நமது நாட்டாருக்கு அத் திருக் கலையில் ஒரு ஆர்வம் பிறக்கலாம் எனும் விருப்புடன் இக் கோயிலின் படத்தைக் காட்டியுள்ளோம்.

பெஜவாடா

பெஜவாடா, கிருஷ்ணா நதிக் கரையிலுள்ளது. அது மலைக் காட்சி நிறைந்தது. அதில் மல்லேஸ்வர ஆலயம் மிகவும் பேர் பெற்ற சிவன் கோயில். பெஜவாடாவிலுள்ள இந்திர கீலம் என்னும் மலை மீது தவஞ் செய்து அருச்சுனன் சிவனிடம் பாசுபதாஸ்திரம் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இங்கமர்ந்த சிவபெருமானை அகஸ்தியர் ஜபசே



பெஜவாடா கனகதுர்க்க மலேயிலுள்ள சிற்ப வேலேயுள்ள கம்பம்



னர் என்று அழைத்தார். அருச்சுனன் அப் பெருமானை மல்லேஸ்வரர் என்றபெயரால் வழி பட்டான். ஒரு காலத்தில் இங்கே, மாதலவர்மன் என்ற அரசன் இருந்தான். அவன் மைந்தன் புளி விற்றுப் பிழைக்கும் ஒரு பெண்ணின் மைந்தனைக் கொன்றான். அரசன் தன் மைந்தனுடைய கொலேக் குற்றத்தைக் கண்டு, அவனைத் தூக்குப் போட்டான். சிவபிரான் மன்னன் நீதியை மெச்சி அவ் வேழைப் பெண்ணின் மைந்தனும், இளவரசனும், உயிர்த்து எழும்படி செய்தான், என்று இது போன்ற பல கதைகள் இக் கோயிலின் பெருமையை விளக்குகின்றன.

பெஜவாடா வெங்கியரசரின் தலைநகர். கலி ௩௭௯௪-ல் சின யாத்திரியான ஹூயென்சாங்கன் இங்கு வந்து இதன் சிறப்பைப் புகழ்ந்திருக்கிறான். சோழர்கள் ஒரு முறை இதை 'லென்று கலி ௪௩௰ வரையில் ஆண்டனர். பின்பு இது முகம்மதியர் கையில் பட்டது. இதன் மலேயடிவாரங்களில் கீழே தோண்டினல் பல குகைகள், கோட்டைகள் முதலியவற்றின் அடையாளங்கள் கிடைக்கின்றன.

இங்கே கனகதுர்க்காலயத்தின் தெற்கே, ஒரு உயரமான கற் கம்பம் இருக்கிறது. அதில் தூர்க்கையின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அதன் கீழே சரித்திர சம்பந்தமான பல எழுத்துக்கள் உள்ளன. இவ்வழகிய தூணைப் படத்தில் காட்டியுள்ளோம்.

# வாஸ்து சாஸ்திரம்

—[o]—

(பி. வி. ஜகதீசய்யர் எழுதுவது)

நமது பாரத பூமியில் வீடு முதலிய கட்டடங்களை ஏற்படுத்த சில விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளடங்கிய சாஸ்திரத்திற்கு "வாஸ்து சாஸ்திர" மெனப் பெயர். ஒவ்வொரு கட்டடம் புதிதாய் பூமியில் ஏற்படுத்துவதற்குமுன் அந்த பூமிக்கு அதிபதியாகிய வாஸ்து தேவதையை பூஜித்து விதிப்படி பின்னர் அஸ்திவாரம் முதலியவைகளை உண்டாக்க வேண்டும். இவ்விதம் கட்டடம் துவக்குவதின் முன்னர் அதற்கு சாதகமாகிய செங்கல், ஓடு, மரம், இவைகளை முன்னதாகவே சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

இவ்விதம் சாமான்களைச் சேகரிப்பதற்கு முன்னர் யஜமானனானவன் தனது இஷ்ட தெய்வத்தை வணங்கி குருவை முன்னிட்டுக்கொண்டு முதலில் சாமான்களைச் சேகரிக்க வேண்டும். முதலில் முக்கியமாய் செங்கல்தான் தேட வேண்டும். செங்கல் சூளை போட பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, தை, இந்த ஐந்து மாதங்கள் உத்தம காலம். ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, இந்த மூன்று மாதமும் மத்யம காலம். பாக்கி மூன்று மாதங்களாகிய புரட்டாசி, மார்கழி மாசி, கெட்ட காலமென நிர்ணயித்திருக்கிறார்கள். உத்தம மாதங்களில் கறுப்பாய் மிருதுவாயிருக்கிற களிமண் பூமியில் முதல் நாளிலே ஜலம் பாய்ச்சி ஊறிக் குளிர்ந்திருக்கும் அந்த மண்ணை எடுத்துச் செங்கல் அறுக்க வேண்டும். காலாகாலங்களில் புஷ்பித்துக் காய்க்காமல் மல

டாயிருக்கும் பூமி, உழமண் பூமி, சுடுகாட்டின் சமீபத்திலுள்ள பூமி இவைகளில் மண் எடுத்து செங்கல் சுடலாகாது. இப்படி அறுக்கப்பட்ட செங்கல்களை வெய்யிலில் உலர்த்தி சூளையிலடுக்கி இலுப்பை, வேல், கடம்பை, வேம்பு, புளி முதலிய உறுதியான மரங்களை உபயோகித்து நல்ல சுபதினத்தில் சகுனம். சாதகமாயிருக்கையில் ஆகாயத்தில் மேகங்களின் நிலைமையும், வான சாஸ்திரத்தையும் கவனித்துச் சூளை சுடவேண்டும். நல்ல செங்கலானால் கையால் தட்டிப் பார்க்கும்போது வெங்கலமணி போல் சப்திக்க வேண்டும். கழுதை நிறம், புகைவர்ண முள்ளவைகளை நீக்கவேண்டும்.

மரங்களில் சிலாக்கியமானது அவைகளை வெட்டும்போது கிழக்கு முகமாயும் வடக்கு முகமாயும் தலையை உடையதாக விழ்ந்தவைகளே. தெற்கு, மேற்கு முகமாய் தலையை உடையதாக கீழே விழுந்தவைகளை நீக்கிவிட வேண்டும். ஒரு பாகம் உலர்ந்தும் மற்றொரு பாகம் பச்சையாயுமிருக்கிற மரங்களை நீக்கிவிட வேண்டும். மேலும் தேவாலயங்கள், நதி கடலுடன் சேருமிடத்திலுள்ளது, கிணறு, குளம், சமீபத்திலுள்ளவைகளை உபயோகிக்கலாகாது. இவைகளில் வேரில் அதிக ஜலமிருக்குமாகையால் அவைகள் உறுதி, பலம் இவைகளை உடைத்தாயிராது. அது போலவே முள்ளிருக்கும் மரங்களிலும் முண்டுகளில் பலம் உறுதியாயிராததினால் அவைகளும் கூடாது. கடம்பு, வேம்பு, கடுக்காய், இலுப்பை பூவரசு, தேக்கு, மா, பலா, இவைகள் வீடுகட்ட உபயோகிக்கத் தகுந்தவைகள். ஆல், அரசு, புளி, கொன்றை, பாரிஜாதம் இம் மரங்கள் கூடாதவைகள். மரங்களின் உள் பாகத்தில் மஞ்சள் நிறம் காணப்படுபவைகள் நலம். கறுப்பு சிவப்பு, கலந்த நிறமுடையவைகள் மத்திமம். கறுப்பு வர்ணம் மட்டுமுள்ளது விஷமரமெனப் படும். அது கூடாது. வெண்மை நிறமுடையவைகள் அதிக உறுதி பலம் இவைகளை உடைத்தாயிராது. ஒரே ஜாதி மரங்களைக் கொண்டே வீடு கட்டுவது உத்தமம். பல ஜாதி மரங்களை உபயோகிப்பது கெடுதல். உத்தம ஜாதியில் ஒன்று அல்லது இரண்டு ஜாதிகளைக்கொண்டே வீடு கட்டி முடிக்க வேண்டும். முறுக்கிக்கொண்டிருக்கும் மரம் கோணலாய் வளைந்திருப்பது, பிளவு கண்ட மரம் இவைகளை நீக்க வேண்டும்.

வீட்டின் சமீபத்திலுள்ள பூமியில் வீட்டின் முன்புறத்திலும் மற்றெல்லாத் திக்குகளிலும் பவழமல்லிகை, மகிழமரம், மாதுளை, திப்பிலி, திராக்ஷை, பலவித புஷ்பச் செடிகள், எலுமிச்சை, பாக்கு, பிலா, மல்லிகை, தென்னை, வாழை, இவைகளையும் வைக்கலாம். ஆனால் கிழங்கு உண்டாகக்கூடிய செடி கொடி மரங்களையும் பாலிருக்கும் ஆல் முதலியவைகளையும், பழுக்கும் பழங்களுடையவைகளையும் வீட்டிற்குக் கொஞ்ச தூரத்திலேயே வைக்க வேண்டும். வீட்டின் கிழக்கில் கொஞ்ச தூரத்தில் ஆலும், தெற்கில் அத்தியும், மேற்கில் திப்பிலியும், வடக்கில் இரளியும் வைக்கலாம். திக்குகளைமாற்றி இதர திக்குகளில்அவைகளை வைத்தால் கெடுதி சம்பவிக்கும்.

பூமிப் பரீக்ஷை:— வீடு முதலிய கட்டடங்கள் கட்ட பூமி நல்லது கெட்டதென்பதைத் தெரிந்து கொள்ள ஒரு கோல் நீளமும் ஒரு கோல் அகலமும் முழங்கால் ஆழமும் கொண்ட ஒரு பள்ளத்தை வெட்ட வேண்டும். அவ்விதம் வெட்டப்பட்ட பள்ளத்திலிருந்து எடுத்த மண்ணை மறுபடியும் அதே பள்ளத்தில் நிரப்ப வேண்டும். அப்படிச் செய்யும் போது அந்தப் பள்ளம் நிறைந்தும் மண் அதிகமாய் மீரும்பக்ஷத்தில் அந்த பூமி உத்தமமென்று நிச்சயிக்கலாம். அவ்விதம் வெட்டப்பட்ட பள்ளத்தை நிரப்பும் போது மண் மிஞ்சாவிட்டால் அதாவது அந்தப்



பள்ளம் மாத்திரம் நன்றாய் நிரப்பப்பட்டு கரையில் மிச்சம் மண் கொஞ்சமேனும் மிகுதியாகக் காணாவிட்டால் அவ்விதமானது மத்திமபூமி. அவ்விதம் வெட்டப்பட்ட பள்ளத்தை அம் மண்ணையே கொண்டு நிரப்பும்போது அம் மண்ணானது அந்தப் பள்ளத்திற்கே போதாவிட்டால் அது கெட்டபூமி எனப்படும். கடைசியாகச் சொல்லப்பட்ட கெட்டபூமியாகிய அதம பூமியில் வீடு முதலிய கட்டடங்கள் கட்டக்கூடாது இவ்வித கெட்ட பூமியை வீடு கட்டும் விஷயத்திற்கு லாயக்கில்லாததாகத் தள்ளும்படி செய்ய வேண்டும்.

மற்றொரு விதமாய்ப் பரீக்ஷையும் செய்யலாம் அதாவது வீடு முதலிய கட்டடங்கள் கட்ட வேணுமென்று குறிப்பிட்ட இடத்தில் நெல், பயறு, காராமணி முதலிய தானியங்களை விதைக்க வேணும். அந்த விதைகள் மூன்று ராத்திரிகள் கழிவதற்குள்ளாகவே முளைகளாகத் தோன்றினால் அது உத்தமபூமி. அவ் விரைகள் மூன்று ராத்திரிக்கு மேல் ஐந்து ராத்திரி செல்வதற்குள் முளைகளாகத்தோன்றினால் மத்திமபூமி. இந்த இரண்டுவித பூமியும் வீடு முதலிய கட்டடங்கள் கட்ட லாயக்கானது. இந்த விதைகள் ஏழுராத்திரி சென்றபிறகு முளைத்தால் அது கெட்டபூமி இதே மாதிரி நாணல், தர்ப்பை முதலிய புல்களும் மான் தாராளமாய் ஸஞ்சரிப்பதுமான பூமியும் கெட்டதேயாகும். ஜலம் ருசியாயும் மேல் நீர்ப்பாங்காயுமுள்ளது உத்தம பூமி ஜலம் உப்புவாடையும் புளிப்பாயுமிருக்கிறதோ அது மத்திமம். ஜலம் கீழ்நீர்ப்பாங்காயும் ருசி கெட்டு அதிக உப்பாகக் கஷாயம் போலிருந்தால் அது அதமபூமி. மண் வெண்ணிறமாயிருந்தால் அது உத்தம பூமி. பச்சையும் சிகப்பும் கலந்த வர்ணமாயிருந்தால் மத்திமம் கறுப்பு நிறமாயிருந்தால் கெட்ட பூமி. இவ்வித கறுப்பு நிற மண்ணுள்ள பூமிக்கு 'களிமண் பூமி' என்று பெயர், காய்க்காத மலட்டு மரங்கள் உழமண், சுடுகாடு. மண்டை எலும்பு, உடம்பு எலும்பு, மாடு ஆடு முதலிய மிருகங்களின் எலும்பு பெரிய கற்பாறைகள், புல்லு, சாம்பல், கட்டைக் கரி, உமி, தலைமயிர், முதலிய இப்படிப்பட்ட கெட்ட வஸ்துக்களின் ஸமீபத்திலிருக்கும் பூமியையும், இவைகளில் சிலது உள்ளே புதைந்து மேலே மண் மூடிக்கொண்டிருக்கும் பூமியையும் பாம்புப் புற்றின் ஸமீபத்திலிருக்கும் பூமியையும், கட்டாயம் நீக்கிவிட வேண்டும். இவ்விதமான கெட்ட வஸ்துக்களடங்கிய இடத்தில் கட்டடம் கட்டினால் கட்டடத்திற்கும் யஜமானனுக்கும் கெடுதி ஸம்பவிக்கும். மேலும் கெட்ட மாம்ஸத்தை புசிப்பவர்கள் வாசம் செய்யும் பூமியையும் நீக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட மாதிரியாக உத்தம மத்திம பூமியில் மட்டும் தான் வீடு முதலிய கட்டடங்கள் கட்டலாம். அதுவும் நல்ல சுபதினத்தில் வளர்பிறையில், யஜமானனுக்கு அனுகூலமான ராசியையும் நக்ஷத்திரத்தையும் சகுனத்தையும் பார்த்துக்கொண்டு மனை கோல ஆரம்பம் செய்ய வேண்டும்.

# பாரி வள்ளல்

———[o]———

(திரு. ச. செல்லம் எழுதுவது)

நமது பாரத நாட்டின் வடபாகம் வேற்று நாட்டவர் படையெடுப்புக்குள் பட்டு நிலை குலைந்து அரசரின் வெற்றிக் கொடிகள் அடியோடு சாயுந்தருவாயில் தமிழ் நாடு சிறிதும் தயங்காது சிறப்புற்று நின்றது. சேர சோழ பாண்டிய வெனும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டு மூவேந்தராலும் ஆளப்பட்டு வந்தது. இவர் மூவரும் தம்முள் சண்டை செய்து கொள்வாராயினும் வேற்றரசர் வரின் சேர்ந்து அமர் தொடர்ந்து அவரை வெல்லுவார். ஒவ்வொரு காலத்திலும் இவர்கள் செய்யுஞ் சண்டையில் வெற்றியும் ஒருவரிடமே நில்லாது மூவரிடமும் கலந்து நின்றது. மூவேந்தரிடமும் பல சிற்றரசர்கள் அல்லது குறுநில மன்னர்கள் வாழ்ந்து வந்தனர். இங்ஙனம் வாழும் குறுநில மன்னர்கள் வெற்றி கொண்ட மன்னவனுக்குத் திறை செலுத்தித் தெண்டம் புரிவார்கள். திறை செலுத்தாத சிற்றரசன் அரச பதவியிலிருந்து அகற்றப்பட்டு வேறு ஒருவன் நியமிக்கப்படுவான். மூவேந்தரும் ஒருவருக்கொருவர் ஊக்கமாகச் சண்டை செய்து கொண்டிருக்கும் போது குறுநில மன்னர் திறை செலுத்தமாட்டார். சற்று திறனும் அவரை யணுகும். இங்ஙனம் மூவேந்தருடையவும் ஆளுகைக்கு உள்பட்டு பாண்டியனுக்கே உரித்தான ஒரு நாடு பறநாடு. இப்பறநாடு பல வகை வளனும் நிறைந்த நாடு. மலையைத் தன் மருங்கு கொண்டது. மலையின் மருங்கிலேயே இந் நாடு இருந்து வருகிறது. நாலு பக்கத்திலும் கல்லால் கட்டப்பட்ட பெரிய கோட்டைகளால் காக்கப்படுவது. மூங்கிலரிசி தினை தேன் பலாச்சுளை நீர்ச்சுனை முதலிய வளப் பொருள் நிறைந்த நாடு. சான்றோர் பலர் வாழ்கின்ற முன்னூறு ஊர்களை யுடையது. எவ்விதத்தாலும் எனையோர் அன்பை எதிர் நோக்காது எல்லாச் செல்வமும் குறைவறத் தன்னகங் கொண்டு தன் கொற்றக் குடையின் நிழலிற் குடிகளைக் காத்து வந்ததோர் கோதிலா நாடு.

இத்தகைய நாடு ஒருக்கால் பாரி யெனும் வள்ளல் ஒருவரால் ஆளப்பட்டு வந்தது. எவ்வி கொடையாளியின் குலத் தோன்றல் இவர். தன் குலத்தவருக்கொப்ப கொடையுங் குணனுமமையப் பெற்றவர். பாம்புற்றலைக் கான்பரிதாங் சடும்பாலை வனவழி நடுவண் நின்று தனை அண்மியவருக்குத் தண்ணிழல் கொடுக்கும் தருவை யொத்தவன். சிறியர், பெரியர், அறிஞர், மடவர், ஆடவர், பெண்டிர் என வகைதெரியாதவாறு யாவருக்கும் உதவி புரிந்து வருபவர். குடிகளை இன்புறூட்டுபவன். தமிழ்ப் புலவரைப் போற்றுமியல்பினன். உலகத்தவரில் உயர்ந்தவனெனும் கபிலர் இம்மன்னனுக்கு நல்லமைச்சனைப்போன்று பல உதவிகள் புரிந்து வந்தார். இருவரும் உற்ற உயிர்த்தோழர்கள். இருவரிடமுள்ள நட்பு உலகத்தவர் ஒவ்வொருவரும் கண்டு படிக்குந்தன்மையது. இவர் இருவருடையவும் நட்பை விளக்கப் பாரியின் காலத்திற்குப் பிறகு கபிலர் செய்கையிலிருந்து புலனாகிறது. பாரி விண்ணெய்தியதின் பிறகு அவர் இரண்டு குமாரத்திகளும் கலியாணமாகாது இருந்தார்கள். அவர்களை அரசருக்கே மணம் செய்விக்க வேண்டுமென்று பல அரசரிடமுஞ் சென்று கபிலர் வேண்டினார் ஒருவரும் அதற்கு இசையவில்லை. அதன் பொருட்டு தற்போது மகாத்மா காந்தியடிகளால் பன்முறை கைக்கொள்ளப்பட்ட உண்ணாவிரதம் கைக்கொண்டிருந்தார். ஒரு இடத்திலிருந்து அதை விட்டு நகராது இப்பெண்களை எந்த அரச



னுவது மணஞ்செய்வது வரையில் இதைவிட்டு நகருவதில்லை யென்ற உறுதியோடு இருந்துவிட்டார். தனது உற்ற நண்பரின் மக்கள் இருவரின் பொருட்டு தன் உயிர்போய் விட்டாலும்போருக வென்று உறுதிகொண்ட அப் பெரியாரின் இயல்பை எங்ஙன மோதுவது? உண்ணாது இங்ஙனம் ஒரு இடத்தில் இருந்து தான் கொண்ட கருத்து கைகூடும்வரையிலிருப்பதற்கு வடகிருத்தல் என்று வழங்குவார்கள். இங்ஙனம் இவர் வடகிருத்தலைக் கண்ட ஔவை அப்பெண்களுக்குக் கலியாணஞ் செய்வித்து வைத்தாள்.

ஔவையும் பாரிக்குரிய அன்பர் கூட்டத்தொருவரே. ...“இரவலர் செலினே வரைபுரை களிற்றொடு நன்கலனீயு முரைசால்வண்புகழ்ப் பாரி”. என்று பிராட்டியார் பாரியின் கொடையைச் சிறப்பித்துக் கூறியுளது காண்க. புலவர்களைப் போற்றி எளியவருக்கிந்து குடிகளை யோம்பிப் பாதுகாத்து வந்தான் பாரி.

ஒரு நாள் தன்னிடம் வந்த ஔவையன்னையை வணங்கி வரவேற்று உபசரித்துப் பலநாள் அவரைத் தன் அரமனையில் அமர்த்தி அன்னார் அறவுரைகளைத் தன் செவிச் செல்வத்துள் தலைத்தாய் நினைத்து வந்தான். அன்னை அதிகக் காலமாக ஆங்கமர்ந்திருந்து வேறு இடஞ்செல்ல விரும்பி வள்ளலிடம் வரவு தெரிவித்தாள். உடன் அவர் அதற்கு மறுத்துக் கூற அஞ்சி விடையும் அளித்தார். ஆனால் அன்னையின் பிரிவால் அரசனுக்கு மனவருத்த முண்டாயது. ஆகையால் ஒரு சிறு யோசனை செய்து தான் அன்னையை தூரத்திற்கு அனுப்புகையில் பட்டாடை முதலிய பரிசில்கள் வழங்கியதை ஏவலாளிகளைவிட்டு பறித்து வரச் செய்தால் இன்னும் மீண்டு வந்து இங்கு சில காலம் தாமதிப்பாரென்றுளண்ணினான். உடனே ஏவலாளரை ஏவி அன்னை இடைவழிச் செல்லுகையில் அன்னார் பொருள்கள் யாவுங் கவர்ந்து வரக் கட்டளையிட்டான். அவ்வண்ணம் ஏவலாளர்கள் செய்தனர். அன்னையும் அரசன்மாட்டு அணுகினர். அரசனுடைய பெருவகை கண்டு மகிழ்ந்து இது அரசன் செய்த சூழ்ச்சி யென்று அறிந்து கொண்டார். இது அன்னை ஒருகாலத் தன்னை அன்போடு ஆதரித்துத் தன் ஆடையைக் கொடுத்துதவின ஒரு பெண்ணைப்பார்த்து “பாரி பறித்த பறியும்” பழையனூர்க்காரியன் தீந்தகனைக் கோலுஞ் — சேரமான், வாராயோ வென்றழைத்த வார்த்தையுமிம் மூன்று, நிலச்சிற் றுடைக்கு நேர்.

என்ற பாட்டைக்கூறினர். இதால் ஔவையன்னை பாரிசெய்ததை உணர்ந்து கொண்டாரென்று விளங்குகிறது. அன்னை அகலாதிருக்க அன்பால் அவன் செய்த சூழ்ச்சி தான் என்ன! இதால் அன்பர்களிடம் எவ்வளவு அன்புகொண்டவனிவனென விளங்க வில்லையா?

பாரிவள்ளல் உயிர்களிடம் அதிகம் அன்பு கொண்டவர். எவ்வுயிரும் தம் முயிர்போல் எண்ணு மியல்பினர். ஒரு நாள் அவர் தன் அழகிய பெற்றேர் ஊர்ந்து சென்றார். நடுவனத்தில் நண்ணிய பொழுது ஒரு சிறு இளம் முல்லைக் கொடி கொழுகொம்பின்றி ஆதாரமற்று காற்றால் மோதுண்டு நடுங்கித் தன் இளதளிர்களும் வெண்ணிறப் பூக்களும் மண்ணில் கிடந்து உராய்வதுகண்டு மனம் பதறினான். அந்தோ! ஆதாரவற்று ஆடுகின்றனையே என்று வருந்தி தன் பொற்றேரை அதன் புடை நிறுத்தி மண்ணிலிருந்து குன்றென வெடுத்து தேரின் மீது அக்கொடியை விட்டான். அது காற்றால் மோதாது அசைவின்றி அத்தேரைப் பற்றியது. அதுகண்டு மனம் மகிழ்ந்து சென்றான். ஓரறிவு மாத்திரங் கொண்ட அக்கொடியின்மாட்டுக்கொண்ட அன்பு தான்என்ன! கொடிக்குத்தேரைக் கொடுத்துவிட்டுக் கல்லும் முள்ளும் கவர்ந்த கானகத்தே

வெளியில் நடைபாய்வத்தவரை வள்ளலென்றே வழைக்கவேண்டும். வேறு உரைகளால் எங்ஙனம் எழுதவேண்டிய தெனத்தெரியவில்லை. இச்செய் கையைக்கொண்டேபாரியைப் பாடியபாவலர்பலர். அவர்புகழுரைகள் அடியில் வருமாறு. முல்லைக்குத் தேரீந்தோன், தேருடன் முல்லைக் களித்த... பாரி சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய... கோமான் பாரி. முல்லைக்குத்தேரும்...ஈந்தஇறை வர். இன்னும் பலவாறு புகழப் பட்டவன்.

ஈகையிற் சிறந்தோன், தன் நாட்டிலுள்ள ஊர்களெல்லாம் இரவலர்க்கு ஈந்தவன்.

"முந்நூறூர்த்தே தண்பறம்பு நாடு
முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்"

என்ற கபிலரது வாக்கால் அறியலாம். ஈகையா வண்மையைக் குறித்த சுந்தரரும் "கொடுக்கி லாதானைப் பாரியே என்று கூறினுங்கொடுப்பா ரிலை" என்று கூறியுளார். இதால் பாரியின் வள்ளல் தன்மை தெள்ளிதில் புலனாகிறது. வள்ளல் எழுவருள் ஒருவனாகக் கூறியதிலிருந்தே இவர் பெருமையுங் கொடையும் புலனாகிறது.

இங்ஙனம் செல்வத்தால் வரும் சிறப்பை எல் லாம் தன் அரிய கொடையால் உலகில் உதவி தன் மாண்பை எங்கும் பரவுமாறு செய்த பாரி யினிடம் மூவேந்தரும் அழுக்காறு கொண்டனர். மூவருங்கூடிப் பிறநாட்டைமுற்றுகையிட்டனர். கோட்டைக்குள்ளே வளப் பொருள்கள் அதிக முள்ளதினால் பாரியும் குடிகளும் உள்ளாகவே யிருந்தனர். கபிலர் சில பறவைகளை வளர்த்து அவைகளை வெளியே போகச் செய்து நெல் முத லியவற்றின் கதிர்களைக் கொண்டுவரச்செய்தார். பறவைகளும் தினந் தோறும் காலை வேளையிற் சென்று [illegible]ணிகள் நிறைந்த கதிர்களைக் [illegible]த்துக்கொண்டிருந்தன. அவ்வாறாக குடிகளும மன்னவனும் உண்டிசமைத்து வாழ்ந்து வந்தனர். இங்ஙனம் நெடுநாளாக நடந் தது. கபிலர் வெளிச் சென்று கோட்டையை வளைத்த மூவேந்தரையும் நோக்கி "நீங்கள் இக் கோட்டை கடந்து நாடு பிடிக்க மாட்டீர்கள். உங்களால் அது இயலாது. முந்நூறு ஊர்களை யும் பெற்ற பரிசிலர்களைப்போ பாலப் பாரியினிடம் இரந்தால் ஈவான் என்றுகூறினர். இதைக்கேட்டு அவர் வெல்லுவது அரிதென்று கருதி திரும்பிச் சென்றனர். "எந்துகோட்டி யானை வேந்தரோட் டியகபிலம் பரிப் புரவிக் கை வண்பாரி" என்றபாட் டால் இது விளங்கும்.

பின்பு இவனை வெல்லுவதற்கு வழி யென்ன வென்று யோசனை செய்து கபிபாடி இரக்க வேண்டுமென்று எண்ணி சில ஏவலாளரைக் கொண்டு அவன் நாட்டைக் கைப்பற்றினு ரெனத் தெரியவருகிறது.

கொடையின் பின் மாண்புதான் எவ்வளவு! தன் நாடு முழுவதும் பரிசிலருக்கு அளித்த பாரி யின் கொடையின் சிறப்பைக் கொண்டாட வல் லவர் யாவர்? தன் நாட்டைப் பிறர் கொண்ட போது சில நாள் செல்லுவதின் முன்பே கால கதியானு ரெனத்தெரிகிறது. இவர் தான் நாடு இழந்து பிடிவாத வாழ்க்கையை மேற் கொள்ள வேண்டாமென்று எண்ணினர்போலும். தன் தந்தையின் காலத்திற்குப் பிறகு புலமை நிறைந்த அவர்புத்திரியார்:—

"அற்றைத் திங்க ளவ் வெண் ணிலவி
னெந்தையு முடையே மெங் குன்றும் பிறர்கொளா
ரிற்றைத் திங்க ளிவ்வெண்ணிலவின
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார் யா மெந்தையு மிலமே"

என்று பாடிய பாட்டால் புலனாகிறது. இத் தகைய பெரிய கொடையாளிகளும் ஆயமன முடையவரும் வாழ்ந்ததினாலேயே நம் தமிழ்



நாடு அழியாப்புகழை மேற்கொண்டிருக்கிறது. இதை உணர்ந்த பாண்டி மண்டலச் சதகமுடை யாரும்.

"வரிசைத் தமிழ்ப்புனே பாரியும் பாண்டி மண் டலமே" என்று கூறியுள்ளார். இவர் காலம் கபிலரது காலமாகிய கடைச் சங்கக் காலமெனத் தெள்ளிதின்புலனாகிறது. பண்டையத் தமிழ ரின் பண்பும் பயனும் பகருமியல்பினதல்ல. அதில் பாரி வள்ளல் பெயர்பெற்ற பெரியர். இன்னர் கொடையைக் கொண்ட தமிழ்த்தாய் இப்போது யாருடைய கொடையை ஏற்கிறாள்?

# பத்திராதிபர் குறிப்புகள்

———:[o]:———

கவியரசர் ரவீந்திர தாகூரின் போல்பூர் ஆசிரமம்

நமது தமிழ்க் குருகுலத்தினின்று போல்பூர் விஸ்வபாரதிக்குச் சென்ற மாணவன் அதைப் பற்றி அடியில் வருமாறு எழுதுகிறான்:—

"இந்தஆஸ்ரமம் கல்கத்தாவிலிருந்து ௯௩ மைல் தூரமுள்ள போல்பூர் என்ற ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரமிருக்கிறது. இதற்கு அகன்ற இடம் உள்ளது. இது சாந்திநிகேத னம், விஸ்வபாரதி, ஸ்ரீநிகேதனம் என்ற மூன்று பாகமாகப் பிரிந்திருக்கிறது. சாந்திநிகேதனத் திலுள்ள மாணவர்கள் ௫-முதல் ௧௬-வயதுவரையி லுள்ளவர்கள். அங்கு பத்து வகுப்புகளுள் ளன. நமது குருகுலத்தில் நடக்கும் ஒழுங்கு முறைப்படியே சாந்திநிகேதனத்திலும் நடந்து வருகிறது. ஆசிரியர் எப்போதும் மாணவருடன் இருக்கின்றனர். காலை ௫-மணிக்கு எழுந்து ௬-மணிக்குள்ளாக எல்லோரும் ஸ்நானம் ஜெபம் முதலியவை செய்துவிடுகிறார்கள். ஜெபமும், பிரார்த்தனையும் தனியாகவேசெய்யப்படுகின்றன. காலைஉணவு ௭-மணிக்குக் கொடுக்கப்படு கிறது. காலைஉணவு திதிப்பான பக்ஷணங்கள் பின் ௧௧-மணி வரையும் பாடங்கள் நடக்கின்றன. ௧௧இ-மணிக்கு மத்தியான ஆகாரம். எல்லாரும் ஒரே மாதிரியாக இருந்தேதான் உண்கிறார்கள். மாலை இரண்டு மணி முதல் ௫-மணி வரையில் வகுப்பு நடக்கிறது. பின் கால்பந்து, மட்டைப் பந்து, ஹாகி முதலிய விளையாட்டுகள் நடை பெறும். மாலை எழு மணிக்கு பிரார்த்தனை நடக் கிறது. எல்லாருடைய அறைகளிலும் மின்சார விளக்குகள் உள்ளன, இரவில் ௯இ-மணிக்கு விளக்குகள் நிறுத்தப்படுகின்றன. இதுதான் சாந்திநிகேதன நடவடிக்கைகள்.

## விஸ்வ பாரதி

விஸ்வ பாரதியில் கல்லூரி மாணவர்களே பயில் கின்றனர். இதிலுள்ள மாணவர்கள், பர்மா, அஸாம், குஜாராத், நெல்லூர், திருவனந்தபுரம், முதலிய பல விடங்களினின்றுவந்திருக்கின்றனர். இவர்கள் நாலைந்து மாணவர்கள் ஒவ்வோர் அறை யிலுள்ளனர். இவர்களுக்குக் கடினமான சட் டங்கரொன்றுமில்லை. இவர்கள் சுயேச்சையாய்

நடக்கும்படி விடப்பட்டிருக்கிறார்கள். இங்கே பந்தி போஜனம் கட்டாயமில்லை, விருப்பமுள்ளவர்கள் சாப்பிடலாம். ஆனல் அனைவரும் ஒன்ருக இருந்துதான் உண்கிறார்கள். இவர்களுடைய ஆசிரியர்கள் பெரிய அறிவாளிகள். மாணவர்களும் அப்படியே சொல்லுகிறார்கள். மாதம் க-க்கு பள்ளிக்கூடச் சம்பளமும் சாப்பாட்டுச் செலவும் சேர்ந்து ரூ. உ௫. ஆகிறது. மீதிச் செலவுகள் தனியாகவே செய்துகொள்ளப் படவேண்டும். இலக்கியக் கல்விக்கு ஏற்ற இடம் இதுவே யாகும். சுதந்திரமாக வாழவேண்டும் என்ற விருப்பமுள்ளவர்களுக்கும் இதுவே தக்க இடம். விஸ்வபாரதியில் படிப்போர்கள் கல்வியறிவில் மிகவும் தேர்ச்சியடைவார்களென்று சந்தேகமின்றிக் கூறலாம். பெரிய பெரிய புத்தகசாலைகள் உலகிலுள்ள அபூர்வமான புத்தகங்களைத் தாங்கி நிற்கின்றன. கல்வியறிவாளிகளும் கற்கக் காலமும் வேண்டிய சௌகரியங்களும் அளவற்றிருக்கும் இந்த இடம் என் மனதைக் கவர்ந்தது. பணச்செலவு அதிகமாயினும் விஸ்வபாரதியில் வாழ்வதால் நமக்குண்டாகும் நலம் அளவற்றது.

### ஸ்ரீநிகேதனம்

இது சாந்திநிகேதனத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ளது. இங்கே கைத்தொழில்கள் நடை பெறுகின்றன. பயிர்த்தொழில், தோல் பதனிடல், நெசவு, பிராணிகள்வளர்த்தல் முதலிய தொழில்கள் நடக்கின்றன. இங்கே க௫—மாணவர்களே படிக்கின்றனர். இவ்விடத்திலும் சமையல் சாப்பாட்டு வசதிகள் உள்ளன. காலை க௦—மணிக்கும் மாலை எ௰—மணிக்கும் சாப்பாடு. சாப்பாட்டுச்செலவு ௬உ௲. மற்றவை தனிச் செலவு. நான் இங்கே விவசாயம் கற்கிறேன். நெசவும் கற்கவேண்டுமென்றும் எண்ணுகிறேன். அனைவருக்கும் காய்கறிகளே உணவு. மாமிச பக்ஷணம் இல்லை. மிளகு சிறிது சேர்க்கிறார்கள். புளிக்குப்பதிலாக எலுமிச்சம் பழம் சேர்க்கிறார்கள். இஷ்டமுள்ளவர்கள் சுயம் பாகம் செய்து கொள்ளலாம். அதற்குக் கொஞ்சம் பணம் அதிகமாய்த் தரவேண்டும்.

### தேர்தல் திருக்கூத்து.

தெருத் தெருவாகக் கூட்டங்கள்! எதிர்க் கூட்டங்கள்! தற்புகழ்ச்சிகள்! தன் கட்சிப் புகழ்ச்சிகள்! எதிர்க்கட்சியை இகழ்தல்! இங்குமங்கும் இடைவிடாது ஆகாயவாணம் போன்று மோட்டார்கள் "போர் போர்" என்று கூவிச் செல்லுகின்றன! தொண்டர்கள்கொடிபிடித்துத் தங்கள் தங்கள் கட்சித் தலைவருக்கு "ஓட்டுக் கொடுக்க" மக்களை வீடுவீடாகத் தெருத் தெருவாக வளைத்துவற்புறுத்தும் காட்சியேகாட்சி! சுவர்களிலெங்கும் பெரிய எழுத்துக்களில் தமதுகட்சிக்கு ஓட்டுச் செய்யும்படி அறிக்கைகள் ஒட்டப்பட்டுள்ளன. இம் மட்டோ! பல காரங்கள்கொடுத்து ஓட்டர்களைத் தம்வயப்படுத்தும் கூத்துகள் பல. செலவோ ஆயிரக்கணக்கில்! பலனோ எனக்கொன்றும் சொல்லத் தோன்றவில்லை. இவ்வாண்டில் தலத்தாபனத் தேர்தலின் ஆரவாரம் சொல்லி முடியாது. சுயாராஜ்யக் கட்சியாளருக்கும்நியாயக் கட்சியாளருக்கும்போட்டாபோட்டி! காரியம் வாய்ப்பேச்சைக் கடந்துவிட்டது. அடிதடி மண்டைக் காயத்தோடு தேர்தல்நடக்கிறது. இவ்வளவு மண்டை உடைத்துக்கொண்டு, தலத்தாபனங்களைக் கைப்பற்றினவர்கள் என்ன செய்யப்போகிறார்கள். நம் ஏழை நாட்டின் பிணியை எத்துணை தணிக்கப் போகிறார்கள் என்று எதிர் காலத்தையே கேட்போம். இவர்கள் செய்யும் அமளியில் இராட்டினத்தின் இனிய ஓசை அடங்கிவருகிறது. கதர் உற்பத்திக்கு ஆதரவு குறைந்தே வருகிறது.



"பொதுக் கூட்டங்களுக்கும் சட்ட சபைக்கும் போகும்போது கதர் உடுத்தி மற்றைப்போதெல்லாம் தங்கள் சௌகரியப்படியே இருங்கள்! சுயாராஜ்யக்கட்சியைமட்டும் உடனே சேருங்கள், என்று ஒருதலைவர், பெரியவர் ஒரு வாக்காளருக்குச்சொன்னதைக் கேட்ட என் மனம் பகீர் என்றது. 'கதர் கதர் கதரே சுதந்திர வழி' என்று இத்துணை நாளாகக் கதறும் மஹாத்மாவின் உள்ளம் இதைக் கேட்டால் எப்படிப் பதறுமோ!

நாடெங்கும் இராட்டினத்தைப் பரப்பவும், கட்குடியை ஒழிக்கவும், நாட்டுக் கல்வியைப் பரவச் செய்யவும், பஞ்சாயத்துகள் ஏற்படுத்தவும், மிதமிஞ்சிய அரசாட்சிச் செலவைக் குறைக்கவும் ஏழைகளின் வறுமையையும்மடமையையும் நாட்டின் அடிமைத்தனத்தையும் நீக்கவும் சட்ட சபையையும் தலஸ்தாபனங்களையும் கைப்பற்றின அன்பர் எவ்வாறு முயன்று எவ்வளவு வெற்றி பெறுகிறார்களென்று பார்ப்போம்.

### யார் உரியவர்?

யாரைச் சட்டசபைக்குத் தேர்ந்தனுப்புகிறோமோ அவர்கள் பான்மைக்குத் தக்கபடியே நாட்டின் அரசாங்கம் நடக்கும். குடிகளின் மனதையே தங்கள் மனதாய்க்கொண்டவர்கள் பொறுப்பிலேயே நமது தலஸ்தாபனங்களை வைத்தல் வேண்டும். நாம் தேர்ந்தெடுத்து அனுப்பும் நல்லோரே நாட்டின் முன்னேற்றத்திற்கும் பின்னீட்டத்திற்கும் பொறுப்பாளிகளாவார்கள். ஆதலின் தேர்தற் சீட்டில் சிறந்தவர்களின் பெயரையே குறித்தல் நமது கடனாகும். பேச்சுக்கும், உருவிற்கும், செல்வத்திற்கும், மோட்டாருக்கும் அவர்கள் தரும் பலகாரங்களுக்கும் நமது பிறப்புரிமையை விற்றுவிட்டால் நம்மால் நாட்டிற்கே தீங்கு விளையும். அறநினைவும் ஆற்றலும், அறிவென்னும் அழகும், சொல்வன்மையும்,கொண்ட சிறப்புடையவர்களையே தேர்தல் திறமென நமது பொது ஜனங்கள் அறிய வேண்டும். பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் மதிப்பிற்கும் ஆசைப்பட்டவர்களை எவ்வளவு பிரசங்கம் செய்தாலும் தேர்தல் கூடாது. தன்னயம்விடுத்து மக்கள் மகிழும் விதிகளை மனச்சான்றுக்கு மாறின்றி போற்றி நிற்கவும், நாட்டின் கல்வி, தொழில், சுகம்,காப்பு முதலியவற்றிற்கேற்றபடி வரிப்பணத்தைச் செலவிடச் செய்தலும்வேண்டும். நாளெல்லாம்உழைக்கும் தொழிலாளிகளின் நன்மைக்குப் பாடு படவேண்டும். ஏழைகளுக்கு நீதி எளிதில் கிடைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். நாட்டின் பஞ்சமும், மடமையும் அகலும் வழிகளைப் பேண வேண்டும். இத்தகைய ஆற்றலுடையோரே தேர்தற்சீட்டில்குறித்தற்குரியர். அவர்கள் எந்தக் கட்சியினரேனும் வகுப்பினரேனும் சாதியினரேனும் சரி. அவர்கள் மனதில் தூய்மையும் அன்பும் துலங்க வேண்டும். வாக்காளர்களே, பேச்சுகளிலும் தீனியிலும் மயங்காது உண்மையாகப் பாடுபடுபவர்களையே எப்போதும் ஆதரித்து ஓட்டுக் கொடுங்கள்!

### இதுதான் முன்னேற்றத்திற்கு வழி

நம் நாட்டின் சுதந்திரம் ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள தீவிலில்லை, சட்டசபையிலுமில்லை. அது நம்மிடத்திலேயே உள்ளது. நம் நாட்டின் வறுமையும் மடமையும் நீங்கினுல்தான் நமது சுயாராஜ்யம் நிலை பெறும். நாட்டில் நல்ல கல்வியும் தொழிலும்பரவுதலே சுயாராஜ்யத்தின் அறிகுறி. பாரத சமூகத்திற்குத் திண்ணிய மனம் இருந்தால் கல்வியும் தொழிலும் கடிதிற் பரவுமென்பதில் தடையில்லை. பொது ஜனக் கல்வியே நமக்கு இன்றியமையாதது. அதற்கு நமது திண்ணைப்பள்ளிக்கூடங்களைத் தெருத்தெருவாக ஒழுங்கான முறையில் நடத்தும்படி செய்வதே முறை. பள்ளிக்கூட உபாத்தியாயர்

அத் தெருவோரால் ஆதரிக்கப்படவேண்டும். எழுதப் படிக்கத் தமிழறிவும், எண்சுவடி மட்டில் கணக்கும், நம் நாட்டு வீரர் கதையும், பூகோளமும், சுகாதாரவிதிகளும், நூற்றலும், அழகான பாட்டுக்களும் இப்பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படும். ஒரு தாலூகாவிற்கு ஒரு ஆசிரமமாயினும் ஏற்படல் வேண்டும். அதில் உபாத்தியாயர்களும் தொண்டர்களும் தயார் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் நிலையாகத் திறமையுள்ள ஒரு தொண்டர் ஏற்பட்டு அங்கே தான்புதிதாகத் தொண்டர்களைப் பழக்க வேண்டும். கிராமப் பள்ளிக்கூடம் வைத்தலும், நூற்றல், நெய்தல், முதலியவற்றைப் பரப்புதலும், குடிமறுத்தலுக்கு உழைத்தலும், வீரர் சரிதைகளை நாடகங்களாக நடத்தி ஜனங்களுக்கு ஊக்கம் பிறக்கும்படி செய்தலும், சிறு வைத்திய சாலைகள் வைத்தலும், சிறு மடங்கள் கட்டி அவற்றில் அறவழிகளை உபதேசிப்பதும், தோட்டங்கள் போடுவதும் தொண்டர்களின் வேலையாக இருக்கவேண்டும். இப்படி இந்தியாவிலுள்ள எ-லக்ஷம் கிராமங்களில் எ-லக்ஷம் தொண்டர் உண்மையாக வேலை செய்தால் குடிகளின் மடமை நீங்கும். கிராமங்கள் விழித்துக்கொண்டால் நாடு விழித்து அறிவு ததும்பி அடிமைத்தனம் அகலும். கிராமத்தில், பஞ்சடித்தல், நூற்றல், நெய்தல், பயிர்த்தொழில் தச்சுவேலை, இரும்பு வேலை, முதலிய சிறு தொழில்கள் விருத்தியாகவும், கிராமத்திற்கு வேண்டிய பொருள்கள் முடிந்தமட்டும் அந்தக் கிராமத்திலேயே உண்டாகும்படியும் ஏற்பாடு செய்தல் வேண்டும். இத்தகைய வேலைதான் இந்தியாவை எழுப்பக்கூடியது. அதைச் செய்ய நாட்டன்பர் முந்துவாராக. மற்ற வேலைகளெல்லாம் பின்பு. இவ்வேலையை நாமே அன்னியர் உதவியின்றிச் செய்யலாம். தைரியமும், உறுதியும், சுறுசுறுப்பும், அன்புமேவேண்டியது. பொதுஜனங்களை எழுப்புவதே நாட்டை முன்னேற்றும் வழி.

சீனக்கிளர்ச்சி

சமீபத்தில் ஒரு ஜப்பானியத்தொழிற் சாலையில் உழைத்து வந்த சீனர் வேலை நிறுத்தம் செய்தனர். ஜப்பானிய முதலாளிகள் வேலைக்காரரைத் துப்பாக்கியால் பயமுறுத்தினர் ஒரு சீனனைக் கொன்றனர். சீனத்து மாணவர் எல்லாம் அந்தச் சூடு தம்மேற் பட்டதுபோல் எழுந்து கிளர்ந்தனர்! சீனத்தொழிலாளிகளை அன்னியரிடம் வேலை செய்வதினின்று நிறுத்த உழைத்தனர். எங்கும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. மனித உரிமைகளைப்பற்றிய துண்டுப் பிரசுரங்களைப் பரப்பித் தேசீய கீதங்கள் பாடி ஆடம்பரத்துடன் மாணவர் கிளர்ச்சி செய்தனர். இதை ஆங்கிலப்போர் வீரர் தடுத்தனர். பல மாணவரை ஆங்கிலேயர் கைது செய்தனர். மாணவர் சிறைக்கோட்டத்தைச் சூழ்ந்துகொண்டு தங்கள் சகோதரர்விடுதலையை வேண்டினர். இப் பெருங்கூட்டத்தைக் கண்டு வெகுண்டு ஆங்கிலேயர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் சில சுதேசிகள் இறந்தனர். பலர் காயமுண்டனர். இந்தச்சம்பவத்தால் சீனத்தின் மாணவர் கிளர்ச்சி காட்டுத் தீ போல் பரவியது. கலகக்கார மாணவரால் ஆலைகள் கொள்ளையடிக்கப்பட்டன. தெருக்களில் அயலார் அச்சமின்றி நடக்க முடியாதாயிற்று. காண்டனும், ஷாங்கேயும் அதருதலப்பட்டன. மின்சார வண்டிகளில் கல்லெறியப்பட்டது. ஒன்றிரண்டு அன்னியரும் கொலைபுண்டனர். ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் வெகுண்டு தம் நாட்டிலுள்ள சீனரை வெளியேற்றுகின்றனர். சீனத்தில் வேலை நிறுத்த ஊக்கமும், அதிகரிக்கிறது. வல்லரசரின்கப்பல்களும், படைகளும், சீனாவை வாள் விழியால் குறி வைத்துக்கொண்டிருக்கின்றன. உருசியப்பொது உடைமையாளர் சீனாவிற்கு உதவி புரிகின்றனர். ஜெர்மனியரும் அவர்களுக்கு அநுகூலமாக இருப்பதாகத் தெரிய வருகிறது





ஆங்கிலேயர் பசிபிக் சமுத்திரத்தில் பெரும் போரை எதிர் பார்த்து சிங்கப்பூரில் கப்பற்படை சேர்க்கின்றனர். சீனர், ஸன்யாத்சன்னின் கட்சியை ஆதரித்து அன்னார் மகனை மந்திரியாக் கொத்தாமும் அன்னியருடன் போர் செய்யக் கத்தி நீட்டிக்கொண்டிருக்கின்றனர். ஈசனே சீனத்தினின்று எவ்வளவு இரத்த வெள்ளம் பசிபிக் சமுத்திரத்தில் பாயுமோ அறியேன். இன்னும் போரும் படையும், அஹங்காரமும், பேராசையும் ஒடுங்கவில்லையா!

சுதந்திர தாகங்கொண்ட சீனர் 'உலக ஜனங்களுக்கு' ஒரு வேண்டுகோள் அனுப்பியுள்ளார்கள். மஹாத்மாவிற்கும் அதன் படிவம் ஒன்றை அனுப்பியுள்ளார்கள். அதில் ௪0கோடி சீனத்தர், அன்னியரால் நாளுக்கு நாள் எப்படி அடிமைப்படுத்தப் படுகிறார்க ளென்று காட்டியுள்ளனர். அதில் கூறியுள்ளதன் குறிப்புகளாவன:—

"அபினி யுத்த காலத்திலிருந்து சீனாவில்இருள் மூட ஆரம்பித்தது. நாங்கள் இப்போது பொருள் நிலையிலும் அரசியல் முறையிலும் முன்னேற்றமடையாமல் தடை செய்துவரும் உடன்படிக்கைகளை எங்கள் மீது வல்லரசுகள் சுமத்திவிட்டன. எங்கள் தேசம் பலங்குன்றி யிருக்கும்போது ஏற்பட்ட இந்த உடன்படிக்கைளால் அந்நிய நாடுகளின் வல்லரசுகள் சீனாவின் முக்கிய ஸ்தலங்களை வசப்படுத்திக் கொண்டன. சீனாவிற்குத் தன் ஏற்றுமதி இறக்குமதிகளை நிர்வாகம் செய்ய முடியவில்லை. கடற்சுங்க விஷயத்தில் சீனர்களுக்கு உரிமை யில்லை. உங்கள் தேச ஜனங்கள் அந்நிய நாட்டினரது உத்தரவின்றி தேசத்திற்குள் செல்லவும் வெளியே போகவும் முடியாமலிருந்தால், எவ்வாறு நீங்கள் கருதுவீர்கள்? எப்போது நினைத்தாலும் எங்களை வீட்டிற்குள்ளே அடைத்துப் போடலாம்; அல்லது வெளியிலே நிறுத்தி விடலாம். ஏனெனில் எங்கள் வாயிலுக்குத் திறவுகோல் அந்நியர் வசமே இருக்கின்றது.

சர்வதேச சம்பந்தத்தில்சமத்துவம், அரசுரிமைகளில் சுதந்திரம் முதலியவைகள் சீனாவிற்கு வேண்டும். அந்நிய தேச இலாகாவில் உரிமையும் பொருள் நிலையபிவிர்த்தியில் சுதந்திரமும் வேண்டும். கடற்சுங்கச் சுதந்திரம் மீண்டும் கொடுக்கப்பட வேண்டும். எங்கள் தேசப் பொருள் நிலை அபிவிர்த்திக்கு ஏற்ப கொள்கைகளை அநுபவத்திற்கு அப்போதுதான் கொண்டுவரமுடியும். எங்கள் வீட்டுத் திறவுகோலை எங்கள் வசம் விட வேண்டும். சமத்துவமில்லாத உடன்படிக்கைகளை ரத்துச் செய்துவிட்டால் எங்கள் தீமைகளுக்குக் கொழுமை கொடுத்து வளர்க்கும் வேர்கள் வெட்டப்பட்டதாகும். அந்நியருக்குச் சொந்தமான அரசுரிமைகள் நீக்கப்பட்டால் வல்லரசுகள் சீனாவில் போட்டியிடாமலிருக்கும். உலக ஜனங்களே உங்களுக்கு விஷயங்களை எவரும் மாறுபாடாகத் தெரிவிக்காமல் காத்துக்கொள்ளுங்கள். அந்நியர்களுக்கு விரோதமாகத் துன்பத்தை எழுப்ப விரும்பும் கிளர்ச்சிக்காரர்களால் சீனா தேசம் நடத்தப்படவில்லை. ஜீவகாருண்யமே இல்லாத அந்நியர் தம் லாபத்திற்காகவே இழைத்துவரும் தீமைகளை நன்றாக உணர்ந்து சீனா விழித் தெழுகின்றது. இந்தத் தீமைகளையும் அநீதிகளையும் இனி அது சகித்திருக்க முடியவில்லை. நீங்கள் நியாய வழியில் நடக்க வேண்டுமாறு சீனா கேட்டுக்கொள்கிறது. எங்கள் தேசத்து மிக முக்கிய நகரங்களில் சமீபத்தில் ஏற்பட்ட கொலைகள் போன்ற செய்கைகள் எங்களையெல்லாம் அழித்துவிடாது. சீக்கிரம் விடுதலை பெற வேண்டும் என்று சீனாவிற்கு ஊக்கம் அதிகமாகும்."

பாரதநாடும் சுதந்திர தாகமெடுத்து விடுதலைக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிற தென்றும் சீனர் தங்கள் கிளர்ச்சியில் சாத்வீக தர்மத்தையே கைக்கொள்ள வேண்டுமென்றும் மஹாத்மா சீன

நருக்குத்தன் அனுதாபனிடை அனுப்பியுள்ளார். சினவில் வேலை நிறுத்தமும், நாட்டன்பும், போர் பயிற்சியும், கலகமும் அதிகரித்தே வருகின்றன. தன் துறைமுகங் கதவுகளை எல்லாருக்கும் திறந்து வைத்ததினுல்தான் சீனத்தின் சாவி அன்னியரிடம் அகப்படலாயிற்று. அதன் துறைமுகங்களும் சுங்கம் விதிக்கும் உரிமையும், பிறரிடமுள்ளன. சீனம் சீனருக்கே சிறையானது வருந்தத் தக்கது. உலகின் வல்லரசுகள் சீனத்தை சீனர் நாடென்றும், அதில் அவர்கள் ஆதிக்கமே துலங்க வேண்டும் என்றும், எண்ணி அதற்குத் தக்கதைச் செய்தல் வேண்டும்.



ஸ்ரீ சுப்பிரமண்ய சிவம்.

## சிவத்தின் ஆவி

ஸ்ரீ சுப்ரமண்ய சிவத்தின் யாக்கையே அழிந்தது. ஆவி இன்னும் பாரதநாட்டைச் சுற்றிக் கொண்டேதான் உள்ளது. நாட்டிற்காகவே உண்டு, நாட்டிற்காகவே உயிர்த்து, நாட்டிற்காகவே உழைத்து, நாட்டன்னையையே தன் ஆவியுருக வழிபட்ட நமது சிவம் தோன்றா மேனியுடன் இன்னும் நாட்டின் சேவையையே செய்து கொண்டிருக்கிறார் என்பதில் ஐயமில்லை. மதக் கொள்கைகளில் விவேகாநந்தரையும், நாட்டன்பில் திலகரைப் போலவும் பொலிந்த வீரனை சிவத்தின் நாட்டுழியத்தையும், தன் கொடிய குஷ்ட நோயையும் தாங்கி நாட்டிற்காக அவர் உழன்ற துயரையும் யாரே அளவிட முடியும்! தன் உடற் பிணியினும் நாட்டின் அடிமைப் பிணியைத் தீர்ப்பதிலேயே கருத்துக்கொண்டு எவ்விதத்திலும் நாடு விடுதலையடைய அரும்பாடு பட்ட இப் பெரியோன் நம்மை விட்டகன்றது தமிழ் நாட்டின் துர்ப்பாக்கியமே!

மதுரை ஜில்லா வத்தலக்குண்டில் வளர்ந்து கொட்டாரக்கரை சதானந்த யோகிகளின் சீடராகித் துறவு நிலையிற் பழகி வரும்போது, தான் கேட்ட ஒரு தேசியப் பிரசங்கத்தால் தூண்டப்



பட்டு தேசப் பணியில் இறங்கினூர். அன்று பற்றிய நாட்டன்பு மென்மேலும் அவர் மனதில் கொளுந்துவிட் டெரிந்துகொண்டே இருந்தது. அவ்வனல் பல வாலிபரின் மனத்தையும் பற்றியது. 'வந்தேமாதரம்' என்ற கூச்சலும் குற்றமெனத் தண்டிக்கப்படும் அந் நாட்களில் நமது சிவம் தனது வீர மொழிகளால் நாட்டைத் தட்டியெழுப்பினூர். ஐந்து ஆண்டுகள் தனது நாட்டிற்காகக் கடுஞ்சிறைப்பட்டார். சிறையில் தொழு நோயால் தொடரப் பெற்று வருந்தினரேனும் நாட்டை மறந்திலர். 'ஞானபானு' என்ற பத்திரிகையின்மூலம் உலகிற்கு வீர உணவீந்தார். தன் இறுதி காலத்தில் தேசபக்த சமாஜமொன்று திரட்டி கிராமங்கள் தோறும் நாட்டன்பைப் பரப்பித் தமிழ்நாடெங்கும் சுற்றியதை நேயர்கள் அறிவார்கள். தேசம், சுதந்திரம், சுயராஜ்யம் என்பதே அவர் மொழிகளின் மணம்.

பாரத ஜாதி ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று அவர் தீவிரமாக முயன்றார். தனக்குப் பிறகு தன் கொள்கைகளைப் பின்பற்றும் சீடர்களை சிவம் தயாரித்தது போற்றத் தக்கது. தேசபக்த சமாஜத்தார் இப்போது பல அரிய வீர நாடகங்களால் தமிழ் நாட்டை எழுப்பி வருகின்றனர். நமது சிவம் எழுதிய சச்சிதாநந்த சிவம், இராமகிருஷ்ணர் விவேகாநந்தர், முதலியோருடைய திருவாக்குகளின் மொழிபெயர்ப்புக்கள் முதலியவை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் கற்றறியக் கூடியவை.

தன்சகோதரரான ஸ்ரீ வ. வெ. ஸு. ஐயர், திலகர், தாஸ், கிருஷ்ணசாமி சர்மா முதலியோருடன் நமது சிவாவின் ஆவியும் சேர்ந்து மேனின்று நம் விடுதலைக்குக் கைக்கொடுக்குமாக!

## அமேரிக்காவின் வியாபார முதன்மை

யாங்கி சகோதரன் வியாபாரவுலகில் ஜான்புல் சகோதரனுக்கு மேல் போய்விட்டான். உலகில் நூற்றில் ஆறு பங்கு நிலமும் நூற்றில் ஏழுபங்கு ஜனத் தொகையுமுள்ள அமெரிக்கா உலக வியாபாரத்தின் பாதிக்குமேல் தன் கைவசப்படுத்திக் கொண்டது. அமெரிக்காவில் உற்பத்தியாகும் சாமான்கள் உலகின்மொத்தம்பொருளாதாரத்தில் இத்தனை பங்கென்று அடியில் காட்டப்பட்டுள்ளது.

இரும்பு நூற்றுக்கு ௬௬. செம்பு நூ. ௫௧. மண்ணெண்ணெய் நூ.௬௨. நிலக்கரி நூ.௫௯. மரம் நூ. ௫௨. கப்பல்சாமான் நூ. ௬௫. கந்தகம் நூ. ௮0. ஒளிக்கட்டி நூ. ௪௨. மைகா நூ. ௬௯. ஈயம் நூ. ௬௨. துத்தநாதம் நூ. ௬௪. பருத்தி நூ. ௫௫. சுயசலன வண்டிகள் நூ. அ௫.

மோட்டார் முதலிய சுயசலனிகளும், சலனப் படக் கண்ணாடிகளும், பலவகையான பொறிகளும், மின்சாரச் சாமான்களும் அமெரிக்காவினின்றே ஏராளமாக ஏற்றுமதியாகின்றன. மகா யுத்தத்திற்கு முன் அமெரிக்காவுக்கு ௬ பில்லியன் இருந்தது இப்போதோ ௯0 பில்லியன் ரூபாய் லேவாதேவி யாகிறது. ௬0 பில்லியன் வரையில் அதன் கொடுக்கல் வாங்கல் கணக்குகள் காட்டுகின்றன. இந்தியாவுடன் அமெரிக்கா சுமார் ௧௨௭,௬௯௬,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்கிறது. இந்தியாவின் இறக்குமதிப் பொருள்களில் நூற்றுக்கு ஐம்பது செய்பொருள்கள். நூற்றுக்கு ௯0 பருத்திச் சாமான்கள், ௧0 பொறிகள், ௧0 இரும்புச் சாமான், ௬ சர்க்கரை, ௫ ஆவி வண்டிக்கு வேண்டிய சாமான்கள், சாயம், மண்ணெண்ணெய், கண்ணாடி, சுயசலன வண்டிகள், முதலியன மற்றவை. அமெரிக்கர்களின் வியாபாரம் வலுத்துக் கர்ச்சிக்கிறது. பாரத நாடே எத்தனை நாள் நீ பதுங்கியிருப்பாய்! நமது நாட்டின் செல்வம் நம் நாட்டிலேயே சுற்றி நம் நிதி பெருக சுதேசித்தொழில்களை ஆதரித்து ஊக்குவித்தல்நமது கடன்!

# மதிப்புரைகள்

(மருந்தில்லா வைத்தியம் ஆசிரியர்: கி. லக்ஷ்மண சர்மா பி.ஏ. பி.எல். 'இயற்கை இல்லம்' புதுச்சேரி. விலை: துணி பைண்டு செய்தது ரூ. ௨—௪—0. சாதாரண பைண்டு ௧—௧௨—0.)

இயற்கையன்னையினும் நமக்கு அன்பான மருந்துவன் ஒருவரும் இல்லை. நீரையும் காற்றையும், வெய்யிலையும், மண்ணையும், சரியானபடி மனிதன் உபயோகப்படுத்தி, அறநெறி பேற்றி மிதமுடன் இயற்கையுணவை யுண்டால், நோயற்ற வாழ்வு வாழலாம். இயற்கை வைத்திய முறை இப்போது பலருக்கு நம்பிக்கையை ஊட்டிவருகிறது. மருந்துகளின் மாயையினின்று வரவர உலகின் மனது இயற்கை வழிக்குத் திரும்பிவருகிறது. இந்த நல்லுணர்ச்சிக்கு ஸ்ரீமான் கி. ல. சர்மா அவர்களின் புத்தகங்களே தமிழ் நாட்டில் பெருங் கருவிகளாக உள்ளன. நீண்ட கால அனுபோகத்தின் பேரிலும், அரிய தியாகத்தின் பேரிலும், இயற்கை வைத்திய முறையை நன்கு கற்று, அறிந்து, நின்று, தான் கண்ட இன்பத்தைப் பிறரும் அடையுமாறு, சீரிய எண்ணத்துடன், Primer of water Healing, Non-violence in healing, Dietic Righteousness, Spinal bath, Fever, ஜல வைத்தியம், பூரண சக்தி, உபவாஸ தத்துவம், மருந்தில்லா வைத்தியம் முதலிய பல நூல்களை வெளியிட்டுள்ளார். இதற்காகத் தமிழ் நாடு இப் பெரியாருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. மருந்தில்லா வைத்யம் என்ற அருமையான நூல் உண்மையான சுகவாழ்வை விரும்பும் ஒவ்வொருவரும் அவசியம் ஆழ்ந்து கற்கவேண்டிய நூல். அதில் இயற்கையுணவு விதிகளும், நோயின் உற்பத்தி, சிகிச்சை, உபவாசம், சூரிய வைத்தியம், ஜலசிகிச்சை முதலிய அரிய விஷயங்கள் அடங்கியுள்ளன. இப் புத்தகம் தமிழ் நாட்டிற்கு ஒரு சிறந்த நன்கொடையாகும். இதன் உபயோகத்தைப் படித்தோர் நன்கு அறிவர். எங்கள் குருகுலத்தில் ஸ்ரீ சர்மா அவர்களின் இயற்கைமுறையையே கையாண்டு நலம்பெற்று வருகிறோம். இப் புத்தகம் ஒவ்வொரு தமிழ் இல்லத்திலும் இருக்கவேண்டுமென்பதே நமது எண்ணம்.

நாகரீகப் போர்

இது கலைவல்லுனரான தூத்துக்குடி ஸ்ரீமான் பாஸ்கர நாராயணய்யா பி.ஏ.பி.எல். எல்.டி, அவர்களால் எழுதப்பட்ட கற்பனை. தற்கால நடைமுறைகளுக்குக் கண்ணாடி பிடித்து நிற்கும் இச் சிறந்தக் கற்பனை படிப்பதற்கு இனிமையானது. இதன் இரண்டாம் பாகம் அச்சிலுள்ளது.

கலியுக கஜேந்திர மோக்ஷம்

இதுவும் ஷை ஆசிரியரால் எழுதப்பட்ட மனங்கவரத் தக்க ஒரு சிறந்த கற்பனை. விலை அணா ௨.

(தட்சண சரித்திர வீரர். இது ஸ்ரீமான் அ. மாதவய்யரால் எழுதப்பட்ட சரித்திர நூல். கிடைக்குமிடம்: 'பஞ்சாமிருதம்' காரியாலயம் மைலாப்பூர் சென்னை. விலை அணா ௧0.)

தளவாய் அரியநாத முதலியார், மைசூர் ஹைதரா லி கான்சாயபு கம்மந்தான் முதலிய தென்னாட்டு வீரர்களின் சரிதைகளைத் தெளிய நடையில் அழகு பெற இந் நூல் விரிக்கிறது. இப் புத்தகம் தமிழ் நாட்டு வாலிபருக்கு வீர உணர்ச்சியைத் தரக்கூடியது.

(பாரததேசீய கீதங்கள், காந்தி சரித்திரக் கும்மி ஸ்ரீமதி எஸ். ரங்கம்மாளால் பாடப்பெற்றன. கிடைக்குமிடம்: நெ ௯௪, டாணாத்தெரு புரசை பாகம் சென்னை. விலை ௪ அணா. ௯-அணா.)

ஷை இரண்டு நூல்களும் வரப் பெற்றோம். இப் பெண்மணியின் இனிய கீர்த்தனங்களை மகிழ்வுடன் வரவேற்கிறோம். இப் புத்தகம் இந் நூலாசிரியரிடம் கிடைக்கும்.


# THE KURAL

OR

**The Maxims of Tiruvalluvar**

Translated by

*Acharya V. V. Subrahmanya Aiyar.*

*Second Edition, thoroughly revised and enriched with a large number of footnotes and otherwise.*

—(o)—

The difficulty of unravelling the sense out of the cryptic though magnificent commentary of Parimelalakar can be conquered by the use of this translation which is the only one that preserves all the force and sublimity of the original.

This edition is beautifully bound and is ready for sale.

Price Rs. 5. V.P.P. charges 8 as.

**For copies apply to:—**

The Bala Bharati Bookshop,

**Sheramadevi.**

# “பாலபாரதி”

## தமிழ் நாட்டில் முதன்மைபெற்ற உயர்தர மாத சஞ்சிகை

கீதை, உபநிடதம், கொரான், விவில், முதலிய வேத சாரங்களும், தீர்க்கதரிசிகள், பெரியகவிகள், வீரர்கள் அறிவாளிகளின் சரித்திரங்களும் கொள்கைகளும், கல்விமுறைகளும் இயற்கை வைத்தியம் தமிழாராய்ச்சி சமூக சீர்திருத்த விஷயங்கள் கலை விளக்கங்கள் முதலியவற்றையும் இன்னும் பல அறிதற்கரிய விஷயங்களையும் அடக்கிப் பொலிந்து சிறந்த எழிலுடன் விளங்கும். உங்கள் பெயர்களை உடனே சந்தாதாராகப் பதிவுசெய்துகொண்டு சந்தாத்தொகையை அனுப்புங்கள்.

விளம்பரம் செய்வோருக்கு இதனினும் லாபமான பத்திரிகை வேறில்லை.



ஓம்

# தமிழ்க் குருகுல வித்யாலயம்

## சேரமாதேவி

ஆங்கிலத்தில் பி.ஏ. வகுப்புக்குச் சரியான கல்வி வரையில் கொடுக்கப்படுகிறது. தமிழில் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் வரையில் கற்கலாம். ஐரோப்பிய முறைகளில் இலக்கிய ஆராய்ச்சிகள் செய்யவும் மாணவர் பயிற்றப் படுகின்றனர்.

கணிதம், தேச சரித்திரம், சம்ஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாடங்கள் செவ்வையாக நடக்கின்றன.

நெசவுத் தொழில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பயிர்த் தொழில் செய்யவும் வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது.

பிள்ளைகளை இலக்கியக் கல்வியும் ஓர் தொழிலும் அப்பியசிக்கச் செய்ய விரும்பும் தந்தையர் உடனே முந்துக!

விவரங்களுக்குக் காரியஸ்தனுக்கு எழுதித் தெரிந்து கொள்ளுக.

ஆசாரியன்.



சேரமாதேவி “குருகுல” அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, சுத்தானந்த பாரதியாரால் பிரசுரிக்கப்பெற்றது.